# ஈழநாடு

Eelanadu

வார மலர்









Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 28.12.2025 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 362 | பக்கங்கள் : 16


# பிள்ளையார் ஆலய வளாகத்தில் விகாரை அமைக்கும் தொல்பொருள் திணைக்களம்!

### வவுனியா சமணங்குள பிரதேச மக்கள் விசனம்



வவுனியா, டிசெ. 28

வவுனியா சமணங்குளம் கல்லுமலை பிள்ளையார் ஆலய வளாகத்தில் விகாரை அமைக்கும் பணியில் தொல்பொருள் திணைக்களம் ஈடுபட்டு வருகின்றமை தொடர்பில் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அண்மைக் காலமாக குறித்த பகுதியில் உள்ள பிள்ளையார் ஆலயத்தின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவிடாது தடுத்து வந்த தொல்பொருள் திணைக்களம், சில ஆண்டுகளுக்கு முன் தொல்பொருள் பிரதேசம் எனப் பெயர் பலகை இட்டிருந்ததோடு அங்கு உள்ள பிள்ளையார் ஆலயத்தில் பூசை வழிபாடுகளுக்கு மாத்திரமே அனுமதி வழங்கி இருந்தது.

அங்கிருந்த பிள்ளையார் ஆலயத்தின் கட்டுமான பணிகளையும் இடைநிறுத்தி இருந்ததோடு எவ்வித புனரமைப்புப் பணிகளையும் மேற்கொள்ளவிடாது

15

## டக்ளஸ் தடுப்புக்காவலில்!



கொழும்பு, டிசெ. 28

கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை 72 மணித்தியாலங்களுக்கு தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் விசாரணை செய்வதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

குற்றப்புலானய்வு திணைக்களத்துக்கு, நீதிமன்றம் நேற்று இந்த அனுமதியை வழங்கியுள்ளது.

திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் சந்தேகநபர் ஒருவரால் வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய, கம்பஹா - வெலிவேரிய பகுதியில் கடந்த 2019 ஆம் ஆண்டு துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டது.

குறித்த துப்பாக்கி, டக்ளஸ் தேவானந்தாவுக்கு, இலங்கை இராணுவத்தினால் சட்ட ரீதியாக வழங்கப்பட்டது என ஆரம்ப கட்ட விசாரணையில் கண்டறியப்பட்ட நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக, டக்ளஸ் தேவானந்தா குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு நேற்று முன் தினம் முற்பகல் அழைக்கப்பட்டிருந்தார். இதன்போது, குறித்த துப்பாக்கி

15

## சேத மதிப்பீடுகளை கருத்தில் கொள்ளாது பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு ரூ. 5 இலட்சம்!

### அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 28

பேரிடரால் வீடுகளுக்கு ஏற்கட்ட சேதங்கள் குறித்து தனிப்பட்ட சேத மதிப்பீடுகளை மேற்கொள்ளாமல் பாதிக்கப்பட்ட ஒரு வீட்டுக்கு தலா ஐந்து இலட்சம் ரூபா வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

டித்வா சூறாவளி காரணமாக முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ சேதமடைந்த வீடுகளின் குடும்பங்களுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் முறையான சுற்றறிக்கைகள் வெளியிடப்படுவதற்கு முன்பே அரசாங்கம் ஆரம்பகட்ட நிதி உதவியை வழங்கியிருந்தது.

120,000 ஆயிரம் வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக

15

## இலங்கையில் 527,000 சிறுவருக்கு மனிதாபிமான உதவிகள் தேவை!

### ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 28

இலங்கையில் ஏற்பட்ட அதிதீவிர வானிலையால் பாதிக்கப்பட்டுள்ள 527,000 சிறுவர்களுக்கு மனிதாபிமான உதவி தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1.2 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் தேவைப்படுகின்றன. பசி மற்றும் உணவுப் பாதுகாப்பின்மை என்பன அதிகரித்து வருகின்றன. சுமார் மூன்று வீடுகளில் ஒரு வீடு உணவுப் பாதுகாப் பின்மையை

15

## அவசரகாலச் சட்டத்தை அரசு தவறாக பயன்படுத்தவில்லை!

### அமைச்சர் கே.டி.லால்காந்த

கொழும்பு, டிசெ. 28

தேசிய மக்கள் சக்தி ஆட்சியின்கீழ் அவசரகால சட்டம் தவறான நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படவில்லை என்று அமைச்சர் கே.டி. லால்காந்த தெரிவித்தார்.

அத்துடன், ஊடகங்களை அடக்கி ஆளவும் முற்படவில்லை எனவும் கண்டியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் கூறினார்.

“பேரிடருக்கு பின்னரே நாட்டில் அவசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டது. மக்களுக்கு

15

## போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட பெண் உட்பட 4 பேர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 28

நீண்ட காலமாக போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட பெண் உட்பட நால்வர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

பெண் ஒருவர் ஐஸ் போதைப்பொருளுடனும் இரண்டு பேர் போதை மாத்திரைகளுடனும் ஒருவர் மாவா போதைப்பொருளுடனும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணைகளை நடத்தும் யாழ்ப்பாணம் பொலிஸார், விசாரணைகளுக்கு பின்னர் அவர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

## கல்வி, விளையாட்டு மூலம் வடக்கில் போதைப்பொருளை ஒழிக்கமுடியும்!

### கூறுகிறார் அமைச்சர் சந்திரசேகர்



யாழ்ப்பாணம், டிசெ. 28

கல்வியும்,விளையாட்டும் சிறந்து விளங்கும் சமூகத்தில் போதைப்பொருள் உள்ளிட்ட சட்டவிரோத விடயங்களுக்கு இடமிருக்காது. எனவே, கல்வி மற்றும் விளையாட்டு மூலம் போதைப்பொருளை இல்லா தொழிக்கலாம்

15

## உள்ளூராட்சி பட்ஜெட் தோல்வியால் அரசாங்கத்துக்கு பாதிப்பு கிடையாது

### பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க

கொழும்பு, டிசெ. 28

உள்ளூராட்சி மன்றங்களின் வரவு-செலவுத் திட்டங்கள் தோற்கடிக்கப்படுவதன் மூலம் அரசாங்கத்துக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தோற்கடிக்கப்படுவது திசைகாட்டியின் வரவு-செலவுத் திட்டம் அல்ல, மக்களின் வரவு செலவுத் திட்டமே என அவர் குறிப்பிட்டார்.

தோற்கடிக்கப்பட்ட கொழும்பு மாநகர

15

## மத்தள விமான நிலையம் தனியார் நிறுவனங்களுக்கு!

கொழும்பு, டிசெ. 28

மத்தள சர்வதேச விமான நிலையத்தை அரச - தனியார் பங்களிப்பு வேலைத்திட்டத்தின் கீழ் தனியார் நிறுவனங்களுக்கு வழங்குவதற்கான முன்மொழிவு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகத் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் கலாநிதி அநுர கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மத்தள விமான நிலையத்தைத் தனியார்மயமாக்கும் நடவடிக்கை

15

## 5,000 இற்கும் அதிக வீடுகள் அதி அபாய வலயங்களில்!

கொழும்பு, டிசெ. 28

இதுவரை மேற்கொண்ட ஆய்வுகளின்படி, ஐந்து ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகள் அதிக அபாய வலயங்களில் அமைந்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனப் பணிப்பாளர் நாயகம் ஆசிறி கருணாவர்த்தன தெரிவித்தார்.

இதன்படி, அந்த மக்களுக்காக பாதுகாப்பான இடங்களில் புதிய வீடுகளை அமைத்துக் கொடுக்க எதிர்பார்க்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், எதிர்வரும் வாரத்தில் இந்தத் தரவுகள் மேலும் அதிகரிக்கக்கூடும் எனவும்

15




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தீவை ஊடறுத்து செல்லும் செயல்திறன் மிக்க கிழக்கு காற்றலை

## வடக்கு, கிழக்கில் மழை அதிகரிக்கும் மக்கள் அச்சமடைய தேவையில்லை

கொழும்பு, டிசெ. 28

நாளை 29 ஆம் திகதி முதல் செயல்திறன் மிக்க கிழக்கு காற்றலை இலங்கைத் தீவை ஊடறுத்து செயல்படுவதனால் குறிப்பாக வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் மழையுடனான வானிலை அதிகரித்து காணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து பொதுமக்கள் அச்சமடைய தேவையில்லை என்றும் வளிமண்டலவியல் திணைக்களத்தால் விடுக்கப்படுகின்ற எதிர்கால எதிர்வு கூறல்களை கவனத்தில் கொண்டு செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் அத்துடன் பொலநறுவை, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சிறிதளவு மழை பெய்யக்கூடும்.

இரத்தினபுரி, காலி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களின் சில இடங்களில் பிற்பகல் இரண்டு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும்.

மத்திய மலைப் பிராந்தியத்தின் கிழக்கு சரிவுகளிலும் வட மாகாணத்திலும் அத்துடன் அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் மணித்தியாலத்துக்கு சுமார் 40 கிலோ மீற்றர் வேகத்தில் அடிக்கடி ஓரளவு பலத்த காற்று வீசக் கூடும்.

மத்திய, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் காலி, மாத்தறை, மற்றும் பதுளை மாவட்டங்களின் சில இடங்களிலும் அதிகாலை வேளையில் பனி மூட்டம் காணப்படும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொது மக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

காங்கேசன்துறை தொடக்கம் திருகோணமலை ஊடாக பொத்துவில் வரையான கடல் பிராந்தியங்களில் சிறிதளவு மழை பெய்யக்கூடும்.


களுத்துறை தொடக்கம் காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடல் பிராந்தியங்களின் சில இடங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 30 - 40 கிலோ மீற்றர் வேகத்தில் வட கிழக்குத் திசையிலிருந்து காற்று வீசும்.

கொழும்பு தொடக்கம் புத்தளம், காங்கேசன்துறை ஊடாக முல்லைத்தீவு வரையான அத்துடன் மாத்தறை தொடக்கம் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பால் உள்ள கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 45 - 50 கிலோ மீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக் கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இக் கடல் பிராந்தியங்கள் ஓரளவு கொந்தளிப்பாக காணப்படும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஊடக நிறுவனங்களை அச்சுறுத்துவது அரசாங்கத்துக்கு பாரிய பேரழிவாகும்

## வஜிர அபேவர்த்தன எச்சரிக்கை



கொழும்பு, டிசெ. 28

ஊடகங்களை பயமுறுத்துவதோ அல்லது அவற்றுக்கு எதிராக செயல்படுவதோ முறையல்ல. ஊடக நிறுவனங்களை அச்சுறுத்துவதாக இருந்தால் அது பாரிய பேரழிவாகும். அதுதொடர்பில் ஐக்கிய தேசிய கட்சி என்றவகையில் எமது முழுமையான எதிர்ப்பை தெரிவிக்கிறோமென முன்னாள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஊடகங்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது என ஊடகங்கள் ஊடாகவே பல்வேறு பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாவதற்கு முன்னர் எதிர்க்கட்சியில் இருக்கும் காலத்தில் இந்த நாட்டில் ஊடகங்களுக்கு தேவையான சுதந்திரத்தை பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான சட்ட திட்டங்களை அனுமதித்துக்கொள்ள ஒத்துழைப்பு வழங்கியிருந்தார்.

அதேபோன்று தகவல் அறியும் உரிமை சட்டத்தையும் அமைத்தார். அந்த சட்டம் மூலம் ஊடக நிறுவனங்கள், ஊடகவியலாளர்கள் பாதுகாக்கப்படுகின்றனர். ஏனெனில், பொது மக்களுக்கு தகவல் அறியும் உரிமை இருக்கும் என்றால், தகவல்களை அறிந்துகொள்வதற்காக இலங்கை மக்களை அறிவுறுத்துவது ஊடகங்களின் கடமையாகும்.- என்றார். (எ)

# கட்சி உறுப்புரிமையிலிருந்து முன்னாள் தவிசாளர் நீக்கம்

புதுக்குடியிருப்பு, டிசெ. 28

கரைத்துறைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சி. லோகேஸ்வரன், இலங்கை தமிழ் அரசுக்கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

கரைத்துறைப்பற்று பிரதேச சபை, தமிழ் அரசுக்கட்சி வசமானதை அடுத்து அதன் தவிசாளராக நியமிக்கப்பட்ட லோகேஸ்வரன், அண்மையில் வேறொரு ஒழுங்கீன பிரச்னை காரணமாக அப்பதவியிலிருந்து இராஜினாமா செய்தார்.

இதனையடுத்து நடைபெற்ற தவிசாளருக்கான தெரிவில் கரைத்துறைப்பற்று பிரதேச சபை தேசிய மக்கள் சக்தி வசமானது. இந்த நிலையில், 2026 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தை கூட்டிணைந்து தோற்கடிக்க வேண்டும் என தமிழ் அரசுக் கட்சியும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியும் தீர்மானித்திருந்தன. இதற்குரிய அறிவுறுத்தல்கள் தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள் 7 பேருக்கும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி உறுப்பினர்கள் 4 பேருக்கும் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தன.

இவ்வாறானதொரு பின்னணியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கரைத்துறைப் பற்று பிரதேச சபைக்கான வரவு- செலவுத்திட்டம் மீதான வாக்கெடுப்பின்போது தமிழ் அரசுக்கட்சியின் உறுப்பினரான சி. லோகேஸ்வரன் அதற்கு ஆதரவாக வாக்களித்தமையால் ஒரு வாக்கு வித்தியாசத்தில் வரவு- செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டது.

இதனால், அவரை தமது கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்குவதாக அறிவித்திருக்கும் தமிழ் அரசுக்கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம். ஏ. சுமந்திரன், இதன் விளைவாக வறிதாக்கப்படும் உறுப்பினர் வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கரைத்துறைப்பற்று பிரதேச சபைக்கான தெரிவத்தாட்சி அலுவலரிடம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(எ)

# மழையால் உடைப்பெடுத்த நொச்சிக்குளம் புனரமைப்பு

## ஜெகதீஸ்வரன் எம்.பி. தகவல்

வவுனியா, டிசெ. 28

புயல் மற்றும் மழை காரணமாக உடைப்பெடுத்த வவுனியா, கோதாண்டார் நொச்சிக்குளம் புனரமைக்கப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

இந்த குளத்தின் புனரமைப்பு தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் ஏற்பட்ட புயல் மற்றும் மழை காரணமாக வவுனியாவில் பல குளங்கள் உடைப்பெடுத்தன. மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர், மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோரின் ஆலோசனைக்கு அமைய இராணுவத்தினர் மற்றும் கமக்கார அமைப்பினர் இணைந்து பல குளங்களின் உடைப்பு பகுதியை சீர் செய்தனர்.

இருப்பினும், வவுனியா- கோதாண்டர் நொச்சிக்குளம் பெரியளவில் உடைப்பெடுத்திருந்தது. இதனால், அதன் கீழ் உள்ள விவசாய நடவடிக்கைகளும் எதிர்காலத்தில் பாதிப்படையக் கூடிய நிலை ஏற்பட்டிருந்தது. சிறுபோகம் செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டிருந்தது. இந்த நிலையில், விவசாய, கால்நடை பிரதி அமைச்சர் அரவிந்த செனவிரட்ன மற்றும் நான் குறித்த பகுதிக்கு சென்று நிலைமைகளை அவதானித்ததுடன், அப் பகுதி விவசாயிகளுடனும் கலந்துரையாடியிருந்தோம்.

குளத்தின் அணைக்கட்டை தற்காலிகமாக உடனடியாக திருத்தி தந்தால் இருக்கும் நீரை பாதுகாத்து சிறுபோகம் செயய முடியும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். அவர்களின் கோரிக்கைக்கு அமைவாக இராணுவத்தினரின் பங்களிப்புடன், கமக்கார அமைப்பினர், கிராம மக்கள், தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் இணைந்து குறித்த குளத்தை புனரமைத்துள்ளனர். ஏனைய குளங்களையும் புனரமைக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், மன்னார் மடு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பல குளங்களும் இராணுவத்தினரின் உதவியுடன் துரிதமாக புனரமைப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-10)

# வாக்காளர் கணக்கெடுப்பு பெப்ரவரி முதல் ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 27

2026 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் கணக்கெடுப்பு பணிகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

முந்தைய ஆண்டுகளை போலன்றி, கணக்கெடுப்பு உத்தியோகத்தர்கள் இம்முறை ஒவ்வொரு வீட்டுக்கும் வருகை தரமாட்டார்கள் என அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிதாக சேர்க்கப்பட்ட மற்றும் நீக்கப்பட்ட பெயர்களை கொண்ட பட்டியல்களை புதுப்பிப்பது தொடர்பான வீடுகளுக்கு மட்டுமே அவர்கள் வருகை தருவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சி பிரதிநிதிகள் இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்படும் முறையை அவதானிக்க வாய்ப்பு வழங்கப்படும்.

அத்துடன், தகவல்கள் சேகரிக்கப்பட்ட பின்னர் ஒருவர் வாக்காளராகப் பதிவு செய்யத் தகுதியானவரா? இல்லையா? என்பது குறித்த உத்தியோகத்தர்களின் பரிந்துரைகளையும் அவர்கள் கண்காணிக்க முடியும்.

ஏதேனும் முறைகேடுகள் அவதானிக்கப்பட்டால், பிரதிநிதிகள் அது குறித்து கணக்கெடுப்பு உத்தியோகத்தருக்கு எழுத்துபூர்வமாக அறிவிக்க முடியும் என்றும் அத்தகைய அறிவிப்பின் பிரதியொன்றை சம்பந்தப்பட்ட மாவட்ட பிரதி அல்லது உதவித் தேர்தல் ஆணையாளருக்கு உடனடியாக அனுப்ப முடியும் என்றும் பவ்ரல் அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# நாட்டில் 1,200இற்கும் அதிக பகுதிகள் மண்சரிவு அபாய பகுதிகளாக பதிவு

## தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம்

கொழும்பு, டிசெ. 28

டித்வா சூறாவளியை தொடர்ந்து நாடு முழுவதும் 1,200இற்கும் மேற்பட்ட பகுதிகள் மண்சரிவு அபாய பகுதிகளாக பதிவாகியுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கண்டி மாவட்டத்தில் மட்டும் 363 பகுதிகள் மண்சரிவு ஏற்படும் பகுதிகளாக பதிவாகியுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவன பணிப்பாளர் ஆ. கருணாவர்தன தெரிவித்தார். மக்கள் வாழும் குடியிருப்பு பகுதிகளில் எதிர்காலத்தில் மண் அரிப்பைத் தடுக்க, பயிர் செய்கைகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதா கவும் அவர் தெரிவித்தார். (எ)

# மோ. சைக்கிள் மோதி முதியவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 28

துவிச்சக்கர வண்டியில் சென்ற முதியவர் ஒருவர் மோட்டார் சைக்கிள் மோதியதில் உயிரிழந்தார். சாவகச்சேரியைச் சேர்ந்த அருணாச்சலம் சத்தியசீலன் (வயது -75) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

கனகம் புளியடி வீதியிலிருந்து, புத்தூர் சந்தியூடாக நேற்று முன்தினம் துவிச்சக்கர வண்டியில் கோவிலுக்கு சென்றுகொண்டிருந்தார். மெய்கண்டான் சந்தியை அண்மித்த பகுதியில் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் அவர்மீது மோதி விபத்து சம்பவித்தது.

மயக்கமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

அவரை பரிசோதித்த மருத்துவர்கள், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவித்தனர்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். விபத்து குறித்து சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளும் தரப்பினர் மீதான குற்றச்சாட்டுகள் கிடப்பில்

## பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 28

அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுகளை பொலிஸார் கிடப்பில் போட்டுள்ளனர். முறைப்பாடளிப்பவர்களை குற்றவாளிகளாக்கும் போக்கு தற்போது காணப்படுகிறது. பொலிஸ்மா அதிபர், தேசிய மக்கள் சக்தியின் பொலிஸ்மா அதிபராக செயல்படுகிறார் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஊடக பேச்சாளர் சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தனியார் தொலைக்காட்சி தொடர்பில் அரசாங்கம் வெறுப்புடன் செயல்படுவது வன்மையாக கண்டிக்கத்தக்கது. சகல ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

சிறந்த அரசியல் கலாசாரத்தையும், நிர்வாக கட்டமைப்பையும் உருவாக்குவதாக குறிப்பிட்டுக் கொண்டே தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தது. அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒருவருட காலத்தில் ஆளும் தரப்பின் ஊழல்- மோசடிகள் வெளியாகின. ஒருசிலர் இல்லாத கலாநிதி பட்டங்கள் இருப்பதாகவும் குறிப்பிட்டார்கள்.

அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படும் போது பொலிஸார் எந்தவித விசாரணைகளையும் முன்னெடுக்கவில்லை.- என்றார். (எ)

# "கடந்த ஆட்சியாளர்கள் போன்றே அநுரகுமாரவும் செயல்படுகிறார்"

கொழும்பு, டிசெ. 28

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவும் கடந்த ஆட்சியாளர்களை போன்றே செயல்படுகிறார் என்று முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் இன்று பொய்யாக்கப்பட்டுள்ளன. வழங்கிய எந்த வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை. ஆளும் தரப்பின் உறுப்பினர்களும் பைத்தியம் போன்று செயல்படுகிறார்கள்.

தனது பல்கலைக்கழக நண்பனை கணக்காய்வாளர் நாயகமாக நியமிப்பதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கணக்காய்வாளர் நாயகம் பதவியை வெற்றிடமாக்கியுள்ளார்.

உயர் பதவிகளுக்கான அனுமதி வழங்கும் அரசமைப்பு பேரவையின் மூன்று சிவில் பிரஜைகளும் சிறந்தவர்கள், அவர்கள் அரசாங்கத்தின் நோக்கத்துக்கும் அழுத்தங்களுக்கும் அடிபணியாமல் செயல்பட்டார்கள். ஜனாதிபதியின் பரிந்துரைகள் தவறாயின் அதனை தற்துணிபுடன் இவர்கள் எதிர்த்தார்கள்.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதியின் முன்மொழிவு



இரத்து செய்யப்பட்டது.

அரசமைப்பின் சிவில் பிரஜைகளின் பதவி காலம் எதிர்வரும் மாதம் இரண்டாம் திகதியுடன் முடிவடைந்ததன் பின்னர் கணக்காய்வாளர் நாயகத்துக்கான நியமனம் வழங்கப்படும். ஜனாதிபதி அநுரகுமார திஜநாயக்கவும் கடந்த ஆட்சியாளர்களை போன்றே செயல்படுகிறார்.- என்றார். (எ)

# ஊடகவியலாளருக்கு உயிர் அச்சுறுத்தல்! சிவில் செயல்பாட்டாளர்கள் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 28

பொலிஸ் மா அதிபருக்கு எதிராக கருத்துக்களை வெளியிட்டமை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவருக்கு எதிராக உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. ஊடகங்கள் பலம் மிக்கவை. அவற்றின் மீது கைவைத்து ஊடக சுதந்திரத்தை முடக்க முயற்சித்தால் சிவில் செயல்பாட்டாளர்கள் அனைவரும் வீதிக்கிறங்க நேரிடும் என்று சிவில் புலனாய்வு முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் சஞ்சய மஹாவத்த தெரிவித்தார்.

கொழும்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஊழல் மோசடிகளை ஒழிப்பதில் ஊடகங்கள் பெரும் பங்கினை வகிக்கின்றன. கடந்த காலங்களில் நாம் இது தொடர்பில் பேசியதால் எம்மை கைது செய்தனர். தற்போதும் என்னை பின்தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். கடந்த காலங்களைப் போன்று ஊடக சுதந்திரத்தில் கை வைக்க வேண்டாம் என அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். பொலிஸ்மா அதிபர் மாத்திரமின்றி, ஜனாதிபதி தவறிழைத்தாலும் அதனை சுட்டிக்காட்டுவதற்குள்ள ஒரேயொரு வழி ஊடகம் மாத்திரமே. ஊடகங்கள் பலம் வாய்ந்தவை. எனவே, ஊடகங்கள் மீது கை வைத்தால் சிவில் செயல்பாட்டாளர்களான நாம் வீதிக்கிறங்குவோம்- என்றார். (எ)

# ஊடகங்களை அடக்குவதற்கு பொலிஸார் மூலம் முயற்சி

## சாகர காரியவசம் சாடல்

கொழும்பு, டிசெ. 28

போதைப்பொருளை ஒழிப்பதாக தெரிவித்து ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர் மீதே தற்போது போதைப்பொருள் குற்றச்சாட்டு தெரிவிக்கப்படுவதால், அந்த செய்தியை ஒளிபரப்பிய ஊடக நிறுவனத்தை அடக்குவதற்கு பொலிஸார் செயல்பட்டுள்ளனர். ஊடக சுதந்திரத்தை கட்டுப்படுத்துவதற்கு முயற்சிக்கும் பொலிஸாரின் நடவடிக்கையை நாங்கள் முற்றாக நிராகரிக்கிறோம் என்று பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன கட்சி காரியாலயத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

திருடர்களை கண்டுபிடித்து தண்டனை பெற்றுக்கொடுக்க அதிகாரத்தை வழங்குமாறு தெரிவித்தே ஜனாதிபதி உள்ளிட்ட மக்கள் விடுதலை



முன்னணி ஆட்சிக்கு வந்திருக்கிறது. ஆனால், இதுவரை அவர்கள் எந்த திருடனையும் பிடிக்கவில்லை. அவர்களால் திருடர்களை கண்டுபிடிக்க முடியாமல் போனதை மறைப்பதற்காக 1990 காலப்பகுதியில் இருந்து தலைதூக்கி வரும் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையை கையில் எடுத்துக்கொண்டு, அதனை முழுமையாக ராஜபக்ஷவினர் மீது குற்றம் சுமத்த நடவடிக்கை எடுத்தார்கள்.

ஆனால், அவர்களின் இந்த நடவடிக்கை, அவர்களுக்கு எதிராகவே திரும்பியுள்ளது. நாட்டுக்குள் போதைப் பொருளை கொண்டுவருவது தேசிய மக்கள் சக்தி ஆதரவாளர்கள்தான் என்பது மக்கள் முன்னிலையில் ஒப்புவிக்கப் பட்டிருக்கிறது.- என்றார். (எ)

# "பண்டிகை காலத்தில் ஏற்படக்கூடிய விபத்துகளை தவிர்த்து கொள்ளுங்கள்"

கொழும்பு, டிசெ. 28

பண்டிகை காலத்தை முன்னிட்டு வழிபாடுகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காகக் குடும்பத்துடன் வெளிமாவட்டங்களுக்கு செல்வோர், வீதி விபத்துகள், நீர் நிலைகள் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் ஏற்படக்கூடிய விபத்துகள் தொடர்பில் அவதானத்துடன் செயல்படுமாறு விசேட மருத்துவ நிபுணர் சமித்த சிறிதுங்க வலியுறுத்தியுள்ளார்.

வீதி விபத்துகள் தொடர்பில் பொதுமக்களுக்கு தெளிவூட்டுவதற் காக சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"பண்டிகை மற்றும் விடுமுறை காலங்களில் அதிக எண்ணிக்கை யிலான வீதி விபத்துகள் பதிவாகுவதை காணக்கூடியதாக உள்ளது. உற்சவக் காலத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்படும் வழிபாடுகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக குடும்பத்துடன் வெளிமாவட்டங்களுக்கு பயணிக்கின்றனர். அவ்வாறு செல்பவர்கள் அதிகமாக நீர் நிலைகளுக்குச் செல்வதை காணமுடிகிறது.

முக்கியமாக இந்த நாட்களில் நிலவும் அனர்த்த நிலைமையுடன் நீர் நிலைகளின் தன்மை மாற்றமடைந்துள்ளது. குறிப்பாக அவற்றின் உறுதித்தன்மை மாறியுள்ளது. எனவே, நீர் நிலைகள் மற்றும் அதனை அண்டிய பகுதிகளுக்குச் செல்லும்போது அவதானமாக இருங்கள். பழக்கமில்லாத, அறியாத நீர் நிலைகளில் நீராடுவதற்கு முன்னரும், அவற்றைப் பயன்படுத்துவதற்கு முன்னரும் அவ்விடத்தைப் பற்றி அறிந்த ஒருவரிடம் கேட்டுத் தெரிந்துகொள்வது நல்லது"- என்றார். (எ)

# போதைப்பொருள் ஒழிப்பு திட்டம்: இதுவரை 53 ஆயிரம் பேர் கைது

கொழும்பு, டிசெ. 28

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ள "முழு நாடுமே ஒன்றாக" என்னும் தேசிய போதைப்பொருள் ஒழிப்பு திட்டத்துக்கமைய இதுவரை சுமார் 53, 737 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

"முழு நாடுமே ஒன்றாக - தேசிய செயல்பாடு" என்ற தொனிப்பொருளின் கீழ் கடந்த ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதியிலிருந்து நாடளாவிய ரீதியில் தேசிய போதைப்பொருள் ஒழிப்பு திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. போதைப்பொருள் விநியோகத்தை வலுவிழக்கச் செய்தல், போதைப்பொருளுக்கான கேள்வியை இல்லாமல் செய்தல், நடவடிக்கைகளை விரைவுபடுத்தல், போதைக்கு அடிமையானவர்களுக்குப் புனர்வாழ்வளித்து, அதன் பயன்பாட்டை முற்றாக ஒழிக்கும் நோக்குடன் இந்த நடவடிக்கை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட 54, 239 சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் 302 கிலோ கிராம் ஹெரோயின், 1192 கிலோ கிராம் ஐஸ், 1717 கிலோ கிராம் கஞ்சா, 71 கிலோ கிராம் குஷ், 41 கிலோ கிராம் ஹசிஸ், 17 கிலோ கிராம் மதணமோதகம், 90 கிலோ கிராம் மாவா, 6 கிலோகிராம் கொக்கைன் மற்றும் 104,329 போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சட்டவிரோத சொத்து குவிப்பு தொடர்பில் 50 சந்தேகநபர்களுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 1192 சந்தேக நபர்களுக்கு எதிராக தடுப்பு காவல் உத்தரவும் பெறப்பட்டுள்ளது.(எ)

# இம்முறை நத்தார் தினத்தன்று கைதிகள் விடுவிக்கப்படவில்லை

கொழும்பு, டிசெ. 28

நத்தார் தினத்தை முன்னிட்டு சிறைக்கைதிகளை விடுவிக்கும் நடவடிக்கை வரும் நாட்களில் மேற்கொள்ளப்படவுள்ளதாக சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

வரலாற்றில் முதல் முறையாக இம்முறை நத்தார் தினத்தன்று கைதிகள் எவரும் விடுதலை செய்யப்படவில்லை.

இது தொடர்பில் சிறைச்சாலை திணைக்கள அதிகாரிகளிடம் வினவியபோது,

விடுவிக்கப்பட வேண்டிய கைதிகளின் பெயர்ப்பட்டியல் உரிய அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், கைதிகள் தொடர்பில் மேலும் சில அறிக்கைகளை அமைச்சு கோரியுள்ளதாகவும், அவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருவதாகவும் இதன்படி, வரும் நாட்களில் நத்தார் தினத்துக்கான விசேட பொது மன்னிப்பின் கீழ் சிறைக்கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டியில் வெடிகுண்டு அச்சுறுத்தல் பீதியை ஏற்படுத்தும் முயற்சியா?

## பொலிஸார் சந்தேகம், விசாரணை தீவிரம்

கண்டி, டிசெ. 28

கண்டி மாவட்ட செயலகத்தில் வெடிபொருட்கள் இருப்பதாக கிடைத்த தகவல், பொது மக்களிடையே பீதியை ஏற்படுத்தும் முயற்சியாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

நேற்றுக் காலை விடுக்கப்பட்டுள்ள புதிய அறிவிப்பில், இந்தத் தகவல் குறித்து கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி மாவட்ட செயலகத்தின் ஐந்து இடங்களில் குண்டுகள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக அந்த அலுவலகத்தின் மின்னஞ்சல் முகவரிக்கு நேற்று முன்தினம் செய்தி ஒன்று அனுப்பப்பட்டிருந்தது.

இது தொடர்பில் கண்டி பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, கண்டி பொலிஸ் நிலைய உத்தி யோகத்தர்கள், பொலிஸ் மோப்ப நாய் பிரிவு, பொலிஸ் விசேட அதிரடிப் படையின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவு மற்றும் இராணுவத்தின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் வரவழைக்கப்பட்டு பாரிய தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்தத் தேடுதல் நடவடிக்கைகள் நேற்றுக் காலை முதல் மாலை வரை மேற்கொள்ளப்பட்ட போதிலும், சந்தேகத்துக்கிடமான வெடிபொருட்கள் எதுவும் கண்டெடுக்கப்படவில்லை.

இதன்படி, இந்தத் தகவலானது பொதுமக்களிடையே தேவையற்ற பதற்றத்தை உருவாக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சியாகவே கருதப்படுவதாகவும், இது தொடர்பில் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தீவிர விசாரணைகளை மேற்கொள்வார்கள் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ)

# பணி நீக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

கொழும்பு, டிசெ. 28

தேசிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பத்மகுமாரவுடன் ஏற்பட்ட சம்பவத்தை தொடர்ந்து பணிநீக்கம் செய்யப்பட்ட சூரியகந்த பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் உத்தியோகத்தர், நேற்று முன்தினம் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் வழங்குமாறு கோரியே அவர் இந்த முறைப்பாட்டை மேற்கொண்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பத்மகுமாரவின் மாமனாருக்கு சொந்தமானது எனத் தெரிவிக்கப்படும் காணி ஒன்றில், கடந்த சில நாட்களுக்கு முன்னர் பொலிஸார் மேற்கொண்ட சோதனையின் போது இரண்டு கஞ்சா செடிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, அந்தச் சோதனையில் ஈடுபட்ட சூரியகந்த பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், பாராளுமன்ற உறுப்பினர் தன்னைத் தாக்கியதாகக் கூறி டிசெம்பர் 20 ஆம் திகதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

எவ்வாறாயினும், இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்திய பொலிஸார், பாராளுமன்ற உறுப்பினரை குற்றவியல் ரீதியாக அச்சுறுத்தியமை உள்ளிட்ட மூன்று குற்றச்சாட்டுக்களின் கீழ் குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை கைது செய்தனர்.

பின்னர் அவர் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து, முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு அமைய குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டார்.

இந்தப் பின்னணியிலேயே அவர் நேற்று முன்தினம் மனித உரிமைகள் ஆணைக்குழுவை நாடியுள்ளார்.(எ)

# கிழக்கில் டித்வா புயலால் 33,640 விவசாயிகள் பாதிப்பு

## மாகாண விவசாய பணிப்பாளர் தகவல்

மட்டக்களப்பு, டிசெ. 28

டித்வா புயல் மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட நெற்பயிர்ச் செய்கைக்கான அழிவுகள் மற்றும் அதற்கான நஷ்ட ஈடுகள் வழங்கப்பட்டமை தொடர்பில் கிழக்கு மாகாண விவசாய பணிப்பாளர் எம். எஸ். றினூஸ் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், கிழக்கு மாகாணத்தில் மொத்தமாக 21, 272 ஹெக்டேயர் நிலப்பரப்புகளை கொண்ட 33, 640 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில், மாவட்ட அடிப்படையில் பார்க்கின்ற போது திருகோணமலை மாவட்டத்தில் 15, 389 ஹெக்டேயர் பரப்பளவை கொண்ட 23, 516 விவசாயிகளும் மட்டக்களப்பில் 2961 ஹெக்டேயரை கொண்ட 5009 விவசாயிகளும் அம்பாறையில் 2922 ஹெக்டேயரை கொண்ட 5,115 விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரையில் சுமார் 3,190 மில்லியன் ரூபாய் நஷ்ட ஈட்டு தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.(எ)

# கடல் அலையில் சிக்கிய வெளிநாட்டவர்கள் மீட்பு

காலி, டிசெ. 28

ஹிக்கடுவ - பன்னங்கொட கடலில் நீராடச்சென்று, கடல் நீரோட்டத்தில் சிக்கி கடலுக்குள் அடித்துச்செல்லப்பட்ட வெளிநாட்டுப் பெண் ஒருவரும் சிறுவன் ஒருவனும் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மதியம் இந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

கடற்கரையில் பணியில் இருந்த, ஹிக்கடுவ பொலிஸ் உயிர் காக்கும் பிரிவில் இணைக்கப்பட்ட பிரதி ஆய்வாளர் சிறிமல், பொலிஸ் கான்ஸ்டபிள் திஸநாயக்க மற்றும் துமிந்த ஆகியோர் இவர்களை மீட்டு அடிப்படை முதலுதவி சிகிச்சை அளித்துள்ளனர்.

விபத்தில் சிக்கியவர்கள் உக்ரைன் நாட்டைச் சேர்ந்த 42 வயதுடைய பெண்ணும் 14 வயதுடைய சிறுவனும் என தெரியவந்துள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை, ஹிக்கடுவ - நரிகம கடலில் நீராடச்சென்று நீரோட்டத்தில் சிக்கி கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்ட இரு வெளிநாட்டவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

விபத்தில் சிக்கிய வெளிநாட்டவர்கள் 33 வயதுடைய ரஷ்ய பிரஜை மற்றும் 67 வயதுடைய பிரித்தானிய பிரஜை என தெரியவந்துள்ளது.(எ)

# “மோட்டார் வாகன வரியை உடன் குறைக்க வேண்டும்”

கொழும்பு, டிசெ. 28

நடுத்தர மக்கள் கொள்வனவு செய்யும் மோட்டார் வாகனங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள வரியை அரசாங்கம் குறைக்க வேண்டும் என மோட்டார் வாகன இறக்குமதியாளர் சம்மேளனத்தின் தலைவர் பிரசாத் மானகே தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள மோட்டார் வாகன இறக்குமதியாளர் சம்மேளனத்தின் காரியாலயத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் அண்மையில் நிலவிய இயற்கை அனர்த்தங்களுக்கு பின்னர் வாகன கொள்வனவு வீதம் சடுதியாக குறைவடைந்துள்ளது. வாகன இறக்குமதிக்காக முன்பதிவுகள் செய்தவர்கள் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே அவர்கள் பதிவுகளை இரத்துச் செய்துள்ளனர்.

இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களை குறித்த காலப்பகுதிக்குள் விடுவிக்காவிடின் காலமாதம் என்று குறிப்பிட்டு 3 சதவீதமளவில் வரி அறவிடப்படுகிறது. தற்போதைய இக்கட்டான நிலையில் இந்த வரி அறவிடலை இரத்துச் செய்யுமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்துகிறோம்.

நடுத்தர மக்களின் மோட்டார் வாகன கொள்வனவு கனவு பாதிக்கப்பட்டுள்ளது. வெகனார் ரக வாகனத்துக்கு விதிக்கப்பட்டுள்ள வரி 40 இலட்சம் ரூபாய் வரையில் காணப்படுகிறது. ஆகவே, இந்த வரிகளை குறைப்பது தொடர்பில் அரசாங்கம் உரிய கவனம் செலுத்த வேண்டும்- என்றார்.(எ)

# வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் தெரிவு ஒத்திவைப்பு

கொழும்பு, டிசெ. 28

வெலிகம பிரதேச சபையின் புதிய தவிசாளரைத் தெரிவு செய்யும் நடவடிக்கை இரண்டாவது முறையாகவும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சபையில் நிறைவெண் இல்லாதமையால் புதிய தவிசாளரைத் தெரிவு செய்யும் நடவடிக்கை இரண்டாவது முறையாகவும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வெலிகம பிரதேச சபையின் தவிசாளரான ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த லசந்த விக்கிரமசேகர படுகொலையானமையால் அவரின் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டது.

இந்த நிலையில், புதிய தவிசாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக கடந்த 28ஆம் திகதி சபை கூடியது. எனினும், போதிய நிறைவெண் இன்மையால் தெரிவு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் சபை கூடியபோது 45 உறுப்பினர்களில் 22 பேரே சமுகமளித்தனர். இதனால், போதிய நிறைவெண் இனறி தவிசாளர் தெரிவு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது. (ஐ)

# நெல் சந்தைப்படுத்தல் சபையின் நெல் விநியோகிக்கும் புது திட்டம்

கொழும்பு, டிசெ. 28

கடந்த போகத்தில் கொள்வனவு செய்யப்பட்ட நெல் கையிருப்பு தொடர்பில் நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் மஞ்சுள பின்னலந்த விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறுகையில், கடந்த போகத்தில் சேகரிக்கப்பட்ட நெல்லை லங்கா ச.தொ.ச. விற்பனை வலையமைப்பு மற்றும் ஏனைய பெயரிடப்பட்ட விற்பனை வலையமைப்புகளுக்கு விநியோகிப்பதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இவ்வாறானதொரு முறை பயன்படுத்தப்படுவது இதுவே முதல் முறை என தெரிவித்த அவர், இதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும், குறிப்பாகப் பதிவு செய்யப்பட்ட நெல் ஆலை உரிமையாளர்களையும் இதில் ஈடுபடுத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தில் பங்கேற்கும் பதிவு செய்யப்பட்ட நெல் ஆலை உரிமையாளர்களிடமிருந்து “நாடு“ அரிசி மட்டுமே பெற்றுக்கொள்ளப்படும் என்றும், அவ்வாறு பெறப்படும் நாடு நெல் ஒரு கிலோ கிராம் 125 ரூபாய் என்ற பரிந்துரைக்கப்பட்ட விலையில் விநியோகிக்கப்படும் என்றும் அவர் கூறினார். (எ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஞானச்சுடர் மலர் வெளியீடு



யாழ்ப்பாணம், டிசெ. 28

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் மாதாந்தம் வெளியீடு செய்யப்படும் ஆன்மீக மலரான ஞானச்சுடர் 336ஆவது மலர் வெளியீடு நேற்று முன்தினம் சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது. இதில், வெளியீட்டுரையை இளைப்பாறிய கிராம உத்தியோகத்தர் சோ. பரமநாதனும் மதிப் பீட்டுரையை இளைப் பாறிய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. சிறீஸ்கந்தமூர்த்தியும் நிகழ்த்தினர். அதனை தொடர்ந்து சிறப்பு பிரதிகள் வழங்கப் பட்டன.

இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டு பேரவை உறுப்பினர்கள், நிர்வாகிகள், சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், அடியார்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-08)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
28.12.2025 ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம், மார்கழி 13

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்?

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பேசப்படும் முறையை உற்று நோக்கினால் ஈழத் தமிழரின் இன்றைய அரசியல் நிலைமையை ஒருவர் தெளிவாக அறிந்துகொள்ள முடியும் அந்தளவுக்கு பொறுப்பற்ற பேச்சுக்களும் ஒழுக்கமற்ற வார்த்தைப் பிரயோகங்களும் பாராளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப படுகின்றன.

ஒரு காலத்தில் சிங்களவர்களை மோட்டுச் சிங்களவர் என்று கூறி தங்களுக்குள் பெருமிதப்பட்டுக் கொண்ட யாழ் அறிவாளி மனோபவத்தின் இன்றையே நிலையோ பரிகசிக்கத்தக்க நிலையில் காணப்படுகின்றது. ஒருவர் பேசும் பேச்சைக் கொண்டு அவரின் தரத்தை அறிய முடியும். அந்த அடிப்படையில் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் தரத்தை அவர்களின் பேச்சும் செயலும் நிரூபித்துக் கொண்டிருக் கின்றது.

இதற்கு யார் பொறுப்பு? தமிழ் மக்களை பிரதிநித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பொறுப்பற்றவர்களாவும் பரிகசிக்கத் தக்க வகையிலும் இருக்கின்றனர் என்றால் அதற்கான பொறுப்பு அவர்களை தெரிவு செய்த மக்களுக்குரியதாகும். மக்கள் வாக்களிக்கும் போது சிந்தித்து வாக்களிக்கக் கூடியவர்களாக இருந்திருந்தால் பொருத்தமற்றவர்கள் பாராளுமன்றம் செல்லும் நிலைமை ஏற்பட்டிருக்காது. பாராளுமன்ற உறுப்பினர்களையே பொறுப்புடன் தெரிவு செய்ய முடியாத இனம் ஒன்றிற்கு எதற்கு ஆளும் அதிகாரம்?

தேர்தல் காலங்களில் வேட்பாளர்களின் அறிவாற்றல், தொடர்புகள், தலைமைத்துவ ஆளுமை, நேர்மை ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை விடவும் சாதி, ஊர் என்னுமடிப்படையில் தான் வேட்பாளர்கள் தீர்மானிக்கப்படுகின்றனர். அந்தச் சாதியின் வாக்குகளை கவர்வதற்கு, அந்தச் சாதியிலிருந்து ஒருவர் என்னுமடிப்படையில்தான் வேட்பாளர்கள் தீர்மானிக்கின்றனர்.

மக்களும் தங்களுடைய சாதி, தங்களின் ஊரவர் என்னுமடிப்படை யில்தான் அவர்களை பார்க்கின்றனர். இந்தப் பின்புலத்தில் தெரிவு செய்யப்படும் ஒருவரால் எவ்வாறு அரசியலை கையாள முடியும். சாதி, ஊர், மதம் என்பவற்றைக் கடந்து ஒருவரின் ஆற்றல் ஆளுமையின் அடிப்படையில் தங்களுக்கான பிரதிநிதிகளை மக்கள் தெரிவு செய்திருந்தால், இவ்வாறான அரசியல் அசிங்கங்கள் இடம்பெற்றிருக்காது.

இவ்வாறான பாராளுமன்ற உறுப்பினர்களையும் பலவீனமான கட்சிகளையும் வைத்துக் கொண்டுதான் இந்தியாவை, அமெரிக்காவை கையாள்வது பற்றியெல்லாம் உரையாடப்படுகின்றது. கூரை ஏறி கோழிபிடிக்கத் தெரியாதவர்கள் வானம் ஏறி வைகுண்டம் போக நினைப்பது என்று கூறுவது போன்ற கதைகள்தான் ஈழத் தமிழர் அரசியலாகத் தொடர்கின்றது. அரசியலை கையாளும் தகுதி என்பது, மக்களால் எவ்வாறானவர்களை தங்களின் தலைவர்களாக் தெரிவு செய்கின்றனர் என்பதில்தான் தங்கியிருக்கின்றது. இந்த அடிப்படையில் அரசியல்வாதிகள் பற்றிப் பேசுவதில் பயனில்லை. ஏனெனில் அவ்வாறானவர்களை தெரிவு செய்யும் மக்கள் திருந்தாத வரையில் மாற்றம் என்பது எப்போதும் எட்டாக் கனிதான்.

# தொல்பொருள் சேகரிப்புகள் மூலம் இனப்பற்று ஊட்டிய கலைஞானி

**ஈழத்தின் பிரபல அரும்பொருள் தொல்பொருள் சேகரிப்பாளராக விளங்கிய மாமனிதர் கலைஞானி அவர்களின் 24 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும். இதையோட்டி இந்த கட்டுரை பிரசுரமாகிறது.**



அ.செல்வரத்தினம் என்ற இயற்பெயரைக் கொண்ட கலைஞானி 1933 ஆம் ஜூலை மாதம் 23 ஆம் திகதி வலிகாமம் வடக்கு பிரதேசத்திலுள்ள குரும்பசிட்டியில் பிறந் தார். தனது ஆரம்பக் கல்வியை குரும்பசிட்டி பொன்பரமானந்தர் வித்தியாசாலையிலும் இடைநிலைக்கல்வியை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் பயின்றார். சிறுவயதி லேயே தனது பெற்றோரை இழந்த அவர் தனது பெரிய தாயாரின் அரவணைப்பிலே வளர்ந்தார்.

கலைஞானி மாணவனாக இருந்த பொழுது 1947 ஆம் ஆண்டு அவர் தனது காணியில் கண்டெடுத்த மூன்று சங்குகளும் மூன்று நாணயங்களும் அவரின் பின்னைய பணிகளுக்கு விதைகளாயின. தனது சேகரிப் புகளை வைத்து அவர் நடத்திய கண்காட்சிக ளில் 1974 ஆம் ஆண்டு தமிழாராய்ச்சி மாநாடு, 1991 ஆம் ஆண்டு யாழ். பல்கலைக் கழகம், 1992 ஆம் ஆண்டு நாவலர் கலாசார மண்டபம், 1998 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரி என்பன முக்கியமானவை.

தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு வந்து திரும்பிய மதுரைப் பல்கலைக்கழக பேராசிரி யரான கொடுமுடி சண்முகம் அவர்கள் "இலங்கை முழுவதும் மட்டுமல்ல இந்தியா முழுமைக்கும் கூட தனியாள் சேகரிப்பு உங்களிடம் தான் அதிகம்" என்று கலைஞானிக்கு கடிதம் எழுதியிருந்தமை யானது அவருக்குக் கிடைத்த மிகப்பெரும் கௌரவமாகும்.


கலைஞானி ஒரு தமிழ் இனப்பற்றாளராக இருந்தார். தமிழர்களின் கலாசார சின்னங்கள் அழித்தொழிக்கப்பட்ட போதும் வரலாறுகள் திரிபுபடுத்தப்பட்ட போதும் அவற்றுக்கு எதிராகக் குரல் கொடுத்தார். கலாநிதி ஆறு. திருமுருகன் கலைஞானியின் எழுத்துப் பணிபற்றிக் குறிப்பிடும் போது ," வரலாறுகள் திரிபடைகின்ற போதெல்லாம் வாதாடுகின்ற ஒருவராக கலைஞானி விளங்கி இருக்கிறார். வரலாற்றுத் துறைப் பேராசிரியர்கள் முதல் வரலாற்று ஆய்வாளர்கள் வரை தவறாகக் கருத்துகள் வெளியிட்ட காலத்தில் துணிந்து மறுகருத்துக்கள் வெளியிட்டவர் கலைஞானி. எனக்கு இன்றும் ஞாபகமாக இருக்கிறது யான் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மாணவனாக இருந்த காலத்தில் யாழ்ப்பாண அன்னசத்திரம் பற்றி ஈழநாடு பத்திரிகையில் கலைஞானி மக்கள் கருத்து என்ற பத்தியினூ டாக வெளிப்படுத்திய தகவல்கள் பலரையும் திகைக்க வைத்தது. அக்காலத்தில் அவரது அறைகூவலே அன்ன சத்திரத்தின் வரலாற்றை எம்போன்ற இளைய தலைமுறை அறியவை த்தது எனலாம்" என்று தெரிவித்திருந்தார்.

மகத்தான கலைஞர் தொல்பொருள் அறிஞர் கலைஞானிக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகம் தேகாந்த நிலையிலாயினும் கௌரவ விருது வழங்கி கௌரவிக்க வேண்டும் என்பது என் போன்ற ஆர்வலர்களின் பேராவலாகும் என்று ஆறு. திருமுருகன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கலைஞானி 2001 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 28 ஆம் திகதி தனது 68 ஆவது வயதில் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.

இந்த மண் உள்ள வரை கலைஞானி அவர்களின் நாமம் வாழும். அவர் பணி விதந்து பேசப்படும். தியாக வாழ்வு வாழ்ந்த உன்னத மனிதரை இவ்வுலகம் என்றும் போற்றித்துதிக்கும்.

**எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி,**
முன்னாள் இயக்குநர்,
கலைஞானி அருங்காட்சியகம்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண் மணம் தேடும் மனம்!

வெ. இன்சுவை

விமானத்தை மிகச் சாதாரணமாகவும், வண்ணத்துப்பூச்சியை வியப்பாகவும் பார்க்கிறோம் என்று ஆதங்கப்பட்டுள்ளார் ஒருவர். சுடும் உண்மை இது.

ஆகாய விமானம் பறந்தால் வாய் பிளந்து அண்ணாந்து பார்த்தது அந்தக் காலம். சில குழந்தைகள் பிறந்த உடனேயே விமானப் பயணம் செய்கின்றன. அவர்களுக்கு விமானம் எந்தவித வியப்பையும் ஏற்படுத்துவதில்லை. நகரத்துப் பிள்ளைகளுக்கு வண்ணத்துப்பூச்சி, தேனீ, தேன்சிட்டு, வயல்வெளி, ஆறு, தென்னந்தோப்பு இவையெல்லாம்தான் அதிசயங்கள்.

பள்ளியில் படிக்கும் போது 'கிராம வாழ்க்கை சிறந்ததா?' 'நகர வாழ்க்கை சிறந்ததா?' என்ற பட்டிமன்றத் தலைப்பில் பேசியதும் உண்டு. அரை நூற்றாண்டுக்கு முன்பு கிராமங்கள் மண் மணம் மாறாமல் இருந்தன. கூரை மற்றும் சிறிய ஓட்டு வீடுகள், பச்சைக் கம்பளம் விரித்தது போன்ற வயல்கள், ஏற்றம் இறைக்கும் கிணறுகள், மாசில்லாத சுற்றுச்சூழல், இயற்கை எழில் கொஞ்சும் கிராமம் என்றெல்லாம் பேசி, நகர வாழ்க்கை நரகம் என அடித்துச் சொல்லி, கிராம வாழ்க்கையே சிறந்தது என்று நடுவரை தீர்ப்பு சொல்ல வைத்தது நினைவுக்கு வருகிறது. அப்படிப் பேசியவர்கள் அனைவரும் நகரத்துக்கு வந்துவிட்டதுதான் முரண்.

தற்போது நகரத்தில் படித்து, வேலை பார்க்கும் அனைவரும் சேர்ந்தாற்போல் விடுமுறை கிடைத்தால், பண்டிகை என்றால், ஊரில் திருவிழா என்றால், சொந்த கிராமத்துக்குப் போகத் துடிக்கிறார்கள். முன்பதிவு செய்ய முடியாதவர்கள், கூட்டநெரிசலில், முட்டி, மோதி பேருந்து மற்றும் ரயிலில் ஏறிப் பயணிக்கிறார்கள். ஆவர்களுக்குச் சொந்த கிராமமே சொர்க்கம்.

நகரத்தின் இரைச்சல், நெரிசல், அவதி, வேகம் போன்றவற்றால் மன உளைச்சலுக்கு உள்ளாகிக் கிடப்பவர்களுக்கு அந்த விடுப்பு நாள்கள் பாலைவனச் சோலை ஆகும். கொஞ்சம் தங்களை ஆசுவாசப்படுத்திக் கொள்ளவும், மீண்டும் காலில் சக்கரம் கட்டிக்கொண்டு ஓடவும், இளைப்பாறவும் அந்தப் பயணங்கள் அவசியமாகின்றன.

கூரை வீடுகளில் இருந்து வரும் அடர்த்தியான புகை வாசமும், மாட்டுத் தொழுவத்தில் இருந்து வரும் சாணத்தின் வாசமும், வயல்வெளிகள் மீது தவழும் மெல்லிய பனி மூட்டமும், தலையாட்டிச் சிரிக்கும் நெற்கதிர்களும், ஏரியைச் சுற்றி ஓங்கி வளர்ந்த பனைமரங்களும், விழுதுகள் தொங்கும் குளக்கரையும், அங்கோர் பிள்ளை



யாரும், செம்மண் சாலைகளும், கப்பி சாலைகளும், ஊர்ச் சாவடியில் கதை பேசிக்கொண்டு பெரியவர்களும் இருந்தது அந்தக் கால கிராமம். பல நூற்றாண்டுகளுக்கு முந்தைய சிறிய கோயில்கள் பழைமையின் சான்றுகளாக நின்றன. கிராமத்தின் பழைமை என்பது சிதைந்து போன கட்டடங்களில் மட்டுமல்ல, அது பல தலைமுறைகளாகப் பேசப்படும் அந்த மக்களின் பாரம்பரியப் பழக்கவழக்கங்களிலும், தொன்மை வாய்ந்த கோயில்களிலும் உள்ளது. ஒவ்வோர் ஊருக்கும் ஒரு கதை இருக்கும். தற்போது திரைப்படங்கள்தான் கிராமங்களை இன்னமும் விடாமல் பிடித்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே, தற்கால நகரத்துப் பிள்ளைகளுக்குக் கிராமம் பற்றிய நேரடி அனுபவம் இல்லை.

ஒரு நெல் மணியை உற்பத்தி செய்ய ஒரு விவசாயி எவ்வளவு கடுமையாக உழைக்கிறார் என்பதை அவர்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அது தெரிந்தால் சாப்பிட அடம் பிடிக்க மாட்டார்கள். குறிப்பிட்ட எந்த உணவையும் பிடிக்கவில்லை என ஒதுக்க மாட்டார்கள் உணவை வீணடிக்க மாட்டார்கள்.

நம் விழாக்களிலும் விருந்துகளிலும் வீணடிக்கப்படும் உணவுப் பண்டங்கள் ஏராளம். அதைப் பார்த்தால் விவசாயிக்கு கண்களில் ரத்தக் கண்ணீர் வரும். ஆகவே, மாணவர்களை கிராமங்களுக்கு அழைத்துச் சென்று விவசாயம் குறித்த நேரடி அனுபவம் கிடைக்கச் செய்ய வேண்டும். உணவுப் பண்டத்தை வீணடிப்பது ஒரு தேசியக் குற்றம் என்பதை அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

வளரிளம் பருவப் பிள்ளைகள் தங்களுக்குத் தனி அறை வேண்டும் என்று கேட்கிறார்கள். அதிலும் குளிர் சாதன வசதி அவசியம் இருக்க வேண்டும். எத்தகைய சிறிய அசௌகரியத்தையும் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை. இவர்களை கிராமத்திலுள்ள வீடுகளுக்கு அழைத்துப் போய்க் காட்ட வேண்டும். கிராம வாழ்க்கை எப்படிப் பட்டது என்பதையும் உணர்த்த வேண்டும்.

விவசாயம் செய்வது எவ்வளவு சிரமமான ஒன்று என்று பள்ளிப் பருவத்திலேயே பிள்ளைகள் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது.

ஜப்பானில் தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளி அளவில், பாடத்திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட செயல்முறை நடவடிக்கைகளின் மூலம் விவசாயத்தைக் கற்றுக் கொடுக்கிறார்கள். உளளூர் விவசாயிகளுடன் கூட்டுறவின் மூலம் அல்லது பள்ளித் தோட்டங்கள் மற்றும் பண்ணைகளில் நெல், காய்கள், பிற பயிர்களை நடவும், அறுவடை செய்யவும் கற்பிக்கிறார்கள். மாணவர்கள் நெல் நாற்றுகள், காய்கறிகளை அறுவடை செய்தல் மற்றும் முழு உணவுச் சங்கிலியைப் பற்றியும் அறிந்து கொள்கிறார்கள்.

பள்ளிகள் பெரும்பாலும் தங்கள் நிலத்தைப் பண்ணைத் திட்டங்களுக்குப் பயன்படுத்த, அருகில் உள்ள விவசாயிகளுடன் ஒத்துழைக்கின்றன. கைவிடப்பட்ட நிலங்களையும் எடுத்துக் கொள்கிறார்கள். செயல்முறை அனுபவத்தின் மூலம் தங்கள் உணவு எங்கிருந்து வருகிறது என்பதைப் பிள்ளைகள் அறிந்துகொள்கிறார்கள். விவசாயிகளின் உழைப்பைப் புரிந்து கொள்கிறார்கள். அறுவடை செய்யப்பட்ட உணவை அவர்களே சமைத்து உண்ணுகிறார்கள். உள்ளூர் பாரம்பரிய உணவுகளையும் கூட இத்திட்டம் உள்ளடக்குகிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்தவார ராசிபலன் 27.09.2025 - 03.09.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாசவசு வருடம் - மார்கழி 13

நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : நவமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

வணிகத்திலும் உத்தியோகத்திலும் லாபத்தைப் பெறுவதற்கு ராகு லாபஸ்தானத்தில் அமர்ந்திருக்கிறார். பொருளாதாரச் சிக்கல்கள் வருவதற்கு வழி இல்லை. ஒன்பதாம் இடத்தில் சுக்கிரன் அமர்வதால் சுக்கிர மங்கள யோகம் ஏற்படுகிறது. மனைவியால் செல்வாக்கும் செல்வமும் அதிகரிக்கும். விலை உயர்ந்த பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் பதவி உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கும். முன் கோபம் அதிகரிக்கும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

அஷ்டமத்தில் நான்கு கிரகங்கள் இணைந்து இருக்கிறதே என்று கவலைப்பட வேண்டாம். விலகிச் சென்ற உறவுகள் திரும்ப வந்து சேரும். சிற்சிலத் தடைகள் இருந்தாலும் முயற்சியின் அடிப்படையில் உங்கள் காரியங்கள் வெற்றி பெறும். இரண்டில் குரு இருப்பதால் பொருளாதார ரீதியாக கஷ்டங்கள் வருவதற்கு வழி இல்லை. மேலதிகாரிகளோடு இணக்கமாக இருந்தால் உங்கள் உத்தி யோகத்திற்கு நல்லது. அஷ்டமத்தில் புதன் சஞ்சரிப்பதால் நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்னை களில் சற்று கவனமாக இருக்க வேண்டும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மூன்றில் அமர்ந்த கேது உங்கள் முயற்சிகளை வெற்றி பெற வைப்பார். குடும்பத்தில் ஆனந்தம் உண்டு. வாழ்க்கை துணை மூலம் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும் வாய்ப்பு உண்டு. பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டு புதிய வாகனங்களை வாங்கும் முயற்சி பலிக்கும். ராசிநாதன் ராசியைப் பார்ப்பது விசேஷமானது என்பதால் நினைத்த காரியம் நிச்சயமாக நடைபெறும். சிலருக்கு திடீர் இடமாற்றங்களும், நீண்ட தூர இடமாற்றங்களும் உண்டு. அவசரப்பட்டு வார்த்தைகளைக் கொடுத்துவிட வேண்டாம்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

ஆறாம் இடத்தில் சூரியனும் செவ்வாயும் அமர்ந்து அற்புத யோகங்களைச் செய்கிறார்கள். வீடு கட்டும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். வழக்குகள் சாதகமாக முடியும் வாய்ப்பும் உண்டு. சுய தொழில் செய்ய ஆர்வம் உள்ளவர்களுக்கு வழி பிறக்கும். ஆன்மிகப் பயணம் மேற்கொள்ளும் வாய்ப்பு உண்டு. ராசிக்கு இரண்டாம் இடத்தில் கேது சஞ்சரிப்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். பிறர் விஷயங்களிலும் கவனத்தைச் செலுத்தாதீர்கள்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

பூர்வீகச் சொத்துப் பிரச்னைகள் சுமுகமாகும். புதிய விஷயங்களை யோசித்துச் செயல்படுத்தி வெற்றி பெறுவீர்கள். செய்தொழில் மேன்மை உண்டு. ராசிக்கு லாபஸ்தானத்தில் சூரியனுக்கு நட்பு கிரகமாகிய குரு அமர்ந்து பூர்வ புண்ணிய ஸ்தானத்தைப் பார்ப்பதால் காரியத் தடைகள் விலகும். பெண்களால் ஆதரவும் ஆதாயமும் உண்டு. ராசியில் கேது அமர்ந்து இருக்கிறார். அதனால் மன அழுத்தம் உண்டாகும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

குரு பத்தில் இருப்பதால் தொழிலில் சில சங்கடங்கள் இருந்தாலும் கூட, ராசிநாதன் புதன் சூரியனோடு நான்காம் இடத்தில் அமர்ந்து தொழில் ஸ்தானத்தைப் பார்ப்பதால் தொழில் தடைகள் விலகி முன்னேற்றம் ஏற்படும். அரசியலில் உள்ளவர்களுக்குச் செல்வாக்கு அதிகரிக்கும். விரயஸ்தானத்தில் கேது இருப்பதால் அலைச்சல் பயணங்களும், மன அலைச்சலும் உருவாகும். வீட்டில் இருந்தாலும் கூட உங்கள் கற்பனை எங்கெங்கோ சென்று ஒரு இடத்தில் இருக்க விடாமல் செய்யும். திடீர் பதற்றங்கள் படபடப்பு உருவாகும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

ராசிநாதன் சுக்கிரன் மூன்றாம் இடத்தில் செவ்வாயோடு அமர்ந்திருக்கிறார். மூன்றாம் இடத்தில் சூரியனும் இருக்கிறார். ஆன்மிகப் பயணங்களும் சிந்தனைகளும் அதிகரிக்கும். முக்கியஸ்தர்களின் உதவி கிடைக்கும். நான்காம் இடத்தில் சூரியன் அமர்ந்திருக்கிறார். தேவையில்லாத விரோதங்கள் உருவாகலாம். நீங்களாக மற்றவர்கள் விஷயத்தில் உங்கள் கருத்தை வலியுறுத்த வேண்டாம். தாயின் உடல்நிலையில் கவனம் தேவை.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

ஏழாம் இடத்து சுக்கிரனும் ராசிநாதன் செவ்வாயும் இணைந்து இரண்டாம் இடத்தில் இருக்க, அவரை இரண்டாம் இடத்திற் குரிய குரு பார்ப்பது சிறந்த அமைப்பு. அரசியலில் உள்ளவர்களுக்கு சிறப்பான வாய்ப்புகளும், செயல்களுக்கான அங்கீகாரமும் தலைமையில் உள்ளவர்களால் வழங்கப்படும். தாயாரின் உடல்நிலையில் கவனம் தேவை. குடும்பத்தில் உள்ளவர்களுக்கு அவ்வப்பொழுது ஆரோக்கிய பிரச்னைகள் ஏற்படும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

லாபாதிபதி சுக்கிரன் ராசியில் அமர்ந்திருக்க, அவரை ராசிநாதன் குரு ஏழாம் இடத்தில் இருந்து பார்க்கும் அமைப்பு நல்ல அமைப்பு. அதோடு 7.10 க்குரிய புதன் ராசியில் அமர்ந்திருக்கிறார். கணவன் மனைவி கருத்து வேறுபாடுகள் மனம் விட்டுப் பேசி அகற்றிக் கொளளும் வாய்ப்பு உண்டு. நன்மைகள் கிடைத்தாலும் அவசரப்பட்டு விவேகம் இல்லாமல் பேசி சில வாய்ப்புகளை இழந்து விடுவீர்கள் என்பதால் பேச்சில் நிதானமும் கவனமும் தேவை.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

ராசிநாதன் சனி உபஜய ஸ்தானமான மூன்றாம் இடத்திற்கு நெருக்கமாக இருப்பதால், மூன்றாம் இடத்திற்கான பலனைத் தர ஆரம்பித்து விடுவார். அவர் வலிமையாக இருப்பதாகவே பொருள் கொள்ள வேண்டும். வணிகத்தில் புதிய ஒப்பந்தங்கள் உருவாகும். தகவல் தொழில்நுட்பம், பத்திரிகைத் துறையில் பணிபுரியும் நண்பர்களுக்கு ஏற்றம் உண்டு. சண்டை சச்சரவுகள் நிகழலாம். நீங்கள் கவனமாக அந்த பிரச்னையைக் கையாள வேண்டும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

தன லாபாதிபதி குரு திரிகோணமாகிய ஐந்தாம் இடத்தில் அமர்ந்து உங்கள் லாப ஸ்தானத்தையும் ராசியையும் பார்ப்பது அற்புதமான அமைப்பு. வழக்குகள் சாதகமாகும். ராசியில் ராகு, ஏழில் கேது இருப்பதால் நண்பர்களிடம் சரியான முறையில் பழகுங்கள். நீங்களாகவே உரிமை எடுத்துக் கொண்டு எல்லை மீறிப் போய் அவஸ்தைப்பட வேண்டாம். உங்கள் எண்ணங்களும் செயல்களும் தவறாகப் புரிந்து கொள்ளப்படும். குடும்ப பிரச்னைகளை வெளியில் சொல்ல வேண்டாம். ஆலோசித்து முடிவுகளை எடுப்பது நல்லது.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

ராசிக்கு ஆறில் அமர்ந்த கேது உங்கள் சிந்தனையைக் கூர்மை படுத்துவார். தொழில் ஸ்தானத்தில் பல கிரகங்கள் அமர்ந்து, அவர்களை குரு பார்ப்பதால் தொழில் முன்னேற்றமாக நடைபெறும். புத னும் சூரியனும் இணைந்து தொழில் ஸ்தானத்தில் இருப்பதால் தொழிலை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் வாய்ப்புகள். நீண்ட நாட்களாக வராத கடன் வசூலாகும். பெற்றோர்கள் உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் தருவார்கள். செவ்வாய் சுக்கிரன் பத்தாம் இடத்தில் அமர்ந்து சகல விதங்களிலும் உங்கள் முயற்சியை வெற்றி அடையச் செய்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளும் இந்தியாவும்!



சமாதான உடன்படிக்கைக்கு பின்னரான காலப் பகுதியில் இந்தியாவைக் கையாளுவதில் தமிழர் தரப்பு இழைத்த மாபெரும் தவறையும் அதற்கு காரணமான முக்கிய சக்திகளையும் பற்றிய தெளிவான விளக்கப்பாட்டை தமிழ்க் கட்சிகள் கொண்டிருப்பது அவசியம். மாகாணசபை முறைமையின் இன்றைய சீரழிவுக்கு தமிழர் தரப்பும் கணிசமானளவுக்கு காரணம் என்பதும் வெளிப்படையாக ஒத்துக் கொள்ள வேண்டிய ஒரு விடயமாகும்.





♦ வீரகத்தி தனபாலசிங்கம்

வழமை போன்றே வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகள் கடந்த வாரமும் இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கரை சந்திப்பதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தின்போது மாகாணசபை தேர்தல்களை விரைவில் நடத்துவதுடன் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இந்தியா இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருந்தன.

கடந்த மாதம் டித்வா சூறாவளியின் விளைவான பேரழிவில் இருந்து இலங்கை மீண்டெழுவதற்கான இந்தியாவின் உதவித் திட்டத்தை அறிவிப்பதற்காக ஜெய்சங்கர் பிரதமர் நரேந்திர மோடியின் விசேட தூதுவராக கொழும்புக்கு ஒரு நாள் விஜயமாக கடந்த செவ்வாய்கிழமை வந்திருந்தார்.

இலங்கை தமிழரசு கட்சி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றின் தலைவர்கள் இந்தியா இல்லத்தில் ஜெய்சங்கரை கூட்டாகச் சந்தித்துப் பேசினர். அவரிடம் கூறவேண்டிய விடயங்கள் குறித்து இந்த தலைவர்கள் முன்கூட்டியே தங்களுக்குள் வேறு ஒரு இடத்தில் கலந்தாலோசனை நடத்தியது இந்த தடவை வித்தியாசமான ஒரு அணுகுமுறையாக அமைந்திருந்தது. தங்களுக்குள் முரண்பாடுகள் இருக்கின்ற போதிலும், தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் பேசும் போது தங்களுக்குள் ஒரு குறைந்தபட்ச புரிந்துணர்வாவது இருப்பது அவசியம் என்று இப்போது தமிழ் அரசியல்வாதிகள் சிந்திக்கத் தொடங்கியிருக்கின்றார்கள் போலும்.

இயற்கை அனர்த்தத்தினால் வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நிவாரண மற்றும் புனரமைப்பு பணிகள் குறித்தும் இந்திய வெளியுறவு அமைச்சருடன் பேசிய இந்த தலைவர்கள் மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கு இந்தியா இலங்கையை வலியுறுத்த வேண்டும் என்ற கோரிக்கையையே பிதானமாக முன்வைத்தனர். அத்துடன் பிரதமர் மோடிக்கான கடிதம் ஒன்றையும் அவரிடம் இவர்கள் கையளித்தனர்.

மாகாணசபைகளை பற்றி வழமையாக அக்கறை காட்டாமல் இருந்துவரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் மாகாண சபை தேர்தல்களை நடத்த வேண்டியது அவசியம் என்று ஏனைய தலைவர்களுடன் சேர்ந்து ஜெய்சங்கரிடம் கூறியிருக்கிறார். தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளின் தலைவர்களுடனான சந்திப்புக்களை இடைநடுவில் நிறுத்திவிட்டு ஜெய்சங்கருடனான சந்திப்புக்காக அவர் அவசரமாக கொழும்பு திரும்பினார்.

மாகாணசபை தேர்தல்களை நடத்த வேண்டிய அவசியத்தை மற்றைய தமிழ் தலைவர்களுடன் சேர்ந்து இந்திய வெளியுறவு அமைச்சருக்கு கூறிய அதேவேளை கஜேந்திரகுமார் இலங்கையில் ஒற்றையாட்சிக்குள் அதிகாரப்பரவலாக்கலை உருப்படியாகச் செய்வது சாத்தியமில்லை என்றும் அதனால் கூட்டாட்சி **(Federal system)** அடிப்படையிலான ஏற்பாடு மாத்திரமே இனப்பிரச்சினைக்கு தீர்வாக அமைய முடியும் என்றும் சுட்டிக்காட்டியதன் மூலமாக தன்னை மற்றையவர்களிடம் இருந்து வேறுபடுத்துவதில் அக்கறை காட்டினார்.

ஆனால், தமிழரசு கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானம் உடனடியாகவே தாங்களும் இனப்பிரச்னைக்கு நிலைபேறான அரசியல் தீர்வாக கூட்டாட்சி முறையே இருக்கமுடியும் என்ற நிலைப்பாட்டை கொண்டிருப்பதாகவும் தங்களைப் பொறுத்தவரை கூட்டாட்சி என்ற அடையாளப் பெயரில் அல்ல, அதிகாரங்களின் உள்ளடக்கத்திலேயே அக்கறை கொண்டிருப்பதாகவும் கூறினார்.

ஜெய்சங்கருடனான சந்திப்புக்கு பிறகு கஜேந்திரகுமார் கடந்த வாரம் நடத்திய செய்தியாளர்கள் மகாநாட்டில் தெரிவித்த கருத்துக்கள் மற்றைய தமிழ்க்கட்சிகளுக்கும் தனது கட்சிக்கும் இடையிலான கொள்கை வேறுபாட்டை விளக்கும் நோக்கில் அமைந்திருந்தன. தமிழரசு கட்சியும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியும் மாகாணசபை தேர்தல்களிலும் 13 வது திருத்தத்தின் நடைமுறைப்படுத்தலிலும் அக்கறை செலுத்திய அதேவேளை கூட்டாட்சி முறையின் அடிப்படையிலான அரசியலமைப்பை இலங்கை அரசாங்கம் கொண்டுவருவதற்கு இந்தியா ஊக்கம் கொடுக்க வேண்டும் என்பதை ஜெய்சங்கரிடம் வலியுறுத்தியுறுத்துவதில் மாத்திரமே கவனம் செலுத்தியதாக கூறினார்.

பிரதமர் மோடிக்கான கடிதத்தின் உள்ளடக்கம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும் அது என்றைக் குமே தெரிய வராமலும் போகலாம் என்றும் கூட கஜேந்திரகுமார் செய்தியாளர்களிடம் கூறினார். அந்த கடிதத்தில் மாகாணசபை தேர்தல்களை விரைவாக நடத்துவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்குதலை கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை உள்ளடங்கியிருக்கிறதே தவிர, கூட்டாட்சிமுறை பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று நம்பகமாகத் தெரியவருகிறது.

மாகாணசபை தேர்தல் தொடர்பிலான தமிழ்க் கட்சிகளின் வலியுறுத்தலோ அல்லது கூட்டாட்சி முறை பற்றிய நிலைப்பாடோ ஜெய்சங்கருக்கு புதியவை அல்ல.

வெளியுறவு அமைச்சராக மாத்திரமல்ல, அதற்கு முன்னர் வெளியுறவு செயலாளராக பதவி வகித்த நாட்களிலும் அவர் இலங்கை தமிழ்க் கட்சிளுடன் பல தடவைகள் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருக்கிறார். அவர் வெளியுறவு செயலாளராக இருந்தபோது கொழும்பில் தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பு ஒன்றில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பு குறித்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கவனத்துக்கு கொண்டுவந்த சந்தர்ப்பத்தில் இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கைக்கு பிறகு பெருமளவு நிகழ்வுகள் இடம்பெற்றுவிட்டன என்றும் மீண்டும் இரு மாகாணங்களின் இணைப்பு குறித்து கொழும்புடன் பேசக்கூடிய நிலையில் இந்தியா இல்லை என்றும் கூறியிருந்தார்.

வெளியுறவு அமைச்சராக வந்த பிறகு கொழும்பில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுடனான சந்திப்பு ஒன்றில் 13 வது அரசியலமைப்பு திருத்தத்தை தானும் மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக நடைமுறைப்படுத்தாமல் இருந்துவரும் இலங்கை அரசாங்கங்களிடம் கூட்டாட்சி கோரிக்கையை எவ்வாறு முன்வைக்க முடியும் என்று ஜெய்சங்கர் கேள்வியெழுப்பினார். கஜேந்திரகுமாரும் கலந்துகொண்ட அந்த சந்திப்பில் கூட்டாட்சி முறை குறித்து வாழ்நாள் பூராவும் பேசிக் கொண்டிருக்கலாம் என்றும் அவர் கூறினார்.

கடந்த வாரத்தைய சந்திப்பில் அவர் கூட்டாட்சி முறையைப் பற்றி முன்னரைப் போன்று எதையும் கூறியதாக தெரிய வரவில்லை. மாகாணசபை தேர்தல்களை விரைவில் நடத்துவதற்கு கொழும்பை இந்தியா வலியுறுத்த வேண்டும் என்ற தமிழ்த் தலைவர்களின் வேண்டுகோளுக்கு கூட நேரடியான பதில் எதையும் அவர் கூறவில்லை என்று அதில் கலந்துகொண்ட தலைவர் ஒருவர் தெரிவித்த தகவல்களின் மூலம் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. பதிலாக, இயற்கை அனர்த்தம் பேரழிவை ஏற்படுத்தியிருக்கும் சூழ்நிலையில் மாகாணசபை தேர்தல்களை எவ்வாறு நடத்தச் செய்வது என்று தமிழ்க் கட்சிகளின் தலைவர்களிடமே ஜெய்சங்கர் ஆலோசனை கேட்கும் தொனியில் பேசியதாகவும் தெரிய வருகிறது.

தேசிய மக்கள் சக்தியின் பிரதான அங்கத்துவக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனவின் ( ஜே.வி.பி. ) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா புதுடில்லிக்கு வரும்போது மாகாணசபை தேர்தல்களை விரைவாக நடத்துவது குறித்தும் மாகாணசபைகள் முறைமையை பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்தும் அவரிடம் வலியுறுத்திக் கூறுமாறு தமிழ் தலைவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கும் ஜெய்சங்கர் பதில் எதையும் கூறாமல் சகலவற்றையும் அவதானித்துக் கொண்டிருந்ததாக சந்திப்பில் கலந்துகொண்ட ஒரு தலைவர் கூறினார்.

சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதற்கு பின்னரான 38 வருட காலத்தில் 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் இலங்கையை வழிக்குக் கொண்டுவர இந்தியாவினால் முடியவில்லை. பெருமளவுக்கு மாறிவிட்ட புவிசார் அரசியல் நிலைவரங்களுக்கு மத்தியில் ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவின் அரசாங்கத்தின் மீது இனப்பிரச்சினை விவகாரத்தில் எந்தவிதமான நெருக்குதலையும் கொடுப்பதற்கு மோடி அரசாங்கம் நாட்டம் காட்டும் என்று எதிர்பார்க்கவும் முடியாது.

ஆனால், மாகாணசபை தேர்தல்களை நடத்துவதுடன் இலங்கையின் அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டை இந்தியா தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டேயிருக்கும் என்பதை மாத்திரம் எதிர்பார்க்கலாம். அதுவும் குறிப்பாக, இயற்கை அனர்த்தத்தின் அழிவுகளில் இருந்து நாட்டை மீளக்கட்டியெழுப்புவதில் தீவிர கவனத்தை செலுத்துகின்ற ஒரு அரசாங்கத்திடம் மாகாணசபை தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்று உடனடியாக கேட்பதற்கு மோடி அரசாங்கம் முன்வரும் என்றும் எதிர்பார்க்க முடியாது.

மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கத்தைக் கோரும் அரசியல் போராட்ட இயக்கம் ஒன்றை ஜனவரி முதல் முன்னெடுக்கப் போவதாக தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் சூறாவளிக்கு முன்னர் கூறியிருந்தார். மாகாணசபை தேர்தல்களை நடத்துவதில் அக்கறையில்லாமல் இருந்துவரும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அவற்றை மேலும் பின்போடுவதற்கு சூறாவளியின் வடிவில் வசதியான சாட்டு ஒன்று கிடைத்திருக்கிறது.

இந்தியாவிடம் வேண்டுகோள் விடுப்பதை தவிர, தமிழ்க் கட்சிகளுக்கு வேறு மார்க்கமே இல்லை. ஒற்றையாட்சிக்குள் அரசியல் தீர்வை முடக்காமல் கூட்டாட்சி அடிப்படையிலான தீர்வொன்றை புதிய அரசியலமைப்பின் மூலம் அறிமுகப்படுத்துவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு இந்தியாவைக் கொண்டு நெருக்குதல் கொடுப்பதற்கு தமிழக அரசியல் கட்சிகளின் உதவியை கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ் தேசியப் பேரவை நாடியிருக்கிறது.

தமிழகத்தில் இன்னமும் நான்கு மாதங்களில் சட்டசபை தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில் பிரசாரங்களில் மீண்டும் இலங்கை தமிழர் பிரச்சினையை முக்கியத்துவம் பெறச் செய்வதற்கான ஒரு முயற்சியாகவும் இதை சில அவதானிகள் கருதுகிறார்கள். மாகாணசபை தேர்தல் தொடக்கம் கூட்டாட்சிக் கோரிக்கை வரை இலங்கை தமிழர்களின் கதியை இந்தியாவின் காலடியில் சமர்ப்பித்துவிட்டு நிற்கின்றன தமிழ்க் கட்சிகள். இலங்கை அரசாங்கத்தை அசைப்பதற்காக இந்திய அரசாங்கத்தை முதலில் அசைப்பதே தற்போது பெரிய பிரச்சினையாக இருக்கிறது.

சமாதான உடன்படிக்கைக்கு பின்னரான காலப் பகுதியில் இந்தியாவைக் கையாளுவதில் தமிழர் தரப்பு இழைத்த மாபெரும் தவறையும் அதற்கு காரணமான முக்கிய சக்திகளையும் பற்றிய தெளிவான விளக்கப்பாட்டை தமிழ்க் கட்சிகள் கொண்டிருப்பது அவசியம். மாகாணசபை முறைமையின் இன்றைய சீரழிவுக்கு தமிழர் தரப்பும் கணிசமானளவுக்கு காரணம் என்பதும் வெளிப்படையாக ஒத்துக் கொள்ள வேண்டிய ஒரு விடயமாகும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சியை நிலைநிறுத்துவதற்கு சிறந்த முறைமைகள் அவசியம்!



கலாநிதி ஜெகான் பெரேரா

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதனிடம் எதிர்பார்க்கப்பட்ட நிறுவனரீதியான சீர்திருத்தங்களில் ஈடுபடாமல் இருந்து வருவது அதன் முதல் வருடத்தில் முக்கியமாக அவதானிக்கக்கூடியதாக இருந்த ஒரு அம்சமாகும். முன்னைய அரசாங்கங்கள் செய்ததைப் போன்று இந்த அரசாங்கம் அதன் அதிகாரத்தை அல்லது பாராளுமன்றத்தில் அதற்கு இருக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை துஷ்பிரயோகம் செய்யவுமில்லை.

மக்களின் உயர்ந்த எதிர்பார்ப்புகளுடனும் அதிவிசேடமான ஆணையுடனும் அரசாங்கம் தெரிவு செய்யப்பட்டிருந்த பின்புலத்தில் இந்த அவதானம் முன்வைக்கப்படுகிறது.

எதிர்க்கட்சியில் இருந்தவேளையில் ஜனதா விமுக்தி பெரமுனயும் (ஜே.வி.பி.) தேசிய மக்கள் சக்தியும் நாட்டில் நல்லாட்சி முறைமைகள் உருவாக்கப்பட வேண்டும் குரல் கொடுப்பதில் முக்கியமான ஒரு பாத்திரத்தை வகித்தன. அவற்றின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதியையும் அந்தப்பதவி உருவகித்து நிற்கும் அதிகாரக் குவிப்பையும் ஒழிப்பது, நீதித்துறை, பொதுச் சேவை, பொலிஸ் ஆகிய முக்கிய அரச நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் சுயாதீன நிறுவனங்களை பலப்படுத்துவது மற்றும் பயங்கரவாதத்தடைச் சட்டம், இணையவெளி பாதுகாப்புச்சட்டம் போன்ற அடக்குமுறைச் சட்டங்களை நீக்குவது அல்லது மாற்றியமைப்பது உட்பட அரசியலமைப்புச் சீர்திருத்தங்களை அவர்கள் வலியுறத்தி நின்றார்கள்.

சராசரியாக மூன்று தொடக்கம் ஐந்து சதவீத வாக்குகளைப் பெற்றுவந்த ஒரு அரசியல் கட்சி பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்ட பலம்பொருந்திய ஒரு அரசாங்கத்தை அமைக்கும் கட்சியாக கண்டிருக்கும் உருநிலை மாற்றம் ஜே.வி.பி - தேசிய மக்கள் சக்தியில் பொதுமக்கள் வைத்த நம்பிக்கைக்கு ஒரு உறுதிச்சான்றாகும். அந்த நம்பிக்கை 1988 - 1990 கிளர்ச்சியின் கசப்பான அனுபவங்களுக்கு பிறகு மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான காலப்பகுதியில் ஜே.வி.பி.கடைப்பிடித்த ஒழுக்கம், கட்டுப்பாட்டின் விளைவேயாகும்.

ஜே.வி.பி.யின் சொற்ப எண்ணிக்கையான பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னைய அரசாங்கங்களின் கொள்கைகளையும் செயற்பாடுகளையும் நன்கு ஆராய்ந்து பாரா ளுமன்ற விவாதங்களில் ஆக்கபூர்வமான விமர்சனங்களை முன்வைத்த முறையும் 2004 சுனாமி போன்ற அனர்த்தங்களின்போது ஜே.வி.பி.யினர் செய்த சேவைகளும் மக்களின் நம்பிக்கையை வென்றெடுத்தன.

அந்த நம்பிக்கையை கடந்தகால அதிகார வர்க்கத்தவருக்கு எதிராக குடிமக்களை ஐக்கியப்படுத்திய அறகலய போராட்ட இயக்கம் மேலும் வலுப்படுத்தியது. தற்போது ஒரு வருடத்துக்கும் அதிகமான காலமாக அந்த நம்பிக்கையை அரசாங்கம் சேதமுறாமல் காப்பாற்றியிருக்கிறது.

இத்தகைய பின்புலத்தில், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதில் காணப்படும் நீண்ட தாமதமும் அதை இன்னொரு சட்டத்தின் மூலம் பதிலீடு செய்வதற்கான தற்போதைய முயற்சியும் மனித உரிமைகளை மதிப்பவர்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது. அதேபோன்றே, அரசினால் செலவிடப்படுகின்ற பணத்துக்கான பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கு அதிமுக்கியமான கணக்காய்வாளர் நாயகத்தை நியமிப்பதில் காணப்படும் தாமதமும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் குறிப்பாக, இன, மதச் சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிராக துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வந்திருப்பதன் காரணமாக பெரும் பழிப்புக்குள்ளானது. அரசுக்கு எதிரானவர்கள் என்று கருதப்பட்டவர்களுக்கு (1988 - 1990 காலப்பகுதியில் ஜே.வி.பி. யினரும் இதில் அடங்குவர்) எதிராக கட்டுப்பாடின்றி பயன்படுத்தப்பட்ட நீண்ட வரலாறு ஒன்றையும் பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டிருக்கிறது. தற்போது வெளியிடப்பட்டிருக்கும் பயங்கரவாதத்தில் இருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவு பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கிப் பதிலீடு செய்வதற்கான புதிய முயற்சியாகும்.

துரதிர்ஷ்டவசமாக, அந்த வரைவு பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பதிலீடு செய்வதற்காக முன்னர் கொண்டுவரப்பட்டு தோல்விகண்ட 2018 பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், 2023 பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் ஆகியவற்றை கட்டமைப்பிலும் தர்க்கத்திலும் ஒத்திருக்கும் ஆபத்தைக் கொண்டிருக்கிறது.

சட்டத்தின் ஆட்சி மற்றும் அடிப்படை உரிமைகள் மீதான கடப்பாட்டை உறுதிப்படுத்துகின்ற போதிலும், பயங்கரவாதத்தில் இருந்து அரசாங்கத்தைப் பாதுகாக்கும் சட்டவரைவு பயங்கவாதத் தடைச்சட்டத்தின் அடிப்படைக் குறைபாடுகளை மீண்டும் அறிமுகப்படுத்துகிறது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் புதிய வரைவு தொடர்பில் வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்றில் "நபர் ஒருவருக்கு எதிராக தடுப்புக்காவல் உத்தரவு பிறப்பிக்கப்படும் பட்சத்தில், அந்த உத்தரவை விளக்கமறியலையும் தடுப்புக்காவலையும் சேர்த்து இரு வருடங்களுக்கு நீடிக்கமுடியும்" என்று கூறியிருக்கிறது.

குற்றச்செயல் ஒன்றுக்காக குற்றஞ்சுமத்தப்படாமல் ஒருவர் இரு வருடங்கள் வரை தடுப்புக்காவலில் வாட வேண்டியிருக்கும் என்பதே இதன் அர்த்தமாகும். அத்தகைய நீண்டகாலப்பகுதி ஆட்களை இலக்கு வைப்பதில் அரசாங்கத்துக்கு இருக்கும் அதிகாரங்கள் தொடர்பில் கேள்விகளை எழுப்புகிறது. கடந்த காலத்தில் நீண்டகால விளக்கமறியல்களின் விளைவான துஷ்பிரயோகம் மற்றும் வன்முறைகளின் வரலாற்றை இந்த சந்தர்ப்பத்தில் நினைத்துப் பார்க்க வேண்டியிருக்கிறது.

உத்தேச சட்டத்தின் கீழ் பயங்கரவாதத்துக்கு கொடுக்கப்பட்டிருக்கும் பரந்தளவிலான வரைவிலக்கணம் குறித்து மனித உரிமைகள் சட்டத்தரணி எர்மிசா ரெகால் எச்சரிக்கை செய்திருக்கிறார். "எதிர்ப்பை வெளிக்காட்டுவதையும் ஒத்துழையாமையையும் 'பயங்கரவாதம்' என்று விளக்கம் கூறுவதற்கு இந்த வரைவிலக்கணம் அதிகாரிகளுக்கு அதிகாரமளிக்கிறது. விகிதச் சமானமில்லாத முறையிலும் அதீதமாகவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு சட்டரீதியான அங்கீகாரத்தை அது அனுமதிக்கிறது" என்று அவர் கூறியிருக்கிறார்.

அரசாங்கத்தின் அதிகார துஷ்பிரயோகத்துக்கு எதிரான நியாயபூர்வமான - அமைதியான போராட்டங்களை பயங்கரவாத நடவடிக்கைகள் என்று வகைப்படுத்த முடியாது. அத்தகைய அதிகாரங்களை தொடர்ந்தும் வைத்திருப்பதற்கான விருப்பம் கடந்த காலத்தைய கட்டமைப்புக்களை நெருக்கடியொன்றின்போது தங்களுக்கு பயனுடைய முறையில் பயன்படுத்த முடியும் என்று அரசாங்கம் உணருகிறது என்ற ஊகத்தையே பிரதிபலிக்கிறது.

**சுயாதீனமான நிறுவனங்களைப் பாதுகாப்பதும் மக்கள் என்ன காரணத்துக்காக வாக்களித்தார்களோ அதற்காக நீதியான சட்டங்களை இயற்றுவதும் அரசாங்கத்துக்கு இருக்கின்ற சவாலாகும். அந்த சவாலை சரியான முறையில் கையாளுவதற்கான சந்தர்ப்பமும் இந்த அரசாங்கத்துக்கு இருக்கிறது.**




ஜே.வி.பி.- தேசிய மக்கள் சக்தியின் மத்தியில் தற்போது காணப்படுகின்ற ஒழுங்கு, கட்டுப்பாட்டின் காரணமாக தங்களால் நியமிக்கப்பட்டவர்கள் நம்பிக்கைக்கு துஷ்பிரயோகம் செய்யமாட்டார்கள் என்று அரசாங்கத் தலைவர்கள் அனுமானிக்கக்கூடும்.

ஆனால், பிரத்தியேகமான சூழ்நிலைகளைக் கையாளுவதற்கென்று கொண்டுவரப்பட்ட கொடுமையான சட்டங்களுடனான இலங்கையின் அனுபவம் அந்த சட்டங்கள் வழமையான ஆட்சிமுறைக்கான கருவிகளாக மாறிவிடுவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்பதையே வெளிக்காட்டுகிறது.

பொதுமக்களிடமிருந்து கருத்துக்களை அறிவதற்காக இரு மாதகால அவகாசத்தை அரசாங்கம் வழங்கியிருப்பது இந்த விடயத்தில் நேர்மறையான அம்சமாகும். சிவில் சமூகத்தினால் முன்வைக்கப்படக்கூடிய கருத்துக்களும் கருத்தில் எடுக்கப்படுமானால், அந்த கால அவகாசம் அர்த்தமுடையதாக இருக்கும்.

ஆறு மாதங்களுக்கென்று கொண்டுவரப்பட்டு தற்போது 46 வருடங்களாக நடைமுறையில் இருந்துவரும் பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற தேசிய பாதுகாப்புச் சட்டங்கள் நீண்டகாலம் நடைமுறையில் இருந்துவிட்டால் அவற்றை அகற்றுவது சிரமம் என்பதை அரசாங்கம் கவனத்தில் எடுக்கவேண்டியது அவசியமாகும்.

தனிப்பட்ட தலைவர்களின் மட்டத்தில் காணப்படக்கூடிய நேர்மை அவசியமானது என்றபோதிலும், நாளடைவில் அது நல்லாட்சியை உத்தரவாதம் செய்வதற்கு போதுமானதல்ல. தலைவர்களுக்கோ அல்லது அரசாங்கங்களுக்கோ நிரந்தர[illegible] அவையெல்லாம் நிரந்தரமற்றவையே. இங்குதான் நிறுவனரீதியான சீர்திருத்தங்கள் இன்மை குறிப்பாக,(நிதிப் பொறுப்புக் கூறல் மற்றும் ஊழலின்மை என்று வரும்போது) கவனத்துக்குரியதாகிறது.

டித்வா சூறாவளிக்கு பிறகு உச்சபட்ச வேகத்தில் விநியோகிக்கப்பட வேண்டிய அவசர நிவாரணப் பொருட்களை பெருமளவில் கொள்வனவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 2004 சுனாமி அனர்த்தத்தையடுத்து உதவிகள் காணாமல் போனதைப் போன்ற குளறுபடிகள் மீண்டும் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்வதற்கு உகந்த நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியதும் கடுமையான கண்காணிப்பை செய்ய வேண்டியதும் அவசியமாகிறது.

தற்போது குளறுபடிகள் தொடர்பான முறைப்பாடுகள் இல்லை. அதற்காக அரசாங்கத்தைப் பாராட்ட வேண்டும். என்றாலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். அவை தனிப்பட்டவர்கள் மீதான நம்பிக்கையை அல்ல மேற்பார்வை செய்யும் நிறுவனங்களின் வலிமையிலும் சுதந்திரத்திலுமே தங்கியிருக்க வேண்டும்.

இந்த பின்புலத்திலேயே, அரசாங்கம் தனக்கு விருப்பமானவர்களை கணக்காய்வாளர் நாயகமாக நியமிப்பதற்கு மேற்கொள்ளும் முயற்சிகள் கசப்பான கடந்த காலத்தை நினைவுபடுத்துகின்றன. இது சிவில் சமூகத்துக்கு பெரும் ஏமாற்றத்தை கொடுத்திருக்கிறது. இறுதியாக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டவர் அந்த பதவிக்கு பொருத்தமானவராக இல்லாமல் இருந்ததை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது பதில் கணக்காய்வாளர் நாயகமாக எவரையோ நியமிப்பதற்காக காலத்தைக் கடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது என்ற ஐயுறவு பிறக்கிறது.

கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கான ஜனாதிபதியின் நியமனத்தை அங்கீகரிப்பதற்கு அரசியலமைப்புப் பேரவை நான்காவது தடவையாக மறுத்திருக்கிறது. அரசியலமைப்பு பேரவையின் மூன்று சுயாதீன சிவில் சமூக உறுப் பினர்களினதும் பதவிக்காலம் ஜனவரியில் முடிவடைகி றது. அதனால் தனக்கு விருப்பத்துக்குரிய மூவரை நிய மித்து அரசாங்கம் எதிர்காலத்தில் அதன் நடவடிக்கை களை தன்னெண்ணப்படி முன்னடுப்பதற்கு வாய்ப்பு கிடைக்கும்.

நிரந்தரமான கணக்காய்வாளர் நாயகம் ஒருவரை நியமிக்கத் தவறியமை முக்கியமான தருணத்தில் நிறுவனரீதியான ஒரு வெற்றிடத்தை தோற்றுவித்திருக்கிறது. கணக்காய்வாளர் நாயகம் பதவி கண்காணிக்கும் கடமையைக் கொண்டது. அது சேவைகள் ஒழுங்காக முன்னெடுக்கப்படுவதையும் பொது நிருவாகத்தில் நேர்மை மேம்படுத்தப்படுவதையும் செயற்பாடுகளும் பொறுப்புக்கூறலும் சுயாதீனமாக கண்காணிக்கப்படுவதையும் உறுதிசெய்கிறது.

"முன்னைய கண்க்காய்வாளர் நாயகம் ஓய்வு பெற்றதற்கு பின்னரான தொடர் நிகழ்வுகள் பரந்தளவில் அரசாங்கத்தின் இயலாமையையும் அரசாங்கத்தின் ஒரு தோல்வியையும் வெளிக்காட்டுகின்றன. கணக்காய்வாளர் நாயகம் பதவி அரசியலமைப்பு ரீதியில் தெளிவான முக்கியத்துவம் வாய்ந்த பாத்திரத்தைக் கொண்டிருக்கிறது என்ற போதிலும், அதற்கான நியமனச் செயன்முறை காலத்தை இழுத்தடிப்பதாகவும் தெளிவற்றதாகவும் இருப்பது அரசியல் துணிவாற்றல் மற்றும் பொறுப்புக்கூறல் மீதான கடப்பாடு பற்றி பாரதூரமான கேள்விகளைக் கிளப்புகிறது" என்று ட்ரான்பெரன்சி இன்டர்நாஷனல் கூறியிருக்கிறது.

நாட்டை ஆட்சி செய்வதற்கு தங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் ஆணையை தங்களது நம்பிக்கைக்கு பாத்திமானவர்களின் மூலம் நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம் என்ற நிலைப்பாட்டை அரசாங்க தலைமைத்துவம் எடுத்திருக்கிறது போன்று தெரிகிறது. இந்த நேரத்தில் கணக்காய்வாளர் நாயகம் நியமனம் தொடர்பில் அரசாங்கம் கடைப்பிடிக்கும் அணுகுமுறைக்கு அதுவே காரணமாக இருக்கலாம்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பதிலீடு செய்வதில் அரசாங்கத்தின் அணுகுமுறைக்கும் அதுவே காரணமாக இருக்கலாம். தங்களது கண்காணிப்பின் கீழ் துஷ்பிரயோகம் இடம்பெற்றுவிடக்கூடாது என்பதில் அரசாங்கத் தலைவர்கள் கடுமையான உறுதிப்பாட்டைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள் போலும். ஆனால், இந்த அணுகுமுறை ஆபத்துக்கள் நிறைந்தது.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசமைப்பு உருவாக்கமும் மாகாண சபைக்கான தேர்தலும் காணாமலாக்கப்படும் தீர்வுகள்!

பனங்காட்டான்



பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வரையினானே என்று ஒவ்வோர் ஆண்டு நிறைவிலும், புத்தாண்டு பிறப்பிலும் நாம் கூறுவது வழமை.

அரசியல் கருத்தாடல்கள், பத்தி எழுத்தாளர்கள் மறவாது இதனைச் சுட்டி விமர்சிப்பது ஆண்டாண்டுதோறும் இடம்பெறும். இதனை ஒரு முதுமொழியென்றும் கூறுவதுண்டு. பவுணந்தி முனிவர் கூறிய இந்த வாக்கியத்தின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டால் வாழ்வில் எதனைத் தவிர்ப்பது, எது பொருந்திப் போகாதது, எதனை மேம்படுத்தி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற நியாயத்தை தெரிந்து கொள்ளலாம்.

இதில் முக்கியமானது அரசியல். அரசியலை ஆங்கிலத்தில் பொலிரிக்ஸ் என்பர். இது பொலிறிக்ஸ் என்ற பெயரிலிருந்து பெயர்ந்ததாகக் கூறுவர். பொலி என்றால் பல என்றும் றிக்ஸ் என்றால் தந்திரம், வஞ்சகம் என்றும் அகராதி அர்த்தம் சொல்கிறது.

ஆக, ஏமாற்றுத்தனம், தந்திரப் போக்கு என்பவைகள் பொலிறிக்ஸின் ஆதாரங்கள் என்று கொள்ளப்படுகிறது. இதனை தங்கள் வாழ்வாகக் கொள்ளும் அரசியல்வாதிகள் யார் என்பதை இதனூடாக அறிந்து கொள்ளலாம். அரசியலும், அரசியல்வாதிகளும் பொதுவாழ்வில் பிரிக்க முடியாதவர்கள். இவர்களைப் புரிந்து கொண்டும், தெரிந்து கொண்டும் மக்கள் வாழப் பழக வேண்டுமென்பதை, நம்ப நட நம்பி நடவாதே எனக் கொள்ளலாம்.

புதுவருடத்தில் எதிர்பார்ப்பவைகளை எழுத முனையும்போது ஒன்றே ஒன்று முதலில் வரும். அது கடந்தாண்டின் கடைசி வாரத்தில் அல்லது இந்த ஆண்டின் முதல்வாரத்தில் எழுதப்பட்ட விடயமாக இது இருக்கும். கடந்த வருட கடைசியில் இப்பத்தியை எழுதும்போது அநுர குமர திஸ்ஸநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற முதல் நூறு நாட்களின் மீள்பார்வையாக இருந்தது. ஆட்சித் தலைவர் ஒருவரின் ஆளுமையைத் தரிசிப்பதற்கு அவரது பதவிக்கால முதல் நூறு நாட்கள் போதாது. இருப்பினும், அவரது பாதை எதை நோக்கியதாக உள்ளதென்பதை ஓரளவு கண்டுகொள்ள இக்காலம் பயன்பட்டது.

இவரது தேர்தல் கால மகுட வாசகமாக ஊழல் ஒழிப்பும், வறுமை ஒழிப்பும் அமைந்திருந்தன. இவரது தேசிய கொள்கையாக, அனைவரும் ஏற்றுக்கொள்ளும் புதிய அரசியல் அமைப்பு, விரைவான மாகாண சபைத் தேர்தல் என்பவை இடம்பெற்றன. முன்னைய இரண்டும் நாடு முழுவதுக்குமானதாகவும், பின்னைய இரண்டும் தமிழ் மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான வழிகளாகவும் தோற்றம் காட்டின.

முன்னைய ஆட்சிக் காலங்களில், முக்கியமாக ராஜபக்ச குடும்ப ஆட்சியின் போது உச்சத்தைத் தொட்ட ஊழலை

> **இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்படுத்தி 13ம் திருத்தத்தின் ஊடாக மாகாண சபை முறைமையை உருவாக்கிய இந்தியா இது விடயத்தில் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடக்குமாயின், இவர்களுடன் தமிழர் தரப்பு பேச்சு நடத்துவதால் என்ன பயன்?**

ஒழிப்பதும், ஊழல்வாதிகளை அடையாளம் காண்பதுமாகக் காட்டி சட்டத்தின் முன் நிறுத்துவதே அநுர குமரவின் தலையாய செயற்பாடாக நம்பிக்கை தரப்பட்டது. ஊழல்வாதிகளால் முடக்கப்பட்ட கோடானுகோடி பணம் நாட்டுக்கு கொண்டு வரப்படும் எனவும் மேடைகளில் கூவிக்கூவி சொல்லப்பட்டது.

கடந்த பதினைந்து மாத ஆட்சியில் ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக காட்சி ஏற்படுத்தப்பட்டது. முன்னைய ஆட்சிக் காலங்களில் ஊழல், மோசடி, லஞ்சம் தொடர்பாக பலர் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்கள். ஆனால், எவர் மீதும் குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனை வழங்கப்படவில்லை.

வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக சொல்லப்பட்ட பணத்தில் ஒரு ரூபா கூட இன்னமும் மீட்கப்படவில்லை. இது தொடர்பாக எவர்மீதும் குற்றப்பத்திரிகையும் தாக்கலாகவில்லை. கொழும்பு சொகுசு வாழ்க்கையிலிருந்து நீக்கப்பட்ட பின்னர் சொந்த ஊரான அம்பாந்தோட்டைக்கு தமது மூட்டை முடிச்சுகளுடன் சென்ற மகிந்த ராஜபக்ச, நோயாளி என்ற பெயரில் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொழும்பு திரும்பி, இப்போது கொழும்பில் குடியேறியுள்ளதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. மகன் நாமல் ராஜபக்சவின் எதிர்கால அரசியலுக்கு இது தேவையாக உள்ளது. அதே சமயம், உகண்டாவில் பதுக்கப்பட்டதாக தேர்தல் காலங்களில் கூறிய பணத்தை மீட்டு வாருங்கள் என ஆட்சித் தரப்பைப் பார்த்து நாமல் நையாண்டிச் சவால் விடும் நிலைமை இன்று உருவாகியுள்ளது.

அதேசமயம், அரசாங்க தரப்பிலும் பலர் மீது பல்வகையான குற்றச்சாட்டுகளை எதிர்க்கட்சியினர் ஆதாரங்களோடும், அது இன்றியும் சுமத்தி வருகின்றனர். அநுர குமர அரசின் முதலாவது சபாநாயகரான அசோக ரன்வல தேர்தல் காலத்தில் தமது கலாநிதி பட்டங்கள் பற்றி கூறியதை நிரூபிக்க முடியாததால் பதவி துறக்க நேர்ந்தது. வருமானத்துக்கு மேலதிகமாக சொத்துச் சேர்த்ததாக வணிகத்துறை அமைச்சர் வசந்த சமரசிங்க மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பு பிரதியமைச்சர் அநுர ஜெயசேகர போர்க்காலக் குற்றங்களிலும், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலிலும் சம்பந்தப்பட்டதாக எதிர்க்கட்சிகள் குரல் கொடுத்துள்ளன. எரிசக்தி அமைச்சர் குமர ஜெயக்கொடி முன்னர் உரக்கூட்டுத்தாபன தலைவராக இருந்தபோது அரசாங்கத்துக்கு பாரிய இழப்பை ஏற்படுத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. மூத்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க மீதும் எதிரணியினர் நாடாளுமன்றத்தில் குற்றங்களை முன்வைத்துள்ளனர்.



இவைகள் எதற்கும் ஆட்சித் தரப்பிலிருந்து பதிலளிக்கப்படவில்லை. நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இவைகளை ஜனாதிபதி அநுர குமர கண்டு கொள்ளவும் இல்லை.

மிக முக்கியமானதாக அறிவிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு பற்றி நம்பகமான பதில் அரச தரப்பில் காணப்படவில்லை. அடுத்த மூன்று ஆண்டுகளின் பின்னரே புதிய அரசியலமைப்பு பற்றி நடவடிக்கை எடுக்கப்படுமென்று தேசிய மக்கள் சக்தியின் தாய்க் கட்சியான ஜே.வி.பி. இந்த வருட முற்பகுதியில் தெரிவித்திருந்தது. அப்படியானால் அந்த அறிவிப்பு வரவே இன்னும் இரண்டு வாரங்கள் காத்திருக்க வேண்டும்.

புதிய அரசமைப்பு உருவாக்கும் விடயத்தில் தமிழரசு கட்சி உட்பட அனேகமான எதிர்கட்சிகளும் குரலளவில் முனைப்புக் காட்டுகின்றன. ஆனால் இவர்களால் எந்த நடவடிக்கையையும் எடுக்க முடியாதுள்ளது. புதிய அரசியலமைப்பை உருவாக்க அநுர அரசுக்கு வரலாற்று வாய்ப்பு கிடைத்துள்ளது என்றும், மூன்றிலிரண்டு பெரும்பான்மை இதற்கு ஏற்றதாக உள்ளது என்றும் சர்வதேச சிறுபான்மையினர் குழு வலியுறுத்தியுள்ளதாக இதனை எழுதும்போது ஒரு செய்தி வந்துள்ளது. வரவேற்க வேண்டிய அறிக்கை இது. ஆனால், யார் காதில் விழப்போகிறது?

1972ம் ஆண்டுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த சிறிமாவோ பண்டாரநாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்த்தன, சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, கோதபாய ஆகிய அனைவருக்கும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைத்தது. அநுர குமர மட்டும்தான் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துடன் நாடாளுமன்ற ஆட்சியைக் கைப்பற்றியதாக சொல்ல முடியாது.

சிங்களத் தரப்பில் துணிச்சல் இருந்திருந்தால் 1972, 1978 ஆண்டுகளில் புதிய அரசியல் யாப்பு தயாரிக்கப்பட்டபோது இதனைச் செய்திருக்க முடியும். ஆனால், எல்லோருமே சிங்களத் தலைமைகளாகவும், சிங்களவர்களே ஆளும் இனமாகவும் இருக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் ஆட்சி புரிந்ததால் இனப்பிரச்சனைக்கு தீர்வு இல்லாததாகவே போய்விட்டது.

இறுதியாக, மாகாண சபைத் தேர்தலை பார்க்கலாம். இத்தேர்தலுக்கு நிதி ஒதுக்கிவிட்டு பின்னர் நிதி இல்லையென்று காரணம் கூறி தேர்தலை நடத்தாது விட்டவர் ரணில் விக்கிரமசிங்க. இப்போதைய ஆட்சியாளர்களுக்கும் நல்லதொரு வசதியான உதாரணம் கிடைத்துள்ளது. நாட்டை மீழெழுப்புவதற்கு மட்டுமே முக்கியத்துவம் என்று கூறி தேர்தலை காலவரையறையின்ற ஒத்தி வைக்கலாம்.

தேர்தல் நிச்சயம் நடைபெறுமென்று ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்கள் கிளிப்பிள்ளைபோல சொல்லி வருகிறார்கள். 2026ல் இது நிச்சயம் நடைபெறுமென சில மாதங்களுக்கு முன்னர் சொல்லப்பட்டது..

டித்வா புயல் பேரிடரிலிருந்து நாட்டை மீழெழுப்ப வேண்டுமெனும் முக்கியத்துவம் இன்று முதன்மை பெற்றுள்ளது. இப்போதைக்கு மாகாண சபை தேர்தல் நடத்த முடியாதென்று கூறுவதற்கு ஆட்சித் தரப்புக்கு இது ஒரு நல் வாய்ப்பு. மக்கள் வாழ்வை புனரமைக்க சர்வதேசம் வழங்கும் நிதியுதவியை தேர்தல் நடத்துவதற்கு பயன்படுத்த முடியாதென ஒரேயடியாக தள்ளிவிடவும் ஆட்சியினர் முன்வரலாம்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை தங்கள் இஸ்டப்படி முடிவு செய்து, அதனடிப்படையில் 13ம் திருத்தத்தை ஏற்படுத்தி, அதனூடாக மாகாண சபை முறைமையை அறிமுகம் செய்த இந்தியா இப்போது அதனை ஓரம் தள்ளிவிட்டதுபோல செயற்படுகிறது. தமிழர் தரப்பினரை சந்திக்கும்போது மட்டும் இது விடயத்தில் தாம் அக்கறை உள்ளவர்கள்போல காட்டிக்கொள்ளப்படுகிறது. அண்மையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருடன் தமிழரசு கட்சியும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியும் சந்தித்த போது இவ்விடயத்தில் இலங்கையை இந்தியா வலியுறுத்த வேண்டுமென வாய் மூலமும் எழுத்து மூலமும் கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால், அமைச்சர் ஜெய்சங்கர் சரியான பதில் எதுவுமே கூறாது மழுப்பிவிட்டார். 2024ம் ஆண்டில் இதேபோன்ற ஒரு சந்திப்பில் தமிழர் பிரதிநிதிகளைப் பார்த்து இல்லாததை கேட்பதைவிட இருப்பவைகளை முழுமையாக பயன்படுத்துங்கள் என்று புரியும்படியான ஆலோசனையைக் கொடுத்தவர் இதே ஜெய்சங்கர்.

ஜனாதிபதி அநுரவைச் சந்தித்த இவர் இந்தியா இருக்க பயமேன் என்று கூறி 450 மில்லியனையும் இந்திய உதவியாக வழங்கிவிட்டு, தமிழர் பிரதிநிதிகளுக்கு பெப்பே காட்டிச் சென்றுவிட்டார். இவரைச் சந்தித்த தமிழர் பிரதிநிதிகள், யாவும் அக்களத்தே விட்டு வெறுங்கையோடு 'வீடு; திரும்பினர்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்துக் களமாடிய ஜே.வி.பி.யின் பிரதிநிதியான அநுர குமர திஸ்ஸநாயக்க ஜனாதிபதியானதும் மேற்கொண்ட முதலாவது வெளிநாட்டுப் பயணம் இந்தியாவுக்கானது என்பதை நினைவில் கொண்டால் - பழையன கழிந்ததும் புதியன புகுந்ததும் புரியும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எச்சரிக்கை!

உங்கள் வீட்டில் சட்டவிரோத இந்தியன் DTH (DishTV) இருக்கிறதா?

SUN DIRECT | TATA sky | dishtv | VIDEOCON d2h Digital DTH Service




இவற்றை விற்பனை செய்வதும், பயன்படுத்துவதும்
இரண்டுமே சட்டவிரோதம்!
அவசியமற்ற சட்டப்பிரச்சனைகளை தவிர்க்க,
இன்று எமது சட்டபூர்வ கேபிள் டிவி இணைப்பை
பெற்றுக்கொள்ளுங்கள்!

It has come to our notice that illegal DTH (Dish TV) service providers are advertising unverified services through social media platforms. While we have initiated measures to stop such illegal operations, TRC would like to notify all consumers to be cautioned of obtaining services from such illegal vendors or making any type of payments. You may refer http://www.trc.gov.lk/direct-to-home-satellite-broadcasting-operators.html for information on authorized DTH operators before subscribing for such services.

TRC Telecommunications Regulatory Commission of Sri Lanka

155 செனல்கள்
1420/- ரூபா
(அனைத்துவரிகளும் சேர்த்து)



புதிய இணைப்புக்கு
10,000/-
ரூபா
மட்டுமே!

தொடர்புக்கு
0707 888 999

Ask CABLE VISION
உங்கள் நம்பிக்கைக்குரிய கேபிள் டிவி சேவை!

நம்பகமான சேவை | தெளிவான படம் மற்றும் ஒலி | சட்டபூர்வ பாதுகாப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2025: அனுர அலையில் தொடக்கி மனிதாபிமான அலையில் முடிந்த ஆண்டு!



நிலாந்தன்

இந்த ஆண்டு பிறந்த போது நாட்டில் "அனுர அலை" வீசியது. இந்த ஆண்டு முடியும் போது புயலுக்கு பின்னரான ஒரு மனிதாபிமான அலை நிலவுகிறது. இரண்டுமே அலைகள்தான். இரண்டுமே அரசாங்கத்தைப் பலப்படுத்தும் அலைகள்தான்.

அனுர அலை என்பது தமிழ் நோக்கு நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகளை பின்னுக்குத் தள்ளியது. அது நாடாளுமன்றத் தேர்தலில் நிரூபிக்கப்பட்டது. தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பெரிய கட்சியாகிய தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்த அதியளவு ஆசனங்கள்தான் அரசாங்கத்துக்கும் கிடைத்தன. யாருக்கு வாக்களிக்கிறோம் என்பது தெரியாமலேயே தமிழ்மக்கள் வாக்களித்திருந்தார்கள். இப்படிப் பார்த்தால் இந்த ஆண்டு தொடங்கும் பொழுது அது தமிழ்த்தேசிய அரசியலுக்குப் பாதகமான ஓர் ஆண்டாகத்தான் தொடங்கியது.

அந்தத் தோல்விக்கான காரணங்களைக் கண்டுபிடித்து அவற்றைச் சரி செய்யும் விடயத்தில் தமிழ்த்தேசிய அரசியல் எந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறது? உள்ளூராட்சி சபைகளில் பெற்ற வெற்றிகள் சற்று ஆறுதல் தரக்கூடும். ஆனால் கடந்த வாரம் கரைத்துறைப் பற்று பிரதேச சபையில் என்ன நடந்தது? வடக்கில் அரசாங்கம் முதலாவது உள்ளூராட்சி சபையை கைப்பற்றியிருக்கிறது. அதற்கு என்ன காரணம்? சந்தேகத்துக்கிடமின்றி தமிழ் கட்சிகளுக்கு இடையிலான ஐக்கியமின்மைதான் முதலாவது காரணம். அந்த ஐக்கியமின்மையை சரிசெய்யத் தேவையான தலைமைத்துவம் தமிழரசுக் கட்சியிடம் இல்லை என்பதுதான் இரண்டாவது காரணம்.

சிதறிக் கிடக்கும் தமிழ்த்தேசிய கட்சிகளை ஒன்றிணைப்பதற்கு கடந்த ஓராண்டுக்கு மேலான காலப்பகுதியில் அதாவது ஜனாதிபதி தேர்தலுக்குப் பின் மூன்று முயற்சிகள் எடுக்கப்பட்டன. முதலாவது, தமிழ் தேசிய மக்கள் முன்னணி முன்னெடுத்த நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒன்றாக்கும் முயற்சி. தமிழரசுக் கட்சி அதைத் தோற்கடித்தது. இரண்டாவது, தமிழ்த்தேசியப் பேரவை என்ற பெயரில் கட்சிகளை ஒருங்கிணைக்கும் முயற்சி. அதுவும் இப்பொழுது ஏறக்குறைய தோற்கும் நிலைக்கு வந்துவிட்டது. மூன்றாவது அண்மையில் தமிழரசுக் கட்சியும் டிரிஎன்ஏயும் சந்தித்து மாகாண சபைத் தேர்தல்களை ஒன்றாக எதிர்கொள்வைத்தற்கான பேச்சுவார்த்தை. ஆனால் அந்த ஒற்றுமை முயற்சிகள் எவ்வளவு தூரம் வெற்றி பெறும் என்பதற்கு கரைத்துறைப் பற்று பிரதேச சபை ஓர் ஆகப் பிந்திய உதாரணமாக அமையுமா? தேர்தலை நோக்கி உருவாக்கப்படும் கூட்டுக்கள் நிலைத்திருக்காது என்பதைத்தான் கடந்த 16 ஆண்டுகளும் நிரூபித்திருக்கின்றன.

எனவே தமிழ்த் தேசிய நோக்கு நிலையிலிருந்து பார்த்தால் ஆண்டு தொடங்கும் போது இருந்த அதே கட்சி நிலைமைகள்தான் ஆண்டு முடியும் போதும் காணப்படுகின்றன. மே 18ஐ நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் கிராமம் அமைந்திருக்கும் கரைத்துறைப் பற்று பிரதேச சபையைத் தக்கவைக்க முடியாத தமிழ் கட்சிகள் இனிமேல் மாகாண சபைத் தேர்தல் ஒன்று நடந்தால், அதில் ஒன்றாக நின்று அரசாங்கத்தை எதிர்கொள்ளும் என்று எப்படி நம்புவது?

இந்த ஆண்டு பிறந்த போது ஒருபுறம் அனுர அலையின் விளைவுகளால் தமிழ் தேசிய அரசியல் சேதத்துக்கு உள்ளாகியிருந்தது. அதேசமயம் இன்னொருபுறம் யாரும் எதிர்பாராமல் திறக்கப்பட்ட செம்மணி மனிதப் புதைகுழியானது தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு புதிய அனைத்துலக வாய்ப்புகளைத் திறந்துவிட்டது. மனிதப் புதைகுழி என்பது உணர்வு பூர்வமானது. அது உள்ளூரில் மக்களைத் திரட்ட உதவும். இன்னொரு புறம் பொறுப்புக்கூறும் விடயத்தில் உலக சமூகத்துக்கு எடுத்துக் காட்டத்தக்க ஆகப்பிந்திய உதாரணமாகவும் அது அமைந்தது. அதன் காரணமாகத்தான் ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் செம்மணிக்கு வர வேண்டியிருந்தது. ஆனால் ஐநா செம்மணிக்கூடாக பொறுப்புக்கூறலை அணுகவில்லை என்பதைத்தான் கடைசியாக நிறைவேற்றப்பட்ட ஐநா தீர்மானம் உணர்த்துகின்றது. அதாவது தமிழ் மக்கள் ஐநாவில் பலமாக இல்லை என்பதைத்தான் அது உணர்த்தியது.


உள்நாட்டிலும் தமிழ் மக்கள் பலமாக இல்லை அனைத்துலக அளவிலும் தமிழ் மக்கள் பலமாக இல்லை. ஆண்டு பிறந்த போதும் பலமாக இல்லை. ஆண்டு முடியும்போதும் பலமாக இல்லை. இந்த ஆண்டின் ஆகப்பிந்திய தோல்வி கரைத்துரைப் பற்று பிரதேச சபை. ஒரு புயலுக்கு பின்னரான அரசியலில், தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்தில் ஆதீனத் தலைவரும் உட்பட பல போராட்டக்காரர்கள் மீது பலப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட நாளுக்கு அடுத்த நாள் அதிலும் குறிப்பாக, இந்திய வெளியுறவு அமைச்சர் கொழும்புக்கு வருகை தந்த அதே நாளில், வடக்கில் முதலாவது பிரதேச சபையை தமிழ் தேசியத் தரப்பு அரசாங்கத்திடம் இழந்திருக்கிறது.

அரசாங்கம் புயலுக்கு பின் முன்னரைவிடப் பலமாகக் காணப்படும் ஓர் அரசியல் சூழலில் தமிழ்த் தேசியத் தரப்புக்கு ஏற்பட்ட தோல்வி இது. ஆண்டின் முடிவில் நாட்டைத் தாக்கிய புயலின் விளைவாக ஒரு மனிதாபிமானச் சூழல் உருவாகியது. அந்த மனிதாபிமானச் சூழலை ஜேவிபி உள்நாட்டில் கிராமங்கள் தோறும் நிவாரண அரசியலாக, தொண்டு அரசியலாக திட்டமிட்டுக் கட்டமைத்தது. அதன்மூலம் எதிர்க்கட்சிகளை பெருமளவுக்கு பலவீனப்படுத்தியது. ஆண்டு தொடங்கும்போது பலவீனமாக இருந்த எதிர்க்கட்சிகள் இடையில் நுகேகொட பேரணிமூலம் தலையெடுக்க முயற்சித்தன. ஆனால் புயல் வந்து அரசாங்கத்தை மீண்டும் பலப்படுத்தி விட்டது.



புயலுக்குப் பின்னரான மனிதாபிமானச் சூழலை தன்னைப் பலப்படுத்துவதற்கும் எதிர்க்கட்சிகளை பலவீனப்படுத்துவதற்கும் கெட்டித்தனமாகப் பயன்படுத்துகின்றது. ஆனால் இந்த அசாதாரண மனிதாபிமானச் சூழலை அரசாங்கம் இனவாதத்துக்கு எதிராக கட்டமைக்கவில்லை. அவ்வாறு கட்டமைக்கும் என்று நம்பத்தக்கதாக தேசிய மக்கள் சக்தியின் கடந்த ஓராண்டு காலம் அமையவில்லை.





அண்மையில் உலகளாவிய 120 நிபுணர்கள் அடங்கிய குழு வெளியிட்ட அறிக்கை அதைக் காட்டுகிறது. கடனை மீளக்கட்டமைக்கும் விடயத்தில் அரசாங்கத்துக்குச் சாதகமாக முடிவெடுக்குமாறு அந்த அறிக்கை கேட்டிருக்கிறது. அதாவது புயலுக்கு பின்னரான மனிதாபிமான அலை என்பது உள்நாட்டில் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளை கடந்து போவதற்கு அரசாங்கத்துக்கு உதவுகிறது. அனைத்துலக அளவில் கடனை மீளகட்டமைக்கும் நெருக்கடியிலிருந்து விடுபட உதவியிருக்கிறது.

புயலின் பின்னரான மனிதாபிமானச் சூழலுக்குள் முதலில் இறங்கியது இந்தியா. அதிகமாக உதவியதும் இந்தியா. இயற்கை அழிவு ஒன்றுக்குப் பின்னரான இலங்கைத் தீவின் அரசியலில் இந்தியா தன்னுடைய பிடியை மேலும் பலப்படுத்தியிருக்கிறது.

இப்பொழுது தொகுத்துப் பார்க்கலாம். இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்தது அனுர அலை, அது மூன்றில் இரண்டு பெரும்பான்மை. இந்த ஆண்டின் முடிவில் இருப்பது மனிதாபிமான அலை. அது இலங்கை அரசாங்கத்தைப் பலப்படுத்தும் அலை. எதிர்க்கட்சிகளை மேலும் வாயடைக்கச் செய்யும் அலை. இந்த இரண்டு அலைகளுமே எதிர்கட்சிகளை மட்டுமல்ல தமிழ்த்தேசியக் கட்சிகளையும் பலவீனப்படுத்தியிருக்கின்றன.

புயலுக்குப் பின்னரான மனிதாபிமான அலையின் பின்னணியில், தமிழ்த் தேசியப் பேரவை தமிழகத்தை நோக்கிச் சென்றது. தமிழரசுக் கட்சியும் டிரிஎன் ஏயும் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தை நோக்கிச் சென்றன. ஆனால் தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்தியாவை நோக்கிச் சென்ற அதே காலகட்டத்தில், இந்தியா கொழும்பை நோக்கி அதன் வெளிவிவகார அமைச்சரை அனுப்பியது. தமிழ்க் கட்சிகள் இந்திய வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்தபோது ஒருமித்த நிலைப்பாட்டோடு இருக்கவில்லை என்பதைத்தான் பின்னர் வெளிவந்த அறிக்கைகள் காட்டுகின்றன.

அதிலும் குறிப்பாக இந்திய வெளிவகார அமைச்சர் கொழும்புக்கு வந்த அதே நாளில்தான் கரைத்துறைப் பற்று பிரதேச சபையை தமிழ்க் கட்சிகள் அரசாங்கத்திடம் பறி கொடுத்தன. எனவே இந்த ஆண்டு முடியும் போது தமிழ் மக்களின் உடனடி பிரச்சினைகளுக்கும் இந்த அரசாங்கம் தீர்வைத் தரவில்லை. உதாரணமாக, அரசியல் கைதிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படவில்லை அதற்குப் பதிலாக புதிய சட்டம் வருகிறது. சிங்கள பௌத்தமயமாக்கல், நிலப்பறிப்பு போன்ற பெரும்பாலான உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கவில்லை. திருமலையில் அண்மையில் வைக்கப்பட்ட புத்தர் சிலை வைக்கப்பட்ட இடத்திலேயே இருக்கிறது. அதாவது தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கவில்லை. நிரந்தரப் பிரச்சனைக்கும் பேச்சுவார்த்தைகள் தொடங்கவில்லை.

அதேசமயம் ஆண்டின் இறுதியில் வீசிய புயல் அரசாங்கத்தைப் பலப்படுத்தியிருக்கிறது. அது எதிர்கொள்ளக் கடினமான பிரச்சினைகளையும் வாக்குறுதிகளையும் ஒத்திவைப்பதற்கு வேண்டிய அவகாசத்தை அரசாங்கத்திற்கு வழங்கியிருக்கிறது.

கடந்த மூன்று தசாப்த காலத்துக்குள் ஏற்பட்ட இரண்டாவது இயற்கைப் பேரிடர் ஒன்றுக்குப் பின்னரான மனிதாபிமான அலை இது. இந்த மனிதாபிமான அலையை, ஜேவிபியின் கிராமமட்ட வலையமைப்பு திட்டமிட்டு எதிர்க்கட்சிகளுக்கு எதிராகவும் அரசாங்கத்தை பலப்படுத்தும் நோக்கத்தோடும் கட்டமைத்து வருகிறது. ஜேவிபியின் கிராமமட்ட வலைப்பின்னலுக்கூடாக உள்ளூர் தொண்டர்களும் தன்னார்வலர்களும் இந்த மனிதாபிமான அலையைக் கட்டியெழுப்பினார்கள். இலங்கைக்கான ஐநாவின் வதிவிடப் பிரதிநிதி கூறுவதுபோல, இது ஓர் அசாதாரணமான சகோதரத்துவநிலைதான்.

ஆனால் இதே போன்றதொரு மனிதாபிமான அலை 2004ஆம் ஆண்டு சுனாமிப் பேரழிவின் பின்னரும் தோன்றியது. அப்பொழுது யுத்த நிறுத்தம் நிலவியது. எனவே அது நாடு முழுவதுமான ஒரு மனிதாபிமான அலையாகக் காணப்பட்டது. அந்த மனிதாபிமானச் சூழலை அரசியல் தீர்வு ஒன்றுக்கான சாதகமான நிலைமைகளைக் கனியவைப்பதற்கான ஒரு சூழலாக மாற்றலாமா என்று பரிசோதிப்பதற்கு அப்பொழுது சமாதானத்தை முன்னெடுத்த மேற்கு நாடுகள் முயற்சித்தன. அதன் விளைவாக உருவாக்கப்பட்ட மனிதாபிமானக் கட்டமைப்புத்தான் சுனாமிக்கு பின்னரான பொதுக் கட்டமைப்பாகும். அந்தக் கட்டமைப்பு வெற்றிகரமாக இயங்கி இருந்திருந்தால் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு பரிசோதனைக் கட்டமைப்பாக அது அமைந்திருக்கக்கூடும். ஒரு மனிதாபிமானச் சூழலை அவ்வாறு அரசியல் உள்நோக்கத்தோடு பயன்படுத்த மேற்கு நாடுகள் முயற்சித்தன. முதற்கட்டமாக அதில் வெற்றியும் அடைந்தன. அரசாங்கமும் விடுதலைப்புலிகள் இயக்கமும் சுனாமி பொதுக் கட்டமைப்புக்கு இணங்கின.

ஆனால் அந்த மனிதாபிமானச் சூழலுக்குள் இனவாத அலையைத் தூண்டிய ஜேவிபி அதைத் தோற்கடித்தது. சுனாமிக்குப் பின்னரான ஒரு மனிதாபிமானச் சூழலை இனவாதத்தின் மூலம் தோற்கடித்த அதே இயக்கத்தை அடித்தளமாகக் கொண்ட இப்போதுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது, புயலுக்குப் பின்னரான மனிதாபிமானச் சூழலை தன்னைப் பலப்படுத்துவதற்கும் எதிர்க்கட்சிகளை பலவீனப்படுத்துவதற்கும் கெட்டித்தனமாகப் பயன்படுத்துகின்றது. ஆனால் இந்த அசாதாரண மனிதாபிமானச் சூழலை அரசாங்கம் இனவாதத்துக்கு எதிராக கட்டமைக்கவில்லை. அவ்வாறு கட்டமைக்கும் என்று நம்பத்தக்கதாக தேசிய மக்கள் சக்தியின் கடந்த ஓராண்டு காலம் அமையவில்லை. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிபாடுகளில் இருந்து மீட்சிக்குமுன்னால் உள்ள நீண்ட இடர்மிகுபாதை!



- மீராசிறினிவாசன் -

டித்சராவுக்கு 12 நாட்களில் அன்று முதலாவது குளிப்பு.வெள்ளைச் சட்டை தனது பாட்டியாரின் மடியில் அமைதியாகபடுத்திருக்கும் அந்த இரு மாத ஆண் குழந்தையின் நெற்றியிலும் கன்னத்திலும் பெரியகறுப்புப் பொட்டுக்கள் கண்திருஷ்டி கழிப்பதற்காக. சூறாவளியினால் தனது கிராமம் நிர்முலம் செய்யப்பட்டுவிட்டதை அறியாத குழந்தைவருபவர்களை பார்த்து மகிழ்வுடன் அகலவாய் திறந்து சிரிக்கிறது.

அந்தகுழந்தையின் குடும்பம் இலங்கையின் கண்டிமாவட்டத்தில் ரஜதலவத்தை என்ற கிராமத்தைச் சேர்ந்தது. அயல் கிராமம் ஒன்றில் பௌத்த ஆலயம் ஒன்றில் சுமார் இருவாரங்களாக தங்கியிருக்கிறது. நவம்பர் பிற்பகுதியில் டித்வாசூறாவளியின் விளைவான அடைமழை, வெள்ளப் பெருக்கு மற்றும் மண்சரிவுகளுக்கு பிறகு அவர்கள் அங்கேதங்கியிருக்கிறார்கள். நீர் சுத்திகரிப்புநிலையங்கள் வெள்ளத்தில் மூழ்கியதால் சமைப்பதற்கோ குளிப்பதற்கோ குழாய்நீர் கிடையாது. ஒரேயொருமாற்று வழியாக கிணற்று நீரையும் சில சந்தர்ப்பங்களில் மழைநீரையுமே அவர்கள் பயன்படுத்துகிறார்கள்.

"எமது வீடுமண்ணுக்குள் சரிந்து இறங்கத் தொடங்கியது. தரையில் வெடிப்பு ஏற்பட்டதுடன் சுவர்கள் உடைந்துவீழ்ந்தன. நாம் அதிர்ஷ்டவசமாக உயிருடன் இருக்கிறோம்.எமது வீட்டுக்கு அண்மையாக உறவினர்களில் எட்டுப்பேர் மண்சரிவில் பலியாகி விட்டார்கள். மீட்புப் பணியாளர்களினால் இதுவரையில் மூன்று சடலங்களை மாத்திரமே மீட்டெடுக்கக் கூடியதாக இருந்தது. அதனால் ஆலயத்துக்கு வெளியே சிறியளவில் இறுதிச் சடங்கு ஒன்றைநாம் நடத்தினோம்" என்று தனது பேரக்குழந்தையைதாலாட்டிக் கொண்டு நந்திக்காகுமாரி கூறினார்.

சூறாவளியின் விளைவான பேரழிவினால் கண்டி மாவட்டத்திலேயே கூடுதல் எண்ணிக்கையானவர்கள் பலியாகியதாக பதிவாகியிருக்கிறது. இதுவரையில் நாடுபூராவும் இறந்ததாக கூறப்படும் 642 பேரில் 237 பேர் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இறுதியாக வெளியான விபரங்களின் பிரகாரம் இந்த மாவட்டத்தில் குறைந்தபட்சம் 73 பேரை இன்னமும் காணவில்லை.

நந்திக்காகுமாரியின் கிராமத்தைச் சேர்ந்த சுமார் 60 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 200 பேர் எப்போது எங்கேபோவது என்பது பற்றி நிச்சயம் எதுவும் இல்லாமல் ஆலயவளாகத்தில் தங்கியிருக்கிறார்கள். தனது உறவினர்களையும் மண்ணுக்குள்ளும் இடிந்து விழுந்த சுவருக்கும் கூரைக்குக் கீழும் பலிகொடுத்து விட்டு செய்வதறியாது நிற்கிறார்கள்.

அந்தபகுதியில் அத்தியாவசிய சேவைகளை மீண்டும் ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் தொடர்ந்தவண்ணம் இருக்கின்றன. தொடர்ந்து பெய்து வருகின்ற மழைசரிவான பகுதிகளில் மண்ணை இழக்கிக் கொண்டிருப்பதால் அந்தமுயற்சிகள் சிக்கலுக்கு உள்ளாகியிருக்கின்றன. மனிதசடலங்கள் எங்கே கிடக்கின்றன என்று தெரியாத நிலையில் பல அடுக்குகள் சகதிக்குள் மீட்புப்பணிகளை முன்னெடுப்பது பணியாளர்களுக்கு பெரும் கஷ்டமாக இருக்கிறது. அந்த பகுதியூடாக குறுகலான ஒரு பாதையை ஏற்படுத்துவதற்காக அகற்றப்பட்ட செங்கல நிறமண் இருமருங்கிலும் குவியலாக கொட்டப்பட்டுக் கிடக்கின்றன. அதனால் சுற்றவரவுள்ள மலைப்பகுதிகளை பார்ர்ப்பது கஷ்டமாக இருக்கிறது.

தற்காலிக மின்சார இணைப்புக்களையும் கைத்தொலைபேசி தொடர்புகளையும் வழங்குவதற்காக இலங்கை மின்சார சபை ஊழியர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். புதைந்து போயிருக்கும் முச்சக்கரவண்டி, சேதமடைந்தவான், பிணைந்தகம்பிகள், கிழிந்தது போனகரடிப் பொம்மை ஆகியவற்றின் பாகங்கள் மண்ணுக்குள்ளால் வெளியால் தெரிந்தன. கஷ்டப்பட்டுக் கட்டியெழுப்பிய வாழ்வினதும் வாழ்வாதாரக்களின் சிதைந்துபோன எச்சங்களாக அவை காட்சிதருகின்றன.

சூறாவளி இலங்கையின் மலைப்பகுதிகளில் சுமார் 1200 மண்சரிவுகளை ஏற்படுத்தியதாக ஐக்கியநாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் மதிப்பீடு ஒன்றின் மூலம் தெரியவந்திருக்கிறது. இடைக்கிடை பெய்கின்ற மழைக் குமத்தியில் அனர்த்த முகாமைத்துவநிலையம் தொடர்ந் தும் மண்சரிவுஎச்சரிக்கைகளைவிடுத்தவண்ணமிருக்கிறது.

"எமதுபகுதிபாதுகாப்பற்றதாகவே இன்னமும் இருக்கிறது என்றும் மண்சரிவு ஏற்படக்கூடிய ஆபத்து இருக்கிறது என்றும் எமக்கு கூறப்பட்டிருக்கிறது. அங்குதிரும்பிச் செல்லவேண்டாம் என்று எமக்கு எச்சரிக்கைசெய்யப்பட்டிருக்கிறது" என்று 65 வயதானரி. ஜி. நந்தாவதி கூறினார். அவரும் அந்த ஆலயத்தின் பிரார்த்தனை மண்டபத்தில் தங்கியிருக்கிறார். சிங்களம் பேசுபவரான அவர் மற்றைய இனத்தவர்களும் கலந்து வசிக்கின்றதனது கிராமத்தின் அயலவர்களிடம் இருந்துதமிழைப் பேசக் கற்றிருக்கிறார். மேற்காசியாவில் பணிப் பெண்ணாக வேலை செய்தவருடங்களில் கொஞ்சம் அராபிய மொழியையும் அவர் கற்றுக்கொண்டார்..

**அனுரதிசநாயக்க நிருவாகம் பாரதூரமான சவால்மிக்க பணியை எதிர்நோக்குகிறது. நாட்டை மீளக்கட்டியெழுப்புவதை அரசாங்கம் எவ்வாறு தீர்மானிக்கிறது, மக்கள் பிரிவினரில் எவரின் வாழ்வுக்கும் வாழ்வாதாரங்களுக்கும் முன்னுரிமை கொடுப்பதற்கு அது தீர்மானிக்கப்போகிறது என்பதிலேயே அரசாங்கத்தின் சொந்த அரசியல் விதியும் இலங்கையின் எதிர்காலமும் தங்கியிருக்கிறது.**

றியாத்தில் நான்குவருடங்கள் வேலை செய்து சம்பாதித்து சேமித்த பணத்தில் நந்தாவதி அடிப்படை உபகரணங்களுடன் கூடிய ஒரு அளவானவீட்டை கட்டியநந்தாவதி சுற்றாடலில் உள்ள சிறிய சிறிய தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்கிறார். 13 வருடங்களாக குவைத்தில் வீட்டுப் பணிப் பெண்ணாக வேலை செய்த மகளிடம் இருந்து உதவிகளை அவர் பெற்றுவந்தார்.

"எங்களிடம் இருந்த சகல பொருட்களும் போய்விட்டன. எதுவுமே மிஞ்சவில்லை. ஆனால், அந்த பொருட்களில் எதையும் நான் இப்போது விரும்பவில்லை. சலித்துப் போய்விட்டது. மீண்டும் வாழ்க்கையை முதலில் இருந்து தொடங்க வேண்டியிருக்கிறது. எனக்கு இப்போது தேவைப்படுவதெல்லாம் அடிப்படை உணவும் படுக்க ஒரு இடமுமேயாகும்" என்று நந்தாவதி கூறினார்.

சூறாவளியினால் படுமோசமாகப் பாதிக்கப்பட்ட இலங்கையை பொறுத்தவரை, முதலில் அவசரமீட்புப் பணிகளில் இருந்து மனிதாபிமான உதவிமற்றும் நிவாரணம் வரைக்குமான மாறுதலும் பிறகு நீண்டகாலஅடிப்படையிலான மீள்நிர்மாணமும் இலகுவானதாக இருக்கப்போவதில்லை. குடும்பங்களுக்கு புதிய வீடுகள் தொடக்கம் வீட்டுத் தேவைக்கான உபகரணங்கள் வரை பிரத்தியேகமான ஆனால் வேறுபட்ட தேவைகள் இருக்கின்றன. வாழ்க்கையில் ஏற்பட்ட உயிரிழப்புகள், சொத்துமற்றும் வாழ்வாதார அழிவுகளுக்கு பிறகு மீண்டெழ வேண்டுமானால் விரைவில் அவர்களுக்கு உறுதியான சமூகப் பாதுகாப்பு மற்றும் உணவுப் பாதுகாப்புடன் கூடிய புதிய தொழில்கள் தேவைப்படுகின்றன.

சூறாவளியின் தாக்கத்தை கிராமங்களில் மாத்திரமல்ல, பல நாட்களாக வெள்ளத்தில் மூழ்கியிருந்த நகரங்களிலும் காணக்கூடியதாக இருக்கிறது. நந்தாவதியின் வீட்டுக்கு மிகவும் அண்மையாக முன்னர் சந்தடிமிக்கதாக விளங்கிய கம்பளை நகரத்தில் வர்த்தகர்கள் சேதத்துக்குள்ளான பொருட்களை பிரதான வீதியோரமாக பரப்பிவைத்திருக்கிறார்கள். தண்ணீரில் நனைந்து சேதமடைந்த பாத்திரங்கள், தளபாடங்கள், அரிசி மற்றும் நறுமண மூட்டும் பொருட்கள் அடங்கியபைகள் வீதியோரமாக குவிக்கப்பட்டிருக்கின்றன. நாற்றம் தாங்க முடியாததாக இருக்கிறது.



பண இழப்பு திகைக்கவைக்கிறது.

உள்ளூர் மக்கள் வேதனையில் ஆழ்ந்திருப்பது மாத்திரமல்ல நடந்ததை நம்பமுடியாதவர்களாகவும் இருக்கிறார்கள். "இதைப் போன்று எதையும் எனது வாழ்நாளில் நான் கண்டதில்லை" என்று 80 வயதான எஸ்.எச்.ஆதம் கூறுகிறார். மண்சரிவு எச்சரிக்கைகளுக்கு மத்தியில் வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்ட ஏனைய குடும்பங்களுடன் நாவலப்பிட்டி நகருக்கு அண்மையாக ஒரு பள்ளிவாசலில் அவர் தற்காலிகமாக தங்கியிருக்கிறார்.

"கடுமையான மழைக்கும் சிலவெள்ளப் பிரச்சினைகளுக்கும் நாம் பழக்கப்பட்டிருக்கிறோம். ஆனால், இந்தளவு படுமோசமான அனர்த்தத்தை நாம் கண்டதில்லை. உண்மையில் ஏதோ மாறிவிட்டது" என்று காலநிலை செயற்பாட்டாளர்களின் பிரதான அக்கறையை எதிரொலிக்கும் வகையில் ஆதம் கூறினார்.

டித்வாசூறாவளி இலங்கை சந்தித்தபடுமோசமான இயற்கை அனர்த்தங்களில் ஒன்று. 2004 இந்து சமுத்திர சுனாமிக்கு பிறகு மீண்டெழுவதில் எதிர்நோக்கிய சவாலைவிடவும் கடுமையான சவாலை நாடு எதிர்நோக்கவேண்டியிருக்கும் என்று அபிவிருத்தி நிபுணர்கள் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

இலங்கையின் சனத்தொகையில் பத்து சதவீதமானவர்கள் - சுமார் 23 இலட்சம் பேர் - வெள்ளப்பகுதிகளில் வாழ்கிறார்கள் என்று ஐக்கியநாடுகள் அபிவிருத்திதிட்டம் மதிப்பிட்டிருக்கிறது. 11 இலட்சம் ஹெக்டேயர் நிலம் (இலங்கையின் நிலப் பரப்பில் சுமார் 20 சதவீதம்) வெள்ளத்தில் மூழ்கியதாகஅதன் புவியியல் ஆய்வு கூறுகிறது. 7, 20,000 கட்டிடங்களை வெள்ளம் சென்றடைந்திருக்கிறது. அதாவதுநாட்டின் 12 கட்டிடங்களில் ஒன்று என்ற விகிதத்தில் வெள்ளப் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறது.

300 க்கும் அதிகமானவீதிகளும் 40 முக்கியமான பாலங்களும் சேதமடைந்திருக்கின்றன. சுமார் 75 பில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டிருப்பதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்திருக்கிறது. நாட்டின் மின்சார இணைப்புக்களில் அரைவாசிக்கு மேற்பட்டவைசூறாவளி நாட்களில் சீர்குலைந்திருந்தன. இலங்கை மின்சாரசபையின் உட்கட்டமைப்புக்களில் 40 சதவீதமானவை சேதமடைந்திருக்கின்றன. ஐந்து இலட்சம் குடும்பங்களைச் சேர்ந்த 17 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் மதிப்பிட்டிருக்கிறது. 6,000 க்கும் அதிகமான வீடுகள் முழுமையாகவும் குறைந்தது ஒரு இலட்சம் வீடுகள் பகுதியளவும் சேதமடைந்திருக்கின்றன.

சேதத்தின் முழுமையான அளவு இன்னமும் மதிப்பிடப்படவில்லை என்கிற அதேவேளை, காணாமல் போனோரை தேடும் பணிகளை அதிகாரிகள் தொடருகிறார்கள். சாத்தியமான பகுதிகளில் இடிபாடுகளை அகற்றப்படுவதுடன் துண்டிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட சமூகங்களை இணைப்பதற்காக தற்காலிக பாலங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. இலங்கைக்காக அடுத்த நான்கு வருடங்களுக்கு நன்கொடையாக 35 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஐக்கிய நாடுகள் திரட்டவிருக்கிறது.

டித்வா சூறாவளி ஐந்து வருடங்களுக்குள் இலங்கை எதிர்நோக்கிய மூனாறாவது பெரிய பாதிப்பாகும் 2020 கொவிட், 2022

(தொடர்ச்சி 14ஆம்பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகண்ட வங்கதேச கனவும் இந்தியா - இந்து எதிர்ப்புவாதமும்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

வங்க தேசத்தில் தற்போது ஆளும் இடைக்கால ஆட்சியாளர்களுக்கே பெருந் தலையிடியாக இருக்கும் இந்த பிரச்சனையின் முடிவு பாரிய மாற்றங்களையே உருவாக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது நிலவி வரும் பதற்றமான சூழல் என்பது திடீரென ஏற்பட்ட ஒரு கொந்தளிப்பு அல்ல. இது மிகச்சரியாக திட்டமிடப்பட்டு அரங்கேற்றப்படும் ஒரு சீர்குலைவு ஆகும்.

இந்தியாவின் ஏழு மாநிலங்கள் வங்கதேசத்திற்கு சொந்தமானது என்ற கொல்லப்பட்ட ஹாடி ஒஸ்மானின் வாதம் என்பது இந்திய எதிர்ப்புன் உச்ச நிலையை குறிக்கிறது. ஆனாலும் ஒஸ்மான் யாரால் ஏன் கொல்லப்பட்டார் என்று இதுவரை தெரியவில்லை.

இந்திய எதிர்ப்பு பிரச்சாரம் காரணமாகவே இவர் கொலை செய்யப்பட்டதாக சந்தேகம் எழுந்துள்ளது. டாக்காவில் இளம் சமூக செயற்பாட்டாளர் ஷெரீப் ஒஸ்மான் ஹாடியின் கொலை வங்கதேசத்தில் இன்னும் ஒரு மக்கள் போராட்டமாக உருவெடுத்துள்ளது. அதிலும் அது இந்தியாவுக்கு எதிரான போராட்டமாக பரிமாணம் பெற்றுள்ளது. இதற்கு காரணம் இவர் இந்திய உளவு அமைப்பான 'றோ' கொலை செய்யப்பட்டதாக வங்கதேச அரசியல் தரப்பினால் பரவலாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டாகும்.

அத்துடன் இந்தியாவின் அருணாச்சலம், அசாம், மேகாலயா, மணிப்பூர், திரிபுரா, மிசோரம் ஆகிய வங்கதேசத்தை அண்டிய மாநிலங்கள் வங்கதேசத்திற்கு சொந்தமானவை என பிரச்சாரம் செய்து வந்தார். இந்த விடயம் சம்பந்தமான பிரச்சாரக் கூட்டத்துக்கு சென்று கொண்டு இருக்கையில் மோட்டார் சைக்கிளில் வந்து இருவரால் சுடப்பட்டு படுகாயம் அடைந்து சிங்கப்பூர் வைத்தியசாலையில் மரணமடைந்தார். இதனாலேயே ஒஸ்மானை கொலை செய்தமை, றோவின் நடவடிக்கை எனவும் வங்கதேச அரசியல் தரப்புகள் பரவலாக குற்றம் சாட்டுகின்றன. அத்துடன் இவரே முன்னைய பிரதமர் ஷேக் ஹசினாவை பதவி கவிழ்ப்பதற்கு தீவிரமாக செயல்பட்டவர் ஆவார். அத்துடன் அண்மைக்கால அரசியல் சூழலில் ஒரு முக்கிய செயற்பாட்டாளர் ஆவார்.




### இந்தியா - இந்து எதிர்ப்பு நிலை:


உண்மையில் இந்த வன்முறை ஆட்டத்தின் பின்னணியில் இருப்பவர்கள் வேறு. வன்முறைகள் மிகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களிலும், ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகவும் நிகழ்த்தப்படுகின்றன. சட்ட அமைப்புகள், வெளிநாட்டு உறவுகள் மற்றும் ஊடக கதையாடல்கள் என அனைத்தும் முன்கூட்டியே தயார் செய்யப்பட்டு, ஒருங்கமைக்கப்பட்ட பின்னரே இந்த தாக்குதல்கள் அரங்கேறியுள்ளன.

கடந்த வாரம் கொல்லப்பட்ட ஒஸ்மான் ஹாடி போன்ற இஸ்லாமியவாத செயல்பாட்டாளர்களின் மரணம் ஒரு தற்செயலான நிகழ்வு அல்ல. அவர் பிஎன்பி மற்றும் இடைக்கால அரசாங்கத்திற்கே அச்சுறுத்தலாகவும், யாராலும் கட்டுப்படுத்த முடியாத ஒரு சுதந்திரமான சக்தியாகவும் உருவெடுத்தார். அவரை அப்புறப்படுத்த வேண்டிய கட்டாயம் அதிகார மையங்களுக்கும் இருந்தது.

இந்த கொலையின் பின்னணி ஒரு அதிகார மேலாண்மைப் போரின் ஒரு பகுதியே ஆகும். கொலை செய்தவர்கள் இந்தியாவுக்கு தப்பி ஓடிவிட்டதாக கூறப்படும் கதைகள் என்பது உண்மை என்று கூறமுடியாது. இந்திய எல்லையில் நிலவும் பாதுகாப்பை மீறி இது சாத்தியமற்றது. இது பொது மக்களின் கவனத்தை திசைதிருப்ப உருவாக்கப்பட்ட ஒரு போலியான திசை திருப்பலாகும்.

ஆனாலும் இந்த வன்முறை மற்றும் குழப்பங்களால் அதிகம் பலன் அடையப் போவது இஸ்லாமிய தீவிரவாத 'ஜமாத்-இ-இஸ்லாமி' அமைப்புக்கள் மட்டுமே. அத்துடன் பிஎன்பி போன்ற கட்சிகள் பயத்தின் காரணமாக இந்த இஸ்லாமிய அடிப்படைவாத தீவிர சக்திகளுக்கு வழிவிட்டு ஒதுங்கியுள்ளன.

மற்றொரு முக்கிய விடயம், அமெரிக்கா மற்றும் வெளிநாட்டு சக்திகள் வங்கத்தேசத்தை தனது பிடியில் வைத்திருக்க விரும்புவதால், அவர்கள் ஜமாத் போன்ற அமைப்புகளுடன் மறைமுக தொடர்பில் உள்ளனர் என்றும் கூறப்படுகிறது. தெருக்களில் அதிகாரம் யாரிடம் இருக்கிறதோ, அவர்களே நாட்டை தீர்மானிக்கும் சக்தி



யாக உருவெடுத்து வருகின்றனர். இது ஒரு நீண்டகால திட்டத்தின் ஒரு பகுதியாகவே தெரிகிறது.

அத்துடன் ஊடகங்கள் மீதான தாக்குதல்கள், குறிப்பாக ஆங்கில மொழி ஊடகங்களை குறிவைத்து நடத்தப்படுவது ஒரு முக்கியமான சமிக்ஞை. 'டெய்லி ஸ்டார்' மற்றும் 'புரோதோம் ஆலோ' போன்ற ஊடகங்கள் அச்சுறுத்தப்படுவது, மாற்றுக் கருத்துக்களே இருக்கக்கூடாது என்பதற்காகத்தான்.

### வங்கதேசமும் இந்தியாவும்:

அமெரிக்கா மற்றும் சீனா போன்ற நாடுகளின் பின்னணி தங்களுக்கு இருப்பதாக கருதிக்கொண்டு, இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களை இணைக்கும் 'சிக்கன் நெக் காரிடார்' பகுதியை துண்டிப்போம் என்று வங்கதேசத் தீவிரவாத அமைப்புகள் முழக்கமிடுவது இந்தியாவின் பொறுமையை சோதிப்பதாகவே உள்ளது என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரவை தெரிவித்துள்ளது.


1971-ஆம் ஆண்டு பாகிஸ்தான் ராணுவம் நடத்திய கொடுங்கோல் ஆக்கிரமிப்பில் இருந்து வங்கதேசத்தை காப்பாற்றி, ஒரு தனி நாடாக உருவாக்கியது இந்திய ராணுவம் தான். ஆனால், இன்று அதே நாடு தனது 'தந்தையர் நாடான' இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு சவால் விடுக்கும் வகையில் செயல்பட்டு வருகிறது.

அதேசமயம் தூதரக ரீதியாக வங்கதேச உயர் ஆணையரை அழைத்து இந்தியா தனது கண்டனத்தை பதிவு செய்துள்ளது. ஆனாலும் வங்கதேச மண்ணில் வன்முறை குறையாதது இந்திய அரசுக்கு பெரும் தலைவலியாக மாறியுள்ளது. இதன் காரணமாக ராணுவ ரீதியான நடவடிக்கைகளின் அவசியத்தை வலியுறுத்துகிறது என்றும் சில இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

### இந்திய எதிர்ப்புவாதம் ஏன்?

இந்திய எதிர்ப்பு என்பது தற்போது அங்கு ஒரு புதிய அரசியல் அம்சமாக மாறியுள்ளது. எப்போதெல்லாம் வங்கத்தில் உள்நாட்டு பிரச்சினைகள் தீவிரமடைகிறதோ, அப்போதெல்லாம் இந்தியாவை தொடர்புபடுத்தி ஒரு உணர்ச்சிகரமான பிம்பத்தை உருவாக்கி, மக்கள் போராட்டங்களை திசைதிருப்பும் உத்தி கையாளப்படுகிறது என்பதை மறுக்க முடியாது.

வங்கதேச தெருக்களில் அதிகாரம் செலுத்தும் இஸ்லாமியவாத அமைப்புகள், ஒருகட்டத்தில் இடைக்கால யூனுஸ் அரசையே தூக்கியெறியும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன. இந்த அதிகார போட்டியில் சாதாரண மக்க





ளும், சிறுபான்மையினரும் இலக்காக்கப்படுவது கவலையளிக்கும் விடயமாகும். அவர்களின் பாதுகாப்பை பற்றிப் பேச அங்கு வலுவான தலைமை ஏதுமில்லை.

ஆனாலும் வங்கதேச இராணுவத்தின் நிலைப்பாடு என்ன என்பதுதான் மிகப்பெரிய கேள்வி. ஆனாலும் இராணுவத்திற்குள் பல்வேறு குழுக்கள் வெவ்வேறு பிரிவினருக்கு ஆதரவாக செயல்படுகின்றன. தேசியவாத சிந்தனை கொண்ட இராணுவத்தினர், நாடு முற்றிலும் தீவிரவாத சக்திகளின் கைகளுக்கு செல்வதை தடுப்பார்களா அல்லது அவர்களும் இந்த சீர்குலைவின் ஒரு பகுதியாக மாறுவார்களா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். தற்போதைய சூழலில், வங்கதேசம் ஒரு திட்டமிடப்பட்ட இஸ்லாமிய மயமாக்கலை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது என்பது வெளிப்படையாக தெளிவாகிறது

### மத நிந்தனை தண்டனைகள்:

வங்கதேசம் என்ற நாடு உருவானது இந்தியாவால் தான் என்பதை நாம் மறந்து விட முடியாது. ஆனால் கடந்த ஆண்டு அந்நாட்டில் முகமது யூனஸ் தலைமையிலான இடைக்கால அரசு பொறுப்பேற்றது முதல், இந்துக்கள் உள்ளிட்ட சிறுபான்மையினர் குறி வைக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த வார இறுதியில் திப்பு சந்திரதாஸ் என்ற இந்து மதத்தை சேர்ந்த சாதாரண தொழிலாளி, ஒரு சக ஊழியருடன் ஏற்பட்ட சாதாரண தகராறினால் 'மத நிந்தனை' செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு, பொதுவெளியில் கொடூரமாக எரித்து கொல்லப்பட்ட சம்பவம் உலகையே உலுக்கியுள்ளது.



இதேவேளை ஹாடியின் சகோதரி இருநூறு ஆண்டு ஆனாலும் இந்தியாவை அழிக்காமல் விடமாட்டோம் என்று கூறியுள்ளார். இந்த வன்முறைகளின் தொடர்ச்சியாக, இந்திய - வங்கதேச எல்லையில் பாரிய பதற்றம் உச்சகட்டத்தை எட்டியுள்ளது. இந்துக்கள் உள்பட சிறுபான்மையினர் இனி தாக்கப்பட்டால் வங்கதேசம் மீது ராணுவ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என இந்தியாவில் உள்ள இந்து அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றன.

திரிபுரா, மேகாலயா, அசாம் உள்ளிட்ட மாநிலங்களில் முழுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக திரிபுரா எல்லையில் எல்லைப் பாதுகாப்புப் படை மற்றும் இந்திய ராணுவம் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் வங்கதேசத்திலிருந்து சட்ட விரோதமாக ஊடுருவ முயன்ற தீவிரவாதிகள் மேகாலயா எல்லையில் பி.எஸ்.எப் நடத்திய துப்பாக்கி சூட்டில் கொல்லப்பட்டுள்ளனர்.

சர்வதேச எல்லையை மீறி இந்தியாவுக்குள் நுழைய முயல்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற தெளிவான செய்தியை இதன் மூலம் இந்தியா வழங்கியுள்ளது.

வங்கதேசத்தில் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா ஆட்சியில் இருந்த வரை இந்துக்கள், சீக்கியர்கள் மற்றும் பௌத்தர்கள் உள்ளிட்ட அனைத்து சிறுபான்மையினருக்கும் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டிருந்தது.

ஆனால், தற்போது அதிகாரத்தை கைப்பற்றியுள்ள இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகள் எதிர்வரும் **2026** பிப்ரவரி மாதம் நடைபெறவிருக்கும் தேர்தலை முன்னிட்டு மக்களை மத ரீதியாக பிளவுபடுத்த முயல்கின்றன.

### வங்கதேசம் மீது கை வைத்தால் பாகிஸ்தான் பதிலடி:

வங்கதேசத்தின் தன்னாட்சி அதிகாரத்தின் மீது இந்தியா கை வைத்தால், பாகிஸ்தானின் ஏவுகணைகள் சீறிப்பாயும் என பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியைச் சேர்ந்த இளையோர் பிரிவுத் தலைவர் காம்ரான் சயீத் உஸ்மானி பகிரங்க மிரட்டல் விடுத்துள்ளார்.

வங்கதேசத்தில் நிலவும் அரசியல் குழப்பங்களுக்கு மத்தியில், இந்தியா தனது 'அகண்ட பாரத' கொள்கையை அந்நாட்டின் மீது திணிக்க முயற்சிப்பதாக உஸ்மானி குற்றம் சாட்டியுள்ளார். இந்தியாவுக்கு எச்சரிக்கையாக, வங்கதேசத்தை இந்தியா தவறான எண்ணத்தோடு நோக்கினால், பாகிஸ்தான் ராணுவம் மற்றும் அதன் ஏவுகணைகள் தொலைவில் இல்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். பாகிஸ்தானும் வங்கதேசமும் அதிகாரப்பூர்வமாக ஒரு ராணுவக் கூட்டணியை உருவாக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். மேலும் பாகிஸ்தான் தனது ராணுவ முகாம்களை வங்கதேசத்திலும், வங்கதேசம் தனது முகாம்களை பாகிஸ்தானிலும் அமைத்துக் கொள்ள வேண்டும். இது இரு நாடுகளின் பாதுகாப்பையும் பலப்படுத்தும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழிபாடுகளில்...

12ஆம் பக்கத் தொடர்ச்சி...

பொருளாதார வீழ்ச்சிஆகியவற்றின் விளைவான பாதிப்புக்களுக்கு பிறகு இலங்கையின் வறிய தொழிலாளர் வர்க்கத்தவர், சிறிய உற்பத்தியாளர்கள், சிறிய மற்றும் நடுத்தரதொழில் முயற்சியாளர்கள் மீது சூறாவளி மீண்டும் ஒரு தடவை பெரிய சுமை வீழ்ந்திருக்கிறது.

அவர்களில் நீண்ட காலமாக பாகுபாட்டுக்கு உள்ளாக்கப்பட்டு, சமூகரீதியில் ஓரங்கட்டப்பட்டு பெரிதும் சுரண்டப்படுகின்ற மலையக தமிழர்கள் மீண்டும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சூறாவளியின் விளைவான மரணங்களின் உத்தியோகபூர்வ எண்ணிக்கை மாவட்ட அடிப்படையில் பிரிக்கப்பட்டிருக்கிறதேதவிர, இன அடிப்படையில் அல்ல. ஆனால், மத்திய மற்றும் ஊவாமாகாணங்களில் கண்டி, நுவரேலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் இருந்தே அதிக எண்ணிக்கையான மரணங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த மாவட்டங்கள் மலையக தமிழ் மக்களை பெருமளவில் கொண்டவை. மண்சரிவு ஆபத்தைக் கொண்ட தேயிலைத் தோட்டங்களில் மலையக தமிழர்கள் வேலை செய்கிறார்கள். அவர்களின் இடர்பாடுகள் இருநூற்றாண்டுகளுக்கு முன்னர் மூதாதையர்கள் தென்னிந்தியாவில் இருந்துகொண்டுவரப்பட்டகாலத்தில் இருந்து தொடருகிறது. இலட்சக் கணக்கானவர்கள் இன்னமும் காலனித்துவகால லயன் அறைக் குடியிருப்புகளிலேயேநெருக்கமாக வாழ்கிறார்கள். அந்த குடியிருப்புகளுக்கு வீதிகளோ குழாய் நீர் இணைப்புகளோ கிடையாது. சுகாதாரவசதிகளும் போதுமானவை அல்ல. கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்புக்களும் குறைவு.

மண்சரிவினால் சேதமடைந்த தனது வீட்டை புனரமைப்புச் செய்வதற்கு சுமார் ஒருமில்லியன் ரூபா (3 இலட்சம் இந்தியரூபா) தேவை என்று கலைவாணி மதிப்பிடுகிறார். 35 வருடங்களாக தேயிலைத் தோட்டங்களில் கஷ்டப்பட்டுவேலை செய்த அவர் அந்த துறையில் வேலை செய்பவர்களுக்கு எதிர்காலம் மிகவும் கஷ்டமானதாக- நம்பிக்கையற்றதாக இருக்கப்போகிறது என்று கவலைப்படுகிறார்.

"எமது தோட்டங்களில் தேயிலைச் செடிகள் (கண்டியின் புறநகர்ப்பகுதிகளில் உள்ளவை) நன்றாகப் பராமரிக்கப்படுவதில்லை" என்று கலைவாணி கூறுகிறார். இந்த அக்கறையின்மை நியாய மற்றதும் சாத்தியமற்றதுமான வேலை இலக்குகளைக் கொண்ட தொழிலாளியின் தினச்சம்பளத்தில் நேரடியான பாதிப்பை ஏற்படுத்துகிறது. தேயிலைச் செடிகளில் கொழுந்து இல்லையென்றால் எம்மை வேலைக்கு கூப்பிடமாடடார்கள். வேலைக்கு கூப்பிடுகின்ற நாட்களில் கூட இலக்குகளைஅடையக்கூடிய அளவுக்குபறிப்பதற்கு போதுமான கொழுந்துகள் இருப்பதில்லை" என்றுஅவர் கூறுகிறார்.

பெருந்தோட்டக் கம்பனிகளினால் முன்னர் உறுதியளிக்கப்பட்ட சொற்ப சம்பளஅதிகரிப்பு பலதொழிலாளர்களைப் பொறுத்தவரை பெரும்பாலும் கடதாசியிலேயே இருக்கிறது. தங்களால் இயன்றவரை, கஷ்டப்பட்டு உழைத்தாலும் கூட தொழிலாளர்களினால் இலக்குகளை அடையக்கூடியதாக இருப்பதில்லை." எங்களது வேதனங்கள் அடுத்தவருடம் ஜனவரி முதல் உயரும் என்று ஜனாதிபதி கூறியிருக்கிறார். பொறுத்திருந்து பார்ப்போம்" என்று கண்டி தோட்டமொன்றைச் சேர்ந்த இன்னொரு தொழிலாளியான மகேஸ்வரி கூறினார்.

ஆனால், இந்த உறுதி மொழி நிறைவேற்றப்படும் என்று நம்புவதற்கு பெண் தொழிலாளர்கள் தயாராயில்லை. அவர்கள் பலவருடங்களாக சம்பள அதிகரிப்பு தொடர்பிலான பல உறுதி மொழிகளை கேட்டிருக்கிறார்கள். அரசாங்கங்களும் தலைவர்களும் மாறியிருக்கிறார்கள். ஆனால், உயர்ந்த உற்பத்திச் செலவுகள் மற்றும் சஞ்சலமான ஏற்றுமதிச்சந்தை ஆகியவற்றைக் காரணம் காட்டி சம்பள அதிகரிப்பை வழங்குவதை பெருந்தோட்டக் கம்பனிகள் தொடர்ந்து எதிர்த்துவருகின்றன. மறுபுறத்தில், தொழிலாளர்கள் தங்களது படுமோசமான வாழ்க்கை மற்றும் வேலைநிலைமைகள், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் அதிகரிக்கும் தொழிற்பாதுகாப்பின்மை ஆகியவற்றைச் சுட்டிக்காட்டுகிறார்கள்.

சூறாவளிக்குப் பிறகு இந்த பகுதியில் பலதோட்டத் தொழிலாளர்கள் வேலைக்கு அழைக்கப்படவில்லை. வேலைக்கு திரும்பிய தொழிலாளர்களிடம் இழக்கப்பட்ட வேலை நாட்களுக்கு இழப்பீடு வழங்கப்படுவது பற்றி எதுவும் கூறப்படவில்லை. வேலை நாட்கள் இழக்கப்பட்டதற்கு தொழிலாளர்கள் எந்தவிதத்திலும் காரணம் இல்லையே. சூறாவளி வீசுவதற்கு முன்னதாக அவர்கள் வெளிப்படுத்திய கவலைகள் மேலும் அதிகரித்திருப்பதையே காணக்கூடியதாக இருக்கிறது.

தாங்கள் செய்யாத தவறுக்காக விலைகொடுத்து தொழிலாளர்கள் சலித்துப் போய்விட்டார்கள். வெளிநாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்தமுடியாத நிலையில் 2022 ஆம் ஆண்டில் வங்குரோத்து நிலையை இலங்கை பிரகடனம் செய்த பிறகு கோட்டாபய ராஜபக்சஅரசாங்கம் முதல் தடவையாக சர்வதேசநாணய நிதியத்தை அணுகியது. ஏற்கெனவே 16 தடவைகள் கடனுதவிகளைவழங்கியஅந்தநிதியம் இலங்கையின் நீண்டகாலகடன் வழங்குநராக விளங்கிவருகிறது.

வெளிநாட்டுக் கடன்களையே திருப்பிச் செலுத்த முடியாதநிலையில் இலங்கை இருந்த போதிலும், உள்நாட்டுக் கடன்களையும் மறுசீரமைப்புச் செய்யுமாறு சர்வதேச நாணய நிதியம் கொழும்பைக் கேட்டது. எந்தவித முணுமுணுப்பும் இலாலாமல் அதை கொழும்பு செய்தது. இந்த நடவடிக்கை ஓய்வூதிய சேமிப்புநிதியின் பெறுமதியைக் குறைத்தது. அதனால் மலையகதமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள். அவர்களது ஒரேயொரு சேமிப்பும் இறுதியில் பெறுமதிகுறைந்து விட்டது.

"ஏற்பட்ட அழிவுகள் மற்றும் இன்னமும் இருக்கின்ற ஆபத்துக்கள் காரணமாக எமது வீடுகளுக்கு நாம் திரும்பிச்செல்ல முடியாது. ஆனால், நாம் செல்வதற்கு வேறு இடமும் இல்லை. எமதுபிள்ளைகள் பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்கு இனிமேலும் விரும்பவில்லை. அருகாமையில் உள்ள நகர்களில் கடைகளில் வேலை செய்வதற்கே அவர்கள் விரும்புகிறார்கள்" என்று 56 வயதானதனம் கூறுகிறார்.

நிச்சயமற்ற தன்மைக்கு மத்தியில் இளம் மலையகத் தமிழர்கள் நம்பிக்கை தராத நிகழ்காலத்துக்கும் அச்சுறுத்தும் எதிர்காலத்துக்கும் இடையில் அகப்பட்டிருக்கிறார்கள். உள்நாட்டில் நெருக்கடியில் இருந்துவிடுபடுவதற்காக ஆண்கள் குறைந்தசம்பளங்களுடனான வேலைகளுக்காக வெளிநாடுகளுக்கு செல்கிறார்கள். அதேவேளை பெண்கள் வீட்டுவேலைக் காரர்களாக வெளிநாடுகளுக்கு போகிறார்கள். அவர்கள் அனுப்பும் பணத்தொகை அரசகருவூலத்தை டொலர்களால் நிரப்பினாலும் அவர்களின் குடும்பங்களின் நிலைமையில் மாற்றம் எதுவும் ஏற்படுவதாக இல்லை.

சூறாவளி வீசியதற்கு சில நாட்கள் கழித்து ஜனாதிபதி திசநாயக்க மலையகத்தில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று சமூகங்களைச் சந்தித்துஅவர்களது பகுதிகளை மீளக்கட்டியெழுப்புவதில் அரசாங்கத்துக்கு இருக்கும் கடப்பாட்டை உறுதிப்படுத்தினார். துரிதநிதி நிவாரணத்துக்குபுறம்பாக ,உடனடியாக அவர்களின் வீடமைப்பு மற்றும் வாழ்வாதாரங்களுக்கு முன்னுரிமை கொடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டார்.

உணவுப் பாதுகாப்பின்மைப் பிரச்சினைகளுக்கு இலங்கை முகங்கொடுக்க வேண்டிவரலாம் என்பதால், இலங்கைக்கான மீட்சித் திட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு மாத்திரமல்ல, சிறுதோட்ட விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். சிறுதோட்ட விவசாயிகளையும் மீனவர்களையும் "இலங்கையின் உணவு முறைமையின் முதுகெலும்பு" என்றுவர்ணித்த (இலங்கையில் உணவு விவசாய நிறுவனத்தின் பிரதிநிதியாக இருக்கும்) விமலேந்திரசரண், அவர்கள் மீண்டும் உற்பத்திக்குவிரைவாகதிரும்ப வேண்டியது அவர்களது சொந்த மீட்சிக்காக மாத்திரமல்ல, உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் கிராமிய பொருளாதாரங்களுக்கு ஆதரவளிப்பதற்கும் முக்கியமானதாகும் என்று கூறுகிறார்.

இலங்கை மீட்சிபெறுவதற்கு முன்னால் உள்ள சவால்களை சுட்டிக்காட்டும் பொருளாதார நீதிக்காக குரலெழுப்பும் செயற்பாட்டாளார்கள் அனர்த்தத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிப்பதற்கு செலவினங்களை அதிகரிக்க வசதியாகசர்வதேச நாணய நிதியத்துடனான செயற்திட்டத்தை மறுசீரமைக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றனர். வேறு பலமுயற்சிகளுக்கு மத்தியில், சமூகப் பாதுகாப்பை விரிவுபடுத்துவதும் பொதுவிநியோக முறைமை ஒன்றை அறிமுகப்படுத்துவதும் வறியவர்களை பாதுகாப்பதற்கு முக்கியமானது என்று அவர்கள் வாதிடுகிறார்கள்.

கட்டமைக்கப்பட்ட பாகுபாடுகளையும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். அனர்த்தத்தினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் பிரிவினர் வாழ்கின்ற பாதகமான இடச்சூழல்,உத்தியோக பூர்வதொடர்பாடல்களில் இருந்து புறக்கணிக்கப்படுதல் (பல முன்னெச்சரிக்கை அறிவிப்புக்கள் சிங்களத்தில் மாத்திரமே வெளியிடப்பட்டதால் தமிழ்பேசும் சமூகத்தவர்கள் நேரவிருந்த ஆபத்தைப் பற்றி எதுவும் அறியாதவர்களாக இருந்தார்கள்), சூறாவளி கடந்து சென்ற பிறகு வாழ்வாதாரங்களை மீளவும் ஆரம்பிப்பதில் உள்ள இயலாமை ஆகியவற்றின் மூலம் இந்த கட்டமைக்கப்பட்ட பாகுபாடு வெளிப்படுகிறது. சில குடிமக்கள், பெரும்பாலும் வறியவர்கள் மற்றையவர்களின் மீட்சிக்கான செலவைப் பொறுத்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்பதை இலங்கையில் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற ஒவ்வொரு நெருக்கடியும் வெளிக்காட்டியிருக்கிறது.

முன்னைய அரசாங்கம் சர்வதேச நாணயநிதியத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கையை (சிக்கன நடவடிக்கைகளின் விளைவாக சாதாரணமக்கள் மீது திணிக்கப்பட்ட வேதனையைக் குறைப்பதற்காக) மீள் பேச்சுவார்த்தைக்குஉட்படுத்தப் போவதாக ஜனாதிபதி திசநாயக்கவின் தேசியமக்கள் சக்தி கூட்டணி கடந்த வருடத்தைய தேர்தல்களுக்கு முன்னதாக வாக்குறுதியளித்தது. ஆனால், பதவிக்கு வந்து ஒரு வருடத்துக்கும் அதிகமானகாலம் கடந்துவிட்ட போதிலும், அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் இருந்து விலகிச் செல்லவில்லை. அதற்காக வாஷிங்டன் தேசியமக்கள் சக்தி அரசாங்கத்தை பெரிதும் பாராட்டுகிறது.

அண்மை யவாரங்களில் மக்களுக்கு ஏற்பட்ட பேரளவு இழப்புக்கள் காரணமாக (சூறாவளி கரையைக் கடந்த சில நாட்களில் பாராளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்ட) அடுத்த வருடத்துக்கான தேசியபட் ஜெட்டில் மாற்றம் எதையும் செய்யவேண்டும் என்று அரசாங்கம் சிந்திக்கவில்லை. அத்துடன்,அனர்த்தத்தின் விளைவான பாதிப்புக்களை கையாளுவதற்கு சர்வதேசநாணய நிதியத்திடம் இலங்கை மேலதிகமாக 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை கேட்டிருக்கிறது.

திசநாயக்க நிருவாகம் பாரதுரமான சவால்மிக்க பணியை எதிர்நோக்குகிறது. நாட்டை மீளக்கட்டியெழுப்புவதை அரசாங்கம் எவ்வாறு தீர்மானிக்கிறது, மக்கள் பிரிவினரில் எவரின் வாழ்வுக்கும் வாழ்வாதாரங்களுக்கும் முன்னுரிமை கொடுப்பதற்கு அது தீர்மானிக்கப் போகிறது என்பதிலேயே அரசாங்கத்தின் சொந்த அரசியல் விதியும் இலங்கையின் எதிர்காலமும் தங்கியிருக்கிறது. சூறாவளி கடந்து போய்விட்டது என்று ஒவ்வொரு குடிமகனும் உணருகின்றபோதே உண்மையான மீட்சி தொடங்கும்.

(தி இந்து)

## மண் மணம்...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதேசமயம் பிரிட்டனில் பழைமை மாறாத கிராமங்களை அப்படியே அவர்கள் பாதுகாத்து வருகிறார்கள். நான் பார்த்த பௌர்டன்-ஆன்-தி-வாட்டர் என்னும் கிராமத்தில் பழங்காலத்து வீடுகள் இன்றும் அடுத்தடுத்த தலைமுறையினரால் பாதுகாக்கப்படுகிறது. ஆவர்கள் எதையும் மாற்றவில்லை. எத்தகைய புதுமையும் புகுத்தவில்லை. பழைய வீடுகள், புல்வெளிகள், அருகே ஓடும் ஆறு, அந்த மரப் பாலம், பழைய தேவாலயம் எல்லாம் அப்படியே இருக்கின்றன. மண் வாசனையோடு அவர்கள் வாழ்கிறார்கள். அருகில் கடைகளோ, அங்காடிகளோ இல்லை. கொஞ்சம் இருட்டிய பின் போனால் அழுது வடிந்து கொண்டிருக்கிறது ஊர். அதுவே ஓர் அழகு. ஏதோ அக்காலத்தில் இருப்பதைப் போன்ற ஓர் உணர்வை ஏற்படுத்துகிறது.

அந்த இயற்கை அழகைக் காண சுற்றுலாப் பயணிகள் குவிகிறார்கள். மேலும், பௌர்டன்-ஆன்-தி-வாட்டர் மாதிரி கிராமம் என்பது இந்த கிராமத்தின் மையப் பகுதியை 1:9 என்ற சரியான விகிதத்தில் தத்ரூபமாக உருவாக்கப்பட்டுள்ள ஒரு 'மினியேச்சர்' நகலாகும். இது 1930-களில் உள்ளூர் கைவினைஞர்களால் கட்டப்பட்டது மற்றும் 1937-இல் திறக்கப்பட்டது. உண்மையான கிராமத்தைக் கட்டப் பயன்படுத்திய அதே தேனிறக் கற்கள் மற்றும் பாரம்பரிய முறைகளைப் பயன்படுத்தி இது கட்டப்பட்டுள்ளது. துல்லியமான விவரங்கள் மற்றும் வரலாற்று முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, இது பிரிட்டனின் கிரேடு இரண்டு பட்டியலில் இடம்பெற்ற 'ஒரே மாதிரி கிராமம்' என்ற தனித்துவத்தைப் பெற்றுள்ளது.

எல்லாவற்றிலும் மேலைநாட்டு நாகரிகத்தைப் பின்பற்றும் நாம், மாதிரி கிராமங்களை உருவாக்குவதிலும், இருக்கின்ற கிராமங்களைத் தக்க வைத்துக் கொள்வதிலும் கவனம் செலுத்தினால், நம் தொன்மையை வரும் சந்ததியினருக்கு விட்டுச் செல்லலாம். சிதையாத மண்வாசம் சற்றேனும் உள்ளுக்குள் இருக்கட்டும் வேர்கொண்டே வாழ்வதுதான் வாழ்வென்று இளைய மனம் உணர்ந்து கொள்ளட்டும் இந்த எழில்மிகு மண்ணின் வரம் தலைமுறை தாண்டி நிலைக்கட்டும். (தினமணி)

## நல்லாட்சியை நிலை...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கமோ அல்லது தலைவர்களோ நிரந்தரமில்லை. எந்தவொரு அரசாங்கத்தின் பதவிக்காலத்துக்கு அப்பாலும், செயற்படக்கூடியதாகவே நிறுவனங்கள் கட்டமைக்கப்படுகின்றன. அதிகாரத்தில் இருப்பவர்கள் வேறுவிதமாக செயற்படுகின்ற வேளைகளிலும் கூட மக்களின் நலன்களைப் பாதுகாக்கக் கூடியவையாக நிறுவனங்கள் இருக்கின்றன.

சுயாதீனமான நிறுவனங்களைப் பாதுகாப்பதும் மக்கள் என்ன காரணத்துக்காக வாக்களித்தார்களோ அதற்காக நீதியான சட்டங்களை இயற்றுவதும் அரசாங்கத்துக்கு இருக்கின்ற சவாலாகும். அந்த சவாலை சரியான முறையில் கையாளுவதற்கான சந்தர்ப்பமும் இந்த அரசாங்கத்துக்கு இருக்கிறது. அந்த கடமையை நிறைவேற்றினால் மாத்திரமே ஆளுமைகள் மற்றும் அரசியல் வட்டங்களுக்கு அப்பால் முறைமை மாற்றத்துக்கான உறுதிப்பாடு நிலைபெறக்கூடியதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளையார்...

தடை செய்திருந்தது.

எனினும் ஊர்வலங்கள், கடும் பிரயத்தனத்தின் மூலம் கடந்த ஆட்சிக்காலத்தில் அமைச்சின் அனுமதி பெற்று பிள்ளையார் ஆலயத்தின் கட்டுமானப் பணிகள் ஆரம்பித்தன.

இந்நிலையை சாதகமாக பயன்படுத்திய தொல்பொருள் திணைக்களம் அங்கிருந்த எண்கோண மண்டபத்தை தாம் புனரமைத்தால் மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கமாட்டார்கள் என்பதனை அறிந்து எண்கோண மண்டபத்தில் விகாரை அமைக்கும் பணியை மேற்கொண்டு வருகின்றது.

இதேவேளை குறித்த எண்கோண மண்டபம் இருந்த பகுதியில் இருந்து கடந்த காலத்தில் எண்கோண வடிவிலான சிவலிங்கம் ஒன்று மீட்கப்பட்டு அது எல்லப்பமருதன்குளம் குளக்கட்டு பகுதியில் கண்டெடுக்கப்பட்டு தற்போது எல்லப்பமருதங்குளம் பகுதியில் எழுந்தருளி இருப்பதாகவும் வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவித்து வரும் நிலையில் குறித்த மண்டபம் அமைந்திருந்த பகுதியிலேயே தற்போது விகாரை அமைக்கும் பணியை தொல்பொருள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. (அ)

## டக்ளஸ்...

டக்ளஸ் தேவானந்தா வுக்கு சட்ட ரீதியாக வழங்கப்பட்டமை உறுதி செய்யப்பட்டதை அடுத்து அவர் நேற்று முன் தினம் மாலை கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில் அவரை தடுத்து வைத்து விசாரிக்க குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (அ)

## சேத மதிப்பீடுகளை...

தரவுகள் தெரிவிக்கின்றன. இந்த வீடுகள் குறித்து விரிவான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு ஒரு வருடமேனும் செல்லும். இதனால் நிவாரணம் வழங்குவதில் தாமதம் ஏற்படக்கூடும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, சரியான நேரத்தில் உதவியை உறுதி செய்வதற்காக மதிப்பீடு இல்லாமல் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு வீட்டுக்கும் ஐந்து இலட்சம் ரூபா வீதம் நிலையான தொகையை வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இருப்பினும், முறையான சேத மதிப்பீட்டை மேற்கொள்ள விரும்பும் குடும்பங்கள் நிலையான கட்டணத்திலிருந்து விலகலாம் என்றும், சேதத்தின் மதிப்பிடப்பட்ட மதிப்பின் அடிப்படையில் இழப்பீடு வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

சேதத்தின் மதிப்பிடப்பட்ட மதிப்பு ரூ. 2.5 மில்லியன் அல்லது ரூ. 5 மில்லியனாக கூட இருந்தாலும் அரசாங்கம் அதற்கேற்ப முழு மதிப்பிடப்பட்ட தொகையையும் வழங்கும் எனவும் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். (அ)

## இலங்கையில்...

எதிர்நோக்குகிறது. அதேநேரம், பல குடும்பங்கள் உணவைக் குறைப்பது போன்ற உத்திகளை நாடுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அவசரகால...

சேவையாற்றுவதற்கு தடையாக உள்ள காரணிகளை நிவர்த்தி செய்வதற்காகவே அச்சட்டம் வந்தது. எனவே, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதனை தவறாக எமது அரசாங்கம் பயன்படுத்தவில்லை.

கடந்த ஆட்சிகாலங்களில்தான் ஊடகங்களுக்கு எதிராக அடக்குமறை கட்டவிழ்த்துவிடப்பட்டன. எம்மீது ஊடகங்கள் விமர்சனங்களை முன்வைத்தால் கூட அவை பற்றி நாம் கவலை அடையமாட்டோம். ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்படும்." எனவும் அமைச்சர் லால்காந்த குறிப்பிட்டார். (அ)

## கல்வி...

என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில், யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்கள் மற்றும் கலைமன்றங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள், ஆற்றுகைப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையில் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

கல்விக்காக எமது சமூகம் பல்வேறு திட்டங்களை முன்னெடுக்கின்றது. முதலாம் ஆண்டு முதல் உயர்தரம் வரை தமது பிள்ளைகளுக்காக தாய்மாரும் மீண்டும் கல்வி கற்கின்றனர். தமது பிள்ளைகளை சிறந்த நிலைக்கு கொண்டு வருவதற்காக கஷ்ப்படுகின்றனர்.

கல்வியில் யாழ்ப்பாணத்துக்கென தனி இடம்-தனித்துவம் உள்ளது. சிறந்த கல்விமான்கள் உருவாகியுள்ளனர். எனவே, கல்வியில் நாம் பின்னடைந்துவிடக் கூடாது. இது விடயத்தில் எமது மாணவர்களுக்கும் பொறுப்பு உள்ளது.

அறிவு பசிக்கு கல்வியே சிறந்த தீர்வு. அதேபோல விளையாட்டு துறை தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டும். உடல் ஆரோக்கியத்துக்கு விளையாட்டு மிக முக்கியம். கல்வி, விளையாட்டுமூலம் ஆரோக்கியமான சமூகத்தை நாம் உருவாக்கும்போது போதைப் பொருள் தானாகவே அழிந்துவிடும். கல்வியில் பின்தங்கி இருப்பவர்களே கலாசார ரீதியிலும் பின்னடைந்து தவறான வழியில் செல்லும் நிலை காணப்படுகின்றது-என்றார். (அ)

# பூஸா சிறைச்சாலையில் 100 தொலைபேசிகள் மீட்பு

கொழும்பு, டிசெ. 28

கடுமையான குற்றவாளிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள பூஸா அதியுயர் பாதுகாப்பு சிறைச்சாலையில், இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 100இற்கும் மேற்பட்ட தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக் கையின் போது, பிரபல குற்றவாளிகளான லொக்கு பெட்டி, மிதிகம ருவன் மற்றும் தெமட்டகொட சமிந்த ஆகியோர் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக் கூடங்களுக்குள் இருந்தும் தொலைபேசிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சில தொலைபேசிகள் சிறைக் கூடங்களின் தரையினுள் புதைக்கப் பட்டிருந்தன.

சிறையில் இருந்தவாறே தொலைபேசி ஊடாக குற்றச் செயல்களை இவர்கள் வழிநடத்தி வருகின்றனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவித்தும், அதனைத் தடுப்பதற்கு அவர்கள் தவறியுள்ளதாக தெற்கு மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கித்சிறி ஜயலத் தெரிவித்தார்.

இந்தப் பின்னணியில், கடந்த 22, 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் சிறைச்சாலையின் அவசர கால மற்றும் தந்திரோபாய பிரிவினரும் இணைந்து விசேட தேடுதல் வேட்டையை நடத்தினர்.

இதன்போது, கணேமுல்ல சஞ்சீவ கொலைச் சம்பவத் தின் துப்பாக்கிதாரி என சந்தேகிக்கப்படும் சமிது தில்ஷானின் அறையிலிருந்தும் ஒரு தொலைபேசி மீட்கப்பட்டுள்ளது.

'குருல்லா' எனப்படும் அமில ஹிருஷ்லால் என்பவரின் அறையில் ஒன்றரை அடி ஆழத்தில் புதைக்கப்பட்டிருந்த நவீனரக தொலைபேசி, சார்ஜர் மற்றும் தரவு கேபிள் என்பன கண்டெடுக்கப்பட்டன.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட் டுள்ள நௌபர் மௌலவியின் அறையில் இருந்து இரண்டு வயர் துண்டுகள் மீட்கப்பட்டன.

கடந்த 84 நாட்களில் மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கைகளில் மொத்தம் 159 சிம் அட்டைகள், 110 சார்ஜர்கள் மற்றும் இணைய வசதிக்கான ரவுட்டர்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஊழல் நிறைந்த அதிகாரிகள் மூலமாகவே இவை சிறைச்சாலைக்குள் கொண்டு வரப்பட்டிருக்கலாம் என விசா ரணை அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (எ)

# கோர வீதி விபத்துக்களில் சிறுவன் உட்பட ஐவர் பலி!

கொழும்பு, டிசெ. 28

வெல்லம்பிட்டிய பகுதியில், கொழும்பிலிருந்து அவி சாவளை நோக்கிச் சென்ற ஓட்டோ ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பத்தில் மோதி விபத் துக்குள்ளானது. நேற்று முன்தினம் அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றது.

இதில், ஓட்டோவின் பின் இருக்கையில் பயணித்த 14 வயது சிறுவன் பலத்த காயமடைந்து கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் கடுவலை, கொத்தலாவல பகுதியைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நேற்று முன்தினம் மாலை லுணுவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தும்மோதர - போலவத்த வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து தொலைபேசி கம்பத்துடன் மோதி விபத்துக் குள்ளானது.

இதில், படுகாயமடைந்த 18 வயது இளைஞன் மாரவில மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார்.

இவர் மஹவெவ பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மித்தேனிய பொலிஸ் பிரிவுக் குட்பட்ட தலாவ, தெபொக்காவ பகுதியில் நேற்று முன்தினம் இரவு மோட் டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து வாய்க் காலுக்குள் வீழ்ந்ததில் அதனை செலுத்திச் சென்ற 31 வயது நபர் உயிரிழந்தார்.

மேலும், வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹெந் தல - எலகந்த வீதியில் நேற்று முன்தினம் அதிகாலை மோட்டார் சைக்கிள் ஒன்று செலுத்துநரின் கட்டுப்பாட்டை இழந்து கடையொன்றுடன் மோதியதில் பாரிய விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 21 மற்றும் 25 வயது இரு இளைஞர்கள் ராகம மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இருவரும் உயிரிழந்தனர்.

இவர்கள் இருவரும் வத்தளை பகுதியைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துகள் தொடர்பில் அந்தந்தப் பகுதி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

## உள்ளூராட்சி...

சபையின் வரவு-செலவுத் திட்டத்தில் அடுத்த ஆண்டுக்காக முன்வைக்கப்பட்ட பெருமளவிலான திட்ட முன்மொழிவுகள் உள்வாங்கப்பட்டிருந்தன என்றும், இந்த உள்ளூராட்சி மன்றங்களினூடாக மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய சேவைகளைச் சிறந்த முறையில் வழங்குவதற்காகவே இந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

அத்துடன், இந்த வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக திசைகாட்டிக்கு வாக்களித்தவர்கள் மாத்திரமன்றி, அனைவருக்கும் சலுகைகள் கிடைக்கும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அதன்படி, வரவு செலவுத் திட்டத்தைத் தோற்கடிப்பதற்கு உறுப்பினர்கள் வாக்களிப்பது, அவர்களை உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களாக்குவதற்கு வாக்களித்த மக்களுக்கு எதிராகச் செயற்படுவதாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியினர் எந்த நோக்கத்திற்காக உள்ளூராட்சி மன்றங்களின் வரவு செலவுத் திட்டங்களைத் தோற்கடிக்கின்றனர் என்பது கேள்விக்குரியது என தெரிவித்தார். (அ)

## மத்தள...

எடுக்கப்படமாட்டாது.

இந்த முன்மொழிவு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்படும். அதனைத் தொடர்ந்து விமான நிலையத்திற்கான விருப்பம் கோரல்கள் அழைக்கப்படும்.

அத்துடன், மத்தல விமான நிலையத்துடன் இணைந்து வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தற்போது வரை மூன்று தனியார் நிறுவனங்கள் விருப்பம் தெரிவித்துள்ளன-என்றார். (அ)

## 5000...

ஆய்வுகளின் முடிவுகளுக்கு அமைய இந்தத் தரவுகள் புதுப்பிக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

"டித்வா" புயல் காரணமாக நாடு முழுவதும் 1,200 இற்கும் மேற்பட்ட பாரிய நிலச்சரிவுகள் பதிவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதில் கண்டி, குருநாகல், மாத்தளை, கேகாலை, பதுளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களே அதிக பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

இதன்படி கண்டி மாவட்டத்தில் 363 பாரிய அளவிலான நிலச்சரிவுகளும், மாத்தளை மாவட்டத்தில் 162 பாரிய அளவிலான நிலச்சரிவுகளும், நுவரெலியா மாவட்டத்தில் 219 பாரிய அளவிலான நிலச்சரிவுகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஊடகங்களை அடக்கி ஒடுக்கி அரசு சர்வாதிகாரப் பயணம்!

## முன்னாள் எம்.பி. ஜகத்குமார

கொழும்பு, டிசெ. 28

அரசாங்கம் ஊடகங்களை ஒடுக்கி சர்வாதிகாரப் பயணத்தை ஆரம்பித்துள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத்குமார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனநாயகத்தின் பிரதான தூண் ஊடக சுதந்திரமாகும். ஊடகங்கள் மீது கை வைப்பது ஜனநாயகத்தைப் புதைப்பதற்குச் சமமாகும்.

அன்று எதிர்க்கட்சியில் இருந்தபோது ஜனநாயகத்தின் காவலர்களாகக் காட்டிக்கொண்டு ஊடக சுதந்திரத்தைப் பற்றிப் பேசியவர்கள், இன்று ஆட்சிக்கு வந்தவுடன் ஊடகவியலாளர்களையும் ஊடக நிறுவனங்களையும் கடுமையாக அச்சுறுத்தி வருகின்றனர்.

அரசாங்கத்தால் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியாமல் போனதன் விளைவாகவே, தமது தோல்விகளை மறைக்க ஊடகங்களை ஒடுக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

அரசாங்கத்தின் இந்த சர்வாதிகாரப் பயணத்தைத் தடுத்து நிறுத்தவும், ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தவும் அனைத்து ஊடகவியலாளர்களும் மக்களும் ஒன்றிணையவேண்டும்-என்றார். (அ)

# தற்போதைய அரசு ஊழல் நிறைந்தது!

## அக்மீமன தயாரத்தன தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 28

நாட்டை அழிவுப்பாதைக்கு கொண்டு செல்லும் ஊழல் நிறைந்த அரசாங்கமாக தற்போதைய அரசாங்கம் மாறியுள்ளதாக, லங்கா மக்கள் கட்சியின் தலைவர் அக்மீமன தயாரத்தன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய அரசாங்கம் பாரிய நெருக்கடிக்குள்ளாகி வருகின்றது. நாடு முழுவதும் பாரிய அளவிலான போதைப்பொருள் கடத்தல்கள் அதிகரித்துள்ளன. அதற்கு தற்போதைய அரசாங்கமே பொறுப்பு கூற வேண்டும். சில உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ளதாக அண்மைய செய்திகள் தெரிவிக்கின்றன.

கஞ்சா பயிர்ச்செய்கையின் பின்னணியிலும் இந்த அரசாங்கமே இருக்கின்றது. மற்றைய அரசாங்கங்களை விட இந்த அரசாங்கம் மிகவும் தூய்மையானது என்று மக்கள் எதிர்பார்த்தார்கள்.

ஆனால், வரலாற்றில் வேறு எந்த அரசாங்கமும் செய்யாத அளவிற்கு நாட்டை அழிவுப்பாதைக்கு கொண்டு செல்லும் ஊழல் நிறைந்த அரசாங்கமாக இந்த அரசாங்கம் மாறியுள்ளது-என்றார். (அ)

# கொழும்பு மாநகரசபையின் பாதீடு 31 ஆம் திகதி மீண்டும் சமர்ப்பிப்பு!

கொழும்பு, டிசெ. 28

கொழும்பு மாநகரசபையின் 2026 ஆம் நிதியாண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி மீண்டும் முன்வைக்கப்படவுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் ஆளுகையின்கீழுள்ள கொழும்பு மாநகர சபையின் முதலாவது வரவு- செலவுத் திட்டம் கடந்த 22 ஆம் திகதி முன்வைக்கப்பட்டது.

இதன்போது வரவு- செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 57 வாக்குகளும், எதிராக 60 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதற்கமைய மேலதிக 3 வாக்குகளால் பாதீடு தோற்கடிக்கப்பட்டது. இது தேசிய மக்கள் சக்திக்கு அரசியல் ரீதியிலான பின்னடைவு என கருதப்படுகின்றது.

இந்நிலையிலேயே சில திருத்தங்களுடன் வரவு- செலவுத் திட்டம் 2ஆவது தடவையாக 31 ஆம் திகதி முன்வைக்கப்படுகின்றது.

வாக்கெடுப்பின்போது வரவு- செலவுத் திட்டம் நிறைவேறும் எனவும், எதிரணி உறுப்பினர்கள் மனசாட்சியின் பிரகாரம் வாக்களிப்பார்கள் எனவும் கொழும்பு மேயர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ)

# கல்வி,விளையாட்டு, கலை துறைகளில் வடக்கு முதல் நிலை அடையவேண்டும்!

## மாகாண ஆளுநர் வேதநாயகன் வலியுறுத்து



யாழ்ப்பாணம், டிசெ. 28

இன்றைய மாணவர்கள் ஓய்வில்லாமல் ஓடிக் கொண்டிருக்கின்றனர். கல்வியில் மாத்திரமே கவனம் செலுத்துமாறு பெற்றோர்கள் அவர்களை நிர்ப்பந்திக்கின்றனர். ஆனால், கல்விக்கு அப்பால் கலையும் விளையாட்டும் மாணவர்களுக்கு இன்றியமையாதது. வடக்கு மாகாணம் முன்னரைப் போன்று கல்வி, விளையாட்டு மற்றும் கலை ஆகிய துறைகளில் மீண்டும் உன்னத நிலையை அடைய வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில், யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்கள் மற்றும் கலைமன்றங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள், ஆற்றுகைப் பொருட்கள் வழங்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களுள் ஒருவராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஆளுநர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது-

இளைய சமூகத்தினர் தமது ஓய்வு நேரங்களை கலை மற்றும் விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதை நாம் ஊக்குவிக்க வேண்டும். மாணவர்களுக்குப் போதிய ஓய்வு நேரங்களை உருவாக்கிக் கொடுத்து, அவர்களை இத் துறைகளில் ஈடுபடுத்தவேண்டும். அப்போதுதான் சமூகத்தில் அச்சுறுத்தலாக விளங்கும் போதைப் பொருள் பாவனை மற்றும் கலாசார சீரழிவுகளில் இருந்து எமது இளைய சமூகத்தைப் பாதுகாக்க முடியும். இன்று வழங்கப்படும் உபகரணங்களைப் பயன்படுத்தி உங்கள் திறமைகளை நீங்கள் மேலும் மேம்படுத்திக்கொள்ள வேண்டும்-என்றார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களுள் ஒருவராக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான இ. சந்திரசேகர் கலந்து சிறப்பித்தார்.

இதன்போது, யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 14 கலைமன்றங்களுக்கு ஆற்றுகைப் பொருட்களும், 100 விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களும் அதிதிகளால் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டன. (அ)

# எமது காணிகளை மீட்டுத் தாருங்கள்!

## நயினாதீவு நாக விகாரை விகாரதிபதியிடம் தையிட்டி காணி இழந்தவர்கள் கோரிக்கை



யாழ்ப்பாணம், டிசெ. 28

தையிட்டி விகாரைக்காக காணிகளை இழந்தவர்கள் நயினாதீவு நாக விகாரை விஹாரதிபதியை நேரில் சந்தித்து தமது காணி களை விடுவிப்பது தொடர்பில் கலந்துரையாடி உள்ளனர். யாழ்ப்பாணம் தையிட்டிப் பகுதியில் தனியார் காணிகளை கையகப்படுத்தி இராணுவத்தினரால் திஸ்ஸ விகாரை கட்டப்பட்டுள்ளது.

குறித்த விகாரையை அகற்றி அந்த காணிகளை தம்மிடம் ஒப்படைக்குமாறு காணி உரிமையாளர்கள் நீண்ட காலமாக போராட்டம் நடத்தி வருகின்றனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸ்ஸ நாயக்க ஜனாதிபதியாக பதவியேற்றதும் "மக்களின் காணி மக்களுக்கே .. " என கூறியதுடன் திஸ்ஸ விகாரைக்காக கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுவிப்பதாக உறுதி அளித்திருந்தார். ஜனாதிபதி பதவியேற்று ஒன்றரை வருடங்களுக்கு மேலாகியும் காணியில் ஒரு சிறு துண்டேனும் விடுவிக்கப்படவில்லை.

இந்நிலையில் நயினாதீவு நாக தீப விகாராதிபதி, தையிட்டி விகாரை அமைந்துள்ள காணி தனியார்களுடைய காண, அந்த காணியினை அவர்களிடமே மீள் அளிப்பதே அறம் என கூறி இருந்தார்.

அதனை அடுத்து, காணி உரிமையாளர்கள் விகாரதிபதியை சந்தித்து, தமது காணி உரிமை தொடர்பிலான ஆவணங்களின் பிரதியை கையளித்ததுடன், காணி விடுப்பை மேற்கொண்டு தருமாறு அவரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# முல்லைத்தீவு சிறுமியின் மரணம் குறித்து மத்திய சுகாதார அமைச்சும் விசாரணை

கொழும்பு, டிசெ. 28

முல்லைத்தீவு சிலாவத்தையில் சர்ச்சைக்குரிய முறையில் உயிரிழந்த சிறுமியின் மரணம் தொடர்பான விசாரணைக்கு, மத்திய சுகாதார அமைச்சும் தனது ஒத்துழைப்பை வழங்கியுள்ளது.

அதற்கமைய, மத்திய சுகாதார அமைச்சின் விசேட விசாரணை குழு ஒன்றை முல்லைத்தீவுக்கு அனுப்ப உள்ளதாக, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தனக்கு அறிவித்துள்ளதாக, வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சமன் பத்திரண தெரிவித்தார்.

இந்த நிலையில் மாகாணத்துக்குள் ஆரம்பிக்கப்பட்ட நிபுணர் குழுவின் விசாரணை அறிக்கை எதிர்வரும் ஒரு வாரத்துக்குள் கிடைக்குமென எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே, விசேட நிபுணர்கள் அறுவர் அடங்கிய குழு நேற்று முன்தினம் முல்லைதீவு மாவட்ட பொது மருத்துவமனைக்கு சென்று சிறுமியின் மரணம் தொடர்பான ஆரம்பகட்ட விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதேவேளை, இந்த சம்பவம் தொடர்பில் உரிய முறையில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அறியப்படுத்தாமை தொடர்பில், தெளிவுபடுத்தல் கடிதம் கோரப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

உணவு ஒவ்வாமை காரணமாக கடந்த 21 ஆம் திகதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 12 வயது சிறுமி திடீரென உயிரிழந்துள்ளார்.

சிறுமிக்கு உரிய முறையில் மருத்துவம் மேற்கொள்ளாமையாலேயே அவர் உயிரிழந்துள்ளதாக உறவினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ)

# வானுடன் மோதிய யானை உயிரிழப்பு

## இருவர் காயம்

திருகோணமலை, டிசெ. 28

ஹபரணை - திருகோணமலை பிரதான வீதியின் 124 ஆவது கிலோ மீற்றர் தூணுக்கு அருகில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் வான் ஒன்றுடன் காட்டு யானை மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் காயமடைந்த வான் சாரதியும் பெண் ஒருவரும் ஹபரணை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் சிக்கிய காட்டு யானை உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

கவுடுல்ல தேசிய பூங்காவிலிருந்து ஹுருலு சூழலியல் பூங்கா நோக்கி பிரதான வீதியை குறுக்கறுத்து செல்ல முயன்ற போதே, இந்த யானை வானுடன் மோதியதாக கவுடுல்ல வனவிலங்குதுறை அதிகாரிகள் தெரிவித்தனர்.(எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.12.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org